மொழியியல்

தொகுதி 2 மார்ச் – மே எண் 4

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
செ. வை. சண்முகம்
வ. ஞானசுந்தரம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1979

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

செயற்குழு

தலைவர்	டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் (மதுரை)
துணைத் தலைவர்	டாக்டர் முத்துச்சண்முகன் (மதுரை)
செயலாளர்	டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்)
பொருளாளர்	டாக்டர் ந. குமாரசாமி ராஜா (அண்ணாமலைநகர்)
உறுப்பினர்கள்	டாக்டர் மா. சு. திருமலை (மைசூர்)
	டாக்டர் பொன். கோதண்டராமன் (சென்னை)
	டாக்டர் சி சுப்பிரமணியம் (நாகர்கோயில்)
	டாக்டர் மோ. இசரயேல் (மதுரை)
	டாக்டர் கி. கருணாகரன் (அண்ணாமலைநகர்)

மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
ஆயுள் கட்டணம்	ரூ 200-00	US $ 50-00
ஆயுள் கட்டணம் (நிறுவனங்கட்கு)	ரூ 300-00	US $ 75-00
ஆண்டுக் கட்டணம்	ரூ 20-00	US $ 5-00
ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்கட்கு)	ரூ 30-00	US $ 7-50
ஆண்டுக் கட்டணம் (மாணவர்க்கு)	ரூ 10-00	

மள்ளர் கையதை கூர்வாள்

இரா. கோதண்டராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பகுதி – 1

ஐயென்கிளவி முன்னிலை ஒருமைப் பொருண்மையையும், வேற்றுமைப் பொருண்மையையும் உணர்த்தும் ஓர் இடைச்சொல் லாகவே மரபிலக்கணங்களில் நமக்கு அறிமுகமாகிறது. இவ்விரண்டு பொருண்மைகளுக்கு அப்பாலும் இவ்விடைச்சொல் பொருண்மை விளக்கத்துக்கு உரியது என்ற உண்மையை மரபுவழிப்பட்ட புலமை நமக்கு உணர்த்தியதாகத் தெரியவில்லை. பின்வரும் எடுத்துக் காட்டுக்களைக் கருத்தில் கொள்க

1. எமக்கு நீ யாரை?... (கலித்தொகை, 88.3)

2. கேளாய் வாழியோ மகளை! நின் தோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப அவனொடு
பெருமலை இறந்தது நோவேன் (அகம், 63 1–3)

3 செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந
சிறுவெள் ளருவிப் பெருங்கல் **நாடனே!**
நீவா ழியர்நின் றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே (புறம், 137.12-15)

4. இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் **கணவனை**
யானா கியர்நின் நெஞ்சு நேர்பவளே
(குறுந்தொகை, 49.3-5)

இந்நான்கனுள் முதல் எடுத்துக்காட்டில் **யாரை** என்பதில் நிகழும் ஐயென் கிளவி **ஆவாய்** என்பதன் பொருண்மையமைப்புக்கு உரிய தாகலின், அது வெறும் முன்னிலைப் பொருண்மையை மட்டுமே உணர்த்தும் இடைச்சொல் அன்று. அதன் பொருண்மையமைப்பு [இருப்பு + காலம் + முன்னிலை (+ ஒருமை)] எனக் குறிக்கத்தக்க தாகும். [இருப்பு] என்பது **இருத்தல்** என்பதனைக் குறிக்கும் ஓர் பொருண்மைக் கூறாகும். எடுத்துக் காட்டுக்கள் (2); (3)இல் நிகழும் **மகளை** (= மகளே!), **நாடனை** (= நாடனே!) ஆகியவற்றில் காணப்படும் ஐயென்கிளவி முன்னிலைப் பொருண்மையை மட்டும் உணர்த்தாமல் விளிப்பொருண்மையையும் உணர்த்துவதாகின்றது விளிப்பொருண்மை, முன்னிலைப் பொருண்மையை உள்ளீடாகக் கொண்டது. ஆகவே விளியைக் குறிக்கையில் முன்னிலையைக் குறிக்கத்தேவையில்லை இதனைக் கருத்தில் கொண்டு (2), (3)-இல் நிகழும் ஐயென் கிளவியின் பொருண்மையைப் [இருப்பு + விளி + [ஒருமை] அல்லது [விளி + [+ ஒருமை] எனக் குறிக்க லாம்[1] நான்காம் எடுத்துக்காட்டில் **கணவனை** என்பதில் நிகழும் ஐயென் கிளவி முன்னிலைக் கிளவியாக அமையாமல் ஆக/ஆய் என்பதற்கு நிகரான ஒன்றாகவே அமைவதாகத் தோன்றுகின்றது. குறுந்தொகை உரையாசிரியர் இதனைச் சாரியையாகக் கொள்வர். (பார்க்கவும்: குறுந்தொகை, உ. வே சாமிநாதய்யர் பதிப்பு). மரபு வழிப்புலமை மொழியின் சிறப்பியல்புகளை அறிந்து கொள்ளப் போதுமான அளவுக்குத் துணைபுரியவில்லை என்பதை மேலும் சில எடுத்துக் காட்டுக்கள் மூலம் உணர்த்தலாம்.

5. கொல்புனற் றளிரின் நடுங்குவனள் நின்றுநின்
எறியர் ஓக்கிய சிறுசெங் குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள் நீயெமக்கு
யாரை யோவெனப் பெயர்வோள் **கையதை**
(பதிற்றுப்பத்து, 52.21-24)

6. நகைசான்ற கனவன்று நனவன்று **நவின்றதை**
(பரிபாடல், 8.77)

7. **ஊர்ந்ததை,** எரிபுரை யோடை இடைஇமைக்கும்
சென்னிப் பொருசமம் கடந்த புகழ்சால் வேழம்
(பரிபாடல், 21.1 - 2)

இம்மூன்று எடுத்துக்காட்டுகளுள் **கையதை** என்பதில் நிகழும் ஐயென் கிளவிகய அசை நிலை எனப் பதிற்றுப்பத்து உரையாசிரியரும், பிந்திய இரண்டில் நிகழும் **நவின்றதை, ஊர்ந்ததை** ஆகியவற்றில் உள்ள ஐயென் கிளவியைப் **பகுதிப்பொருளது** எனவும் **பகுதிப் பொருள் விகுதி** எனவும் பரிபாடல் உரையாசிரியராகிய பரிமேலழகரும் குறித்துச் செல்வர். மரபு வழிப்புலமை கிட்டத்தட்ட அமைப்பு மொழியியற் கோட்பாட்டினை ஒத்துச் செல்வதால் மரபிலக்கணப் புலவர்களிடத்தில் ஆகட்டும் உரையாசிரியர்களிடத்தில் ஆகட்டும் மொழியின் தனித்தன்மையைப் புலப்படுத்தும் சிந்தனைகள் நாம் எதிர்பார்க்கமுடியாது. பல்வேறு பொருண்மைகளும், பொருண்மையமைப்புக்களும் மொழியில் எவ்வாறு வெளிப்பாடு பெறுகின்றன என்பதில் மரபுவழிப்புலமை அவ்வளவாக அக்கறை செலுத்துவதில்லை. மரபு வழிப்புலமையின் இலக்கணச் சிந்தனைகள் ஒரு நேர்முகவர்ணனைக்கு ஒப்பானதாகும். பார்வையில் பட்டுப் பழகிப் போனவைதான் இந்த வர்ணனையில் இடம் பெறும். பார்வையில் படாதவையும், பழக்கமில்லாதவையும் மரபு வழிப்புலமையால் அசைநிலையெனவும், பகுதிப் பொருள் விகுதி எனவும் ஒதுக்கப்பட்டு விடுகின்றன. இந்த ஒதுக்கலுக்கு ஐயென்கிளவி மட்டும் எப்படித் தப்பாமலிருக்கமுடியும்? ஒரு வரி வடிவம் நடைமுறையில் இருக்கிறதா இல்லையா என்பது நமக்கு முக்கியம் அல்ல. ஒரு குறிப்பிட்ட பொருண்மை அல்லது பொருண்மையமைப்பு எப்படியெல்லாம் வரிவடிவங்களாக வெளிப்

பாடுபெறுகின்றது. என்பதுதான் நமக்கு முக்கியம். இந்த வரிவடிவங்களில் சில வழக்கில் இருக்கலாம். சில வழக்கற்றுப் போயிருக்கலாம். இதுபற்றி நமக்குக் கவலையில்லை. மரபுவழிப் புலமையின் சிந்தனைப்போக்கு இந்தச் சிந்தனைப் போக்கிற்கு அப்பாற்பட்டது நமது நிலை மரபுவழிப் புலமையிலிருந்து மாறுபட்ட ஒன்றுகும். மரபுவழிப் புலமைக்கு அப்பால் நின்று, பகுதிப் பொருள் விகுதி எனவும், அசை நிலை எனவும் உரையாசிரியர் களால் குறிக்கப் பெறும் ஐயென்கிளவியின் பொருண்மையமைப் பினையும் பழந்தமிழில் அது எப்படியெல்லாம் திரிந்தமைந்தது என்பதையும் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பினைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களின் துணைகொண்டு கண்டறியலாம்.

8. ஏனலம் சிறுதினைச் சேணோன் **கையதைப்**
பிடிக்கை யமைந்த கனல்வாய்க் கொள்ளி
விடுபொறிச் சுடரின் மின்னியவர்
சென்ற தேஎத்து நின்றதால் மழையே (அகம், 73, 14-17)

9. போர்வேட் டெழுந்த மள்ளர் **கையதை**
கூர்வாட் குவிமுகம் சிதைய நூறி (அகம், 144, 14-15)

இவ்விரு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **கையதை** என்னும் குறிப்பு வினை **கையது+ஐ** என்ற அமைப்பினதாகிப் பெயரெச்சச் சொற் பாட்டினதாய் நிகழ்கின்றது. இவ்வமைப்பின் பொருண்மையமைப்பு **கையில் உள்ள தாகிய** என்ற பொருண்மையமைப்புடன் பொருந்து வதாகும். **கையதை** என்பதில் உள்ள **கையது** என்னும் குறிப்பு வினையமைப்பு **கையில் உள்ளது** என்பதனோடும், ஐயென்கிளவி **ஆகிய** என்பதனோடும் பொருண்மை நிலையில் பொருந்தி நிற்கின்றன. **கையில் உள்ளதாகிய** என்ற தொடரில் நிகழும் **உள்ளது, ஆகிய** என்ற இரண்டு வினையமைப்புக்களின் பொருண்மையமைப்புக்களும் முறையே **கையதை** என்பதில் நிகழும் **அது, ஐ** ஆகிய வடிவங்களின் மூலமாக வெளிப்பாடு பெறுகின்றன. இதன் மூலம் ஐயென்கிளவி **கையதை** என்னும் அமைப்பில் ஒரு வினையின் தகுதியுடன் செயல் படுவது புலனாகிறது. இந்த முடிபு **ஆகிய** என்னும் வினையமைப்

புக்கு உரியதாகிய [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப் புக்கு மேற்படி ஐயென்கிளவியையும் உரிமையாக்க வகை செய்கின்றது.

[இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகிய ஐயென்கிளவியாகிய வினை, சங்கப் பாடல்கள் தோன்றிய காலத்தில் வழங்கிய தமிழில் வழக்கற்றுப்போன ஒன்றாகக் கொள்ளத்தக்கதாகும். பழந்தமிழ் இலக்கியங்களில் இதன் நிகழ்ச் சியைப் பழமைச்சின்னத்தைப் போற்றும் பாங்கில் அமைந்த ஒன்றாகவே கருதவேண்டும். ஐயென் கிளவியின் செயற்பாடு வாக்கியச் சூழலுக்கேற்பப் பயனிலையாகவோ எச்சமாகவோ அமையும். இந்த வகையில் எடுத்துக்காட்டு (5)இல் நிகழும் **கையதை** என்பதில் அமைந்த ஐயென் கிளவியைக் கருத்தில் கொள்ளலாம். இவ்வெடுத்துக்காட்டில் **கையதை** என்னும் குறிப்புவினை பயனிலைச் செயற்பாட்டில் அமைந்த ஒன்றாகும். இதனை, **இரப்ப என்னும் செயவென் எச்சத்தினைக் கையதை என்னும் முற்றுவினைக் குறிப்போடு முடிக்க,** என்னும் உரையாசிரியரின் குறிப்புரையும் தெளிவுபடுத்துகின்றது. ஆனால் உரையாசிரியர் இந்த **முற்றுவினைக் குறிப்புக்குப்** பொருள் உரைக்கையில் ஐயென் கிளவியை அசைநிலை யாக ஒதுக்கிவிட்டு, **கையது** என்ற அமைப்பை மட்டுமே கருத்தில் கொண்டு **கையில் உள்ளது** என்று பொருள் குறித்துச் செல்கின்றார். இது மரபு வழிப்புலமைக்கு அமைந்த கோட்பாட்டின் குறைபாடாகும். எடுத்துக்காட்டுக்கள் (8), (9)இல் நிகழும் **கையதை** என்பதில் அமைந்த ஐயென்கிளவி **ஆகிய** என்ற வினையமைப்புக்கு நிகராய் அமைதலைக் கண்டோம். எடுத்துக்காட்டு (5)-இல் **கையதை** பயனிலையாய்ச் செயல்படுவதால் இந்தச் சூழலில் ஐயென்கிளவி **ஆயிற்று** அல்லது **ஆகிறது** என்ற வினையமைப்புக்கு நிகராகிப் பயனிலைச் செயற்பாட்டுக்கு உரியதாகின்றது. சற்று விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், எடுத்துக்காட்டு (5)-இல் பயனிலையாகச் செயல்படும் ஐயென்கிளவி, எடுத்துக்காட்டுக்கள் (8), (9)-இல் முற்றெச்சமாய் அமைந்த பெயரெச்சச் செயற்பாட்டினை மேற்கொள் கின்றது. பயனிலைச் செயற்பாட்டில் ஐயென்கிளவி மலையாளத்தில் நிகழும் **செய்யுந்நு, செய்யும்** வாய்ப்பாட்டுப் பொது வினைமுற்றுக் களைப் போன்றதாகையால், திணை-பால் - எண்-இடப்பொருண்மை

களுக்கு இதில் இடமில்லை. பயனிலைச் செயற்பாட்டிலாகட்டும், எச்சச் செயற்பாட்டிலாகட்டும் ஐயென்கிளவி ஒரு பொது வினையாகவே தொல்பழந் தமிழில் (அல்லது தொல் பழந்திராவிடத்தில்) நிகழ்ந்ததாகக் கருதலாம். குறிப்பிட்ட வினையமைப்பு பயனிலையாகவும், எச்சமாகவும் செயல்படும் நிலை தொல்காப்பியத்திலும், சங்கப்பாடல்களிலும் காணப்படுவதால், இத்தகைய நிலை தொல் பழந்தமிழில் (அல்லது தொல் பழந்திராவிடத்தில்) இருந்ததாக மீட்டுருவாக்கம் செய்யமுடியும். இத்தகைய ஒரு நிலையையே ஐயென்கிளவியின் செயற்பாடுகள் தெளிவுபடுத்துகின்றன.

ஐயென்கிளவி குறிப்பு வினை முற்றினை யடுத்துப் பயனிலையாகவும், எச்சமாகவும் நிகழும் பாங்கினை எடுத்துக்காட்டுக்கள் (5)-இலும் (8) மற்றும் (9)-இலும் கண்டோம். தெரிநிலை வினைமுற்றுக்களை அடுத்தும் ஐயென்கிளவி (இருப்பு + காலம்) என்ற பொருண்மையமைப்பினதாகி நிகழும் போக்கினைப் பழந்தமிழில் காணலாம்.

10. விருப்பொன்று பட்டவ ருளநிறை யுடைத்தென
வரைச்சிறை **யுடைத்ததை** வையை வையைத்
திரைச்சிறை யுடைத்தன்று கரைச்சிறை யறைகெனும்
உரைச்சிறைப் பறையெழ வூரொலித் தன்று
(பரிபாடல், 6. 21-24)

11. ... . நம்மூர்க் கெலாஅம்
ஆகுல மாகி **விளைந்ததை** என்றுந்தன்
வாழ்க்கை யதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.
(கலித்தொகை, 65, 26-29)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் அமைந்த **உடைத்ததை, விளைந்ததை** என்ற வினையமைப்புக்கள் **உடைத்தது, விளைந்தது** என்ற வினைகளுக்கு நிகராகவே பரிமேலழகராலும், நச்சினார்க்கினியராலும் கொள்ளப்படுகின்றன. **உடைத்ததை** என்பதில் நிகழும் ஐயென் கிளவியைப் பகுதிப் பொருள் விகுதியாகக் கொள்வர் பரிமேலழகர். இவ்விரு வினையமைப்புக்களிலும் நிகழும் ஐயென்கிளவி,

கையத்தை என்பதில் நிகழும் ஐயென் கிளவியினின்றும் வேறுபட்டதன்று. ஆகவே **உடைத்ததை, விளைந்ததை** ஆகிய வினைமுற்றுக்களும் முறையே **உடைத்ததாயிற்று, விளைந்ததாயிற்று** என விரிக்கத்தக்கனவாகின்றன இதன் மூலம் **உடைத்ததை, விளைந்ததை** ஆகியவற்றில் நிகழும் ஐயென்கிளவி **ஆயிற்று** என்ற வினைமுற்றின் பொருண்மையமைப்புக்கு உரியதாவதை அறியலாம். இவ்வினையமைப்புக்களில் நிகழும் ஐயென்கிளவி பொது வினையாதலால் இதன் பொருண்மையமைப்பு [இருப்பு + காலம்] என்றே அமையும். ஐயென்கிளவி தெரிநிலை வினைமுற்றுக்களையடுத்து நிகழும் நிலை பழந்தமிழில் வழக்கற்றுப் போயிற்றெனினும், அதன் பொருண்மையமைப்பு இயைபுப் பொருண்மையை உணர்த்தியும் உணர்த்தாமலும் பல்லுருபாக்க உத்தியின் மூலம் வினைமுற்று களை அடுத்து வெளிப்பாடு பெறுவதைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் புலப்படுத்தும்.

12. அவன் என்னை முன்னர் விரும்பிய பின்னர் நலத்தைச் **சிதைத்தான் ஆயினன்**

(கலித்தொகை, 142, நச்சினார்க்கினியர் உரை)

13. தன்நலத்தை அவன்கொண்டமை **கூறினாள் ஆயிற்று.**

(கலித்தொகை, 64, நச்சினார்க்கினியர் உரை)

இவ்விரண்டிலும் ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பு இயைபுப் பொருண்மையைப் பெற்று **ஆயினான்** எனவும், அதனைப் பெறாமல் **ஆயிற்று** எனவும் வெளிப்பாடு பெறுவதைக் காணலாம். இவ்விரண்டனுள் பிந்திய வெளிப்பாடு, தொன்மையில் பயனிலையாய்ச் செயல்பட்ட வினைகள் இயைபுப் பொருண்மையின்றி பொது வினைகளாய் இருந்தமையைப் புலப்படுத்தும் ஓர் அகச்சான்றாகக் கொள்ளத்தக்கதாகும். தொன்மையில் பயனிலையாய்ச் செயல்பட்ட வினைகள் இயைபுப் பொருண்மையையும் சேர்த்து உணர்த்தியிருக்குமாயின், (13)-இல் அமைந்துள்ள பொதுவினை நிகழ்ச்சிக்குப் பிந்திய தமிழில் வாய்ப்பு இருந்திருக்காது. ஐயென் கிளவியின் பொருண்மையமைப்பு (12), (13)-இல் உள்ளது போல் வினையமைப்புக்களையடுத்து வெளிப்பாடு பெறாமற் போகுமாயின் தனி வினையில் உள்ள முற்றுவிகுதியே அப்பொருண்மை

யமைப்பினை உணர்த்துவதாகக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, (12)-இல் **ஆயினான்** என்னும் இருப்பு வினையின் நிகழ்ச்சி இல்லையாயின், **சிதைத்தான்** என்பதில் நிகழும் **ஆன்** என்னும் முற்றுவிகுதியே இயைபுப் பொருண்மையை உணர்த்துவதுடன் [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பினையும் சேர்த்து உணர்த்தும். **ஆயினான்** என்ற வினை நிகழ்கையில் **சிதைத்தான்** என்பதில் உள்ள **ஆன்** என்னும் விகுதி இயைபுப்பொருண்மையை மட்டுமே உணர்த்தி நிற்கும். இயைபுப்பொருண்மையை உணர்த்தும் முற்றுவிகுதிகள் [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பினை யும் உணர்த்துவனவாதலை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

14 அவன் என்னை முன்னர் விரும்பிய பின்னர் நலத்தைச் **சிதைத்தான் ஆயினான்**. இங்ஙனம் **சிதைத்தவனை** எதிர்ப் பட்டால் யான் கூடாமல் வேறு செய்வது எவன்கொல்?
(கலித்தொகை, 142. நச்சினார்க்கினியர் உரை)

இவ்வெடுத்துக்காட்டில் முதல் வாக்கியம் **சிதைத்தான் ஆயினான்** என்று முடிகின்றது. அடுத்த வாக்கியம் இவ்வினையமைப்பின் தொடர்ச்சியாகச் **சிதைத்தவன்** என்று வினையடையையடுத்துத் தொடங்குகின்றது. முதல் வாக்கியப் பயனிலையை நோக்க முறைப் படி இரண்டாம் வாக்கியத்தில் அமைந்த **சிதைத்தவன்** என்ற அமைப்பு **சிதைத்தான் ஆயினான்** என்றோ **சிதைத்தவன் ஆனவன்** என்றோ அமையவேண்டும் அவ்வாறு அமையாமல் **சிதைத்தவன்** என்று மட்டுமே அமைவதால், இவ்வமைப்பில் **ஆயினான்** அல்லது **ஆனவன்** என்ற வினையின்கண் அமைந்த [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பு உள்ளீடாகப் பொருந்தி நிகழ்கிறது என்றே கொள்ளவேண்டும் இது காரணம் பற்றியே **சிதைத்தவன்** என்ற அமைப்பினை அடுத்து [இருப்பு + காலம்] என்ற பொருண்மை யமைப்பு தனி வரிவடிவ அமைப்பாக வெளிப்பாடு பெறாமற் போகின்றது சங்கப்பாடல்களில் நிகழும் தனிவினைகள் பொருள் விளக்கம் பெறுகையில் இப்பொருண்மையமைப்பு தனி வரிவடிவமாக வெளிப்பாடு பெறுவதை உரையாசிரியர்கள் தமிழில் காண முடிகின்றது எடுத்துக்காட்டாக, **முயங்கினை சென்றீமோ** (கலித்

தொகை 64, 29) என்ற தொடருக்குப் பொருள் குறிக்கையில், **முயங்கிச் செல்வாய்** எனக் குறிக்காமல், **முயங்கினையாய்ச் செல்வாய்** என்று நச்சினார்க்கினியர் குறிப்பதைக் கருத்தில் கொள்ளலாம். இத்தகைய உரை அமைவதற்குக் காரணம் பாடலில் நிகழும் **முயங்கினை** என்னும் தனிவினையில் உள்ள ஐயென்னும் முன்னிலை ஒருமை விகுதி [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பை உள்ளீடாகக் கொண்டுள்ளது என்ற உணர்வேயாகும். இல்லையெனில் **முயங்கினை** போன்ற தனிவினைகள் இத்தகைய பொருள் விளக்கம் பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. **முயங்கினை** என்னும் முற்றெச்சத்துக்கு ஈடாக **முயங்கி** என்னும் பொதுவினையெச்சம் அமைவதால் முந்தியதில் ஐயென்கிளவிக்கு அமைந்த [இருப்பு + காலம் + இயைபு] என்ற பொருண்மையமைப்பில் காணப்படும் [இருப்பு + காலம்] என்ற பகுதி பிந்தியதில் அமைந்த இகரக்கிளவிக்கும் பொருந்தும். முற்றுவினைகளில் மட்டும் அல்லாமல் எச்சவினைகளிலும் [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பின் நிகழ்ச்சியை இது தெளிவு படுத்துவதாயுள்ளது.

இனி மீண்டும் ஐயென்கிளவிக்கு வருவோம். [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்புக்குரிய ஐயென்கிளவி நேர்வினைமுற்றுக்கு நிகராய் அமையும் கனவ வினைமுற்றினையடுத்தும் நிகழும் நிலையைப் பழந்தமிழில் காணமுடிகின்றது. **மாதவன் மாதவியை மணந்தான்** என்ற நேர்வாக்கியத்தில் நிகழும் **மணந்தான்** என்னும் வினை நேர்வினையாகவும், **மாதவன் மணந்தது மாதவியை, மாதவியை மணந்தவன்/மணந்தது மாதவன்** ஆகிய கனவ வாக்கியங்களில் நிகழும் **மணந்தது, மணந்தவன்** என்பவை கனவ வினைகளாகவும் கருதப்பெறும். ஐயென்கிளவி பழந்தமிழில் திணைபால்_எண்–இடப்பொருண்மையை உணர்த்தாத கனவவினைகளாகிய பொதுவினைகளையடுத்தே பெரும்பாலும் நிகழ்கின்றது. (இக்கூற்று சரிபார்க்க வேண்டிய ஒன்று)

15. நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்த சொல் புதிதுண்ணும் பொழுதன்றோ

பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்கால்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் **றுரைத்ததை**
(கலித்தொகை, 35, 17-20)

16. புகர்முகக் களிறொடு புலிபொரு துழக்குநின்
அகன்மலை யடுக்கத்த அமையேய்க்கும் என்பதோ
கடையெனக் கலுழுநோய் கைம்மிக என்தோழி
தடையின திரண்டதோள் தகைவாடச் **சிதைத்ததை**
(கலித்தொகை. 45.12_15)

17. போதெழின் மலருண்கண் இவண்மாட்டு நீயின்ன
காதலை யென்பதோ இனிதுமற் றின்னாதே
மின்னோரும் கண்ணாக இடிஎன்னா பெயலென்னாய்
இன்னதோ ராரிடை ஈங்குநீ **வருவதை**
(கலித்தொகை, 49,10-13)

18. **ஊர்ந்ததை,** எரிபுரை யோடை இடையிமைக்கும் சென்னிப்
பொருசமன் கடந்த புகழ்சால் வேழம்
(பரிபாடல், 21. 1 - 2)

19. **பூண்டதை,** சுருளுடை வள்ளி இடையிடுபு இழைத்த
உருளிணர்க் கடம்பின் ஒன்றுபடக் கமழ்தார்
(பரிபாடல், 21,10 _ 11)

20. **அமர்ந்ததை** .. ..
தரைவிசும் புகந்த தண்பரங் குன்றம்
(பரிபாடல், 21.12 & 15),

இந்த ஆறு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **உரைத்ததை. சிதைத்ததை, வருவதை, ஊர்ந்ததை,** **பூண்டதை, அமர்ந்ததை,** ஆகிய கனவ வினைகள் முறையே **உரைத்ததானது, சிதைத்த தானது வருவதானது, ஊர்ந்ததானது, பூண்டதானது, அமர்ந்த தானது** ஆகிய அமைப்புக்களுடன் பொருண்மையமைப்பில் ஒன்று படுவனவாகும். பொருண்மையமைப்பில் காணப்படும் இந்த ஒற்றுமை **உரைத்ததை** முதலியவற்றில் நிகழும் ஐயென்கிளவியை **உரைத்ததானது** முதலியவற்றில் காணப்படும் **ஆனது** என்பதற்கு

ஈடாகக் கொள்ளத் துணைபுரிகிறது. இதனடிப்படையில் **ஆனது** என்பதன் பொருண்மையமைப்புக்கு ஐயென்கிளவியும் உரியதா கின்றது என்பது பெறப்படுகின்றது.

உரைத்ததை (15) என்னும் கனவ வினைக்கு நேரான நாமறிந்த நேர்வினை **உரைத்தார் ஆயினர்** என அமையும். சற்று விளக்கமாகச் சொல்லவேண்டுமாயின் **உரைத்ததை** என்னும் கனவ வினை நிகழும் வாக்கியம் ***அவர் வருதும் என்று நமக்கு உரைத்த தானது நீண்மாடக்கூடலார் புலனுவிற் பிறந்த சொல் புதிதுண்ணும் பொழுதிலாகும்,** என்ற கனவ வாக்கியமாய் அமைந்து, ***நீண்மாடக் கூடலார் புலனாவிற் பிறந்தசொல் புதிதுண்ணும் பொழுதில் வருதும் என்று அவர் நமக்கு உரைத்தார் ஆயினார்** என்ற நேர்வாக்கியத் துடன் பொருந்தும். நேர்வாக்கியத்தில் நிகழும் **உரைத்தார் ஆயினார்** என்னும் நேர்வினைத் தொடர், கனவவாக்கியத்தில் **உரைத்த தானது** அல்லது **உரைத்ததை** என்ற கனவ வினைத்தொடராக அமையும். இந்த ஆய்வு முறையினை ஏனைய எடுத்துக்காட்டுக் களில் நிகழும் **சிதைத்ததை, வருவதை, ஊர்ந்ததை, பூண்டதை, அமர்ந்ததை** ஆகிய கனவ வினைகள் அமைந்த வாக்கியங்களுக்கும் பொருத்தலாம் எடுத்துக்காட்டு (17)-இல் நிகழும் **வருவதை** என்பது ***வருகின்றாய் ஆகிறாய்** என்ற நேர்வினைத் தொடருடன் பொருந்தும் இறுதி மூன்று எடுத்துக்காட்டுக்களில் **முருகன்** என்பதனை எழுவாயாகக்கொண்டு **ஊர்ந்ததை** முதலியவற்றை விளக்கலாம். எடுத்துக்காட்டாக (18)-இல் நிகழும் **ஊர்ந்ததை** என்பதனை ***முருகன் ஊர்ந்ததானது** எனவிரித்து, இதனை ***முருகன் ஊர்ந்தான் ஆயினான்** என்ற நேர்வாக்கியத்துடன் பொருத்திக் கொள்ளலாம். **பூண்டதை, அமர்ந்ததை** ஆகியவற்றுக்கும் இவ்வாறே கொள்க.[3]

ஐயென்கிளவி, குறிப்புவினை முற்றுக்களையடுத்து நிகழ்கை யிலும் கனவவினையாக நிகழவல்லது என்பதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் உணர்த்தும்.

21. **கையதை,** (கொள்ளாத் தெவ்வர்கொள் மாமுதல் தடிந்து
புள்ளொடு பெயரிய பொருப்புப்படை திறந்த) வேல்
(பரிபாடல், 21. 8-9)

22\. **கையதை,** (அலவன் கண்பெற அடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுள் சிலகோல்) அவிர்தொடி
(கலித்தொகை, 85. 6-7)

இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **கையதை .. வேல், கையதை .. அவிர்தொடி** ஆகிய வாக்கியங்கள் முறையே **கையில் உள்ளதானது வேல், கையில் உள்ளதானது அவிர்தொடி** என பிரிக்கற்பாலனவாகும். இவ்விரிவமைப்புக்களில் நிகழும் **ஆனது** என்ற கனவ வினையுடன் **கையதை** என்பதில் உள்ள ஐயென் கிளவி பொருந்தி கனவ வினையாதலைக் காணலாம் இந்த இரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **கையதை** என்பதானது நேர்வினையாகக் கொள்ளப்படுமாயின் **கையதை...வேல் கையதை... அவிர்தொடி** என்ற வாக்கியங்கள் முறையே **வேல் கையில் உள்ளதாகும், அவிர்தொடி கையில் உள்ளதாகும்** என்ற நேர்வாக்கியங்களுடன் சென்று பொருந்தும். இந்தப் பொருத்தம் ஐயென் கிளவியை, **ஆகும்** என்ற நேர்வினைக்குச் சமமாகக் கொள்ள வகை செய்கின்றது.

எடுத்துக்காட்டுகள் (21), (22)-இல் நிகழும் **கையதை** என்பதில் உள்ள **கையது** என்னும் குறிப்புவினை **கையில் உள்ள கருவி, கையில் உள்ள அணி** என விளக்கம் பெறுவதற்கு உரியதாயின், **கையதை** என்ற அமைப்பு **கையில் உள்ள கருவியானது, கையில் உள்ள அணியானது** என விரிக்கப்பெறும். இத்தகைய விரிவமைப்புக் களிலும் ஐயென்கிளவி **ஆனது** என்ற கனவ வினையுடன் பொருந்து வதைக் காணலாம். **கையில் உள்ள கருவியானது வேல், கையில் உள்ள அணியானது அவிர்தொடி** என்ற கனவ வாக்கியங்கள் **வேல் கையிலுள்ள கருவியாகும்,** அணி **கையில் உள்ள அவிர்தொடி** யாகும் என்ற நேர்வாக்கியங்களுடன் பொருந்தி, ஐயென்கிளவியை **ஆகும்** என்னும் நேர்வினையின் 'பிரதிபலிப்பாகக் கொள்ளவும் வகைசெய்வதைக் காணலாய். இந்தச் சான்றுகள் அனைத்தும் ஐயென்கிளவியை இருப்புப்பொருண்மையை உணர்த்தும் வினை யாகக் கொள்வதற்குப் பெரிதும் துணைபுரியும் வலுவான சான்று களாகும். அத்துடன் ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பில் இருப்புப்பொருண்மையைத்தவிர அல்லது இருப்புப் பொருண்மை யுடன் வேறு பொருண்மைக் கூறுகளும் இடம்பெற வல்லன

என்பதையும் இச்சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. இவ்வாறு வேறு பொருண்மைக்கூறுகளையும் தன் வரிவடிவத்தின் மூலம் உணர்த்துதல் இருப்பு வினைக்கமைந்த சிறப்பியல்புகளில் ஒன்றாகும். (கோதண்டராமன், இரா*)

பழந்தமிழ் இலக்கியங்களில் ஐயென்கிளவி பெரும்பாலும் கனவ வினைகளையடுத்து நிகழும் போக்கே காணப்படுகின்றது. கலித்தொகையில் இதன் நிகழ்ச்சி மிகுதியாக உள்ளது. இங்கெல்லாம் நிகழும் ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பினை இவ்வாய்வில் கண்டவாறு காணமுற்பட்டால் மொழியை நாம் சரியான கோணத்தில் பார்க்க முயல்கிறோம் என்று பொருள்படும். இந்த வகையில் உரையாசிரியர்களை நம்பிப் பயனில்லை. (ஆனால் உரையாசிரியர்களின் மொழி இத்தகைய ஆய்வுக்குப் பெருந்துணை புரிய வல்லதாகும்). மொழியின் ஒரு குறிப்பிட்ட பொருண்மையமைப்பு காலந்தோறும் வெவ்வேறு வரிவடிவங்களாக வெளிப்பாடு பெறுவதற்கு வாய்ப்பு உண்டு. இது மொழியில் நிகழும் இயல்பான வளர்ச்சியாகும். மொழியை அணுகும் யாரும் இந்த உண்மையை நன்கு உணர்ந்து கொண்டால்தான் ஒரே பொருண்மையமைப்பை உணர்த்தும் ஒன்றுக்கு மேற்பட்ட வரிவடிவங்களைத் தொடர்படுத்த முடியும். இந்த உணர்வு உரையாசிரியர்களுக்கும் மரபுவழிப் புலமையாளர்க்கும் இல்லாமற் போனமையால்தான் ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பு புகைமூடிப்போயிற்று இந்தப் புகை மூட்டம் ஐயென்கிளவியின் திரிபுகளையும் செம்மையாகச் சூழ்ந்து கொண்டது. இதனைச் சற்று தொலைவு சென்ற பிறகு காணலாம்.

ஐயென்கிளவி சார்ந்து நிற்கும் ஓர் அமைப்பு தனக்குரிய பொருண்மையை உணர்த்தாமல் வேறு பொருண்மையை உணர்த்தும் பட்சத்தில், மேற்படி ஐயென்கிளவி தனக்குரிய பொருண்மையமைப்பினை உணர்த்துவதாகாது. பின்வரும் எடுத்துக்காட்டினைக் கருத்தில் கொள்க.

23. நின்குணம் எதிர்கொண்டோர் அறங்கொண்டோர் **அல்லதை**
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் **அல்லதை**
செறுதீ நெஞ்சத்துச் சினநீடி னோரும்
சேரா வறத்துச் சீரி லோரும்

அழிதவப் படிவத்து அயரி யோரும்
மறுபிறப் பில்லெனும் மடவோரும் சேரார்
நின்னிழல்... .. .. (பரிபாடல், 5. 71–77)

இவ்வெடுத்துக்காட்டில் நிகழும் **அல்லதை** என்னும் அமைப்பு எதிர் மறை(?)ப் பொருண்மையை உணர்த்தாமல் **தவிர** என்னும் பொருண்மையை உணர்த்துவதால் இதன்கண் காணப்படும் ஐயென்கிளவி, பகுதிப் பொருள் விகுதியாக அமைந்து, தனக்குரிய பொருண்மையமைப்பை உணர்த்தும் வாய்ப்பினை இழந்துவிடுகின்றது

பகுதி – 2

[இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்புக்குரிய ஐயென் கிளவி ஒரு வினைக்குரிய நிலையில் விகுதியேற்கும் போக்கினைப் பின்வரும் எடுத்துக் காட்டுகள் உணர்த்தும்.

24. நீயுடம் படுதலின் யான்தர வந்து
குறிநின் றனனே குன்ற நாடன்
இன்றை யளவை **சென்றைக்கென்றி**
கையும் காலும் ஓய்வன அழுங்கத்
தீயுறு தளிரின் நடுங்கி
யாவது மிலையான் செயற்குரி யதுவே
(குறுந்தொகை. 383)

25. கன்மிசை மயிலாலக் கறங்கியூர் அலர்தூ ற்றத்
தொன்னலம் நனிசாய நம்மையோ **மறந்தைக்க**
ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்
கொல் (கலித்தொகை, 27, 13–16)

26. எழுதெழில் மலருண்கண் **இருந்தைக்க** வெனப்போனான்
(சிலம்பு, 19.67)

27. வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆயமட மகளிர் எல்லீரும் கேட்டீமின்

ஆயமட மகளிர் எல்லீரும் **கேட்டைக்க**
பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்
(சிலம்பு 18·47_51)

இவ்வெடுத்துக்காட்டுகளில் நிகழும் **சென்றைக்க, மறந்தைக்க, இருந்தைக்க, கேட்டைக்க** ஆகிய வினையமைப்புக்கள் செய்தைக்க என்ற வாய்பாட்டினவாகி, முறையே **செல்க, மறக்க, இருக்க, கேட்க** என்ற செய்க வாய்ப்பாட்டு வினைகளுடன் பொருந்தி வியங் கோட்பொருண்மையை உணர்த்துவதாகக் தோன்றுகின்றது. **மறந்தைக்க** என்பதனை **வியங்கோட்டிரிசொல்** எனக் குறிப்பார் நச்சினாக்கினியர். **கேட்டைக்க** என்பதைப்பற்றிக் குறிப்பிடுகையில் **கேட்டை என்னும் வினையசைச்சொல் உடனடுக்கு வரற்பாலது கேட்டீமின் என்பதனோடு மொழியிடையடுக்காகி ஈற்று வியங்கோட் பொருண்மையால் கேட்க வென்றும் பொருட்டாயிற்று** என்பார் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். எடுத்துக்காட்டு (27)_இல் **கேட்டீமின், கேட்டைக்க** ஆகிய இரண்டும் ஒரே சூழலில் நிகழ்வதால் **கேட்டைக்க** என்பது ஏவற்பொருண்மையை உணர்த்தக் கூடுமா என்பது சிந்தனைக்குரியது.

செய்தைக்க வாய்பாட்டு வினைகள் **செய்து + ஐக்க** என்ற அமைப்பினவாகக் கொள்ளத்தக்கனவாகும். இவ்வமைப்பில் நிகழும் **ஐக்க** என்னும் வினையமைப்பு ஐயென்கிளவியின் அடியாகத் தோன்றிய ஓர் செய்க வாய்ப்பாட்டு வினையாகும். இதனைத் தெளிவுபடுத்தும் வகையில் எடுத்துக்காட்டு (26)_இல் உள்ள **இருந்தைக்க** என்னும் வினையமைப்பினைக் கருத்தில் கொள்வோம். இவ்வினையமைப்பு **இருப்பாய் ஆக** என்ற தொடரின் பொருண்மை யுடன் ஒன்றுபடுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு **இருந்தைக்க** என்பதில் உள்ள **இருந்த, ஐக்க** ஆகியவினைகள் முறையே **இருப்பாய், ஆக** என்ற வினைகளின் மாற்றுவடிவங்கள் எனக் கொள்ளலாம். **இருந்தைக்க** என்ற வினையமைப்பு **இருக்க** என்ற அமைப்பினோடும் பொருண்மை நிலையில் ஒன்றுபடுவதால், பிந்திய அமைப்பில் நிகழும் **இருக்க** என்ற உறுப்புக்கள் முறையே முந்திய அமைப்பில் நிகழும் **இருந்து, ஐக்க** என்ற உறுப்புகளின் மாற்று

வடிவங்களாக அமைகின்றன. **இருக்க, இருந்தைக்க, இருப்பாய் ஆக** ஆகியவற்றில் நிகழும் உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருந்துமாற்றினைப் பின்வரும் சமன்பாடு தெளிவுபடுத்தும்.

28. **உறுப்பு-1** **உறுப்பு-2**

இரு	+	க்க
இருந்து	+	ஐக்க
இருப்பாய்	+	ஆக

இச்சமன்பாட்டில் **இருந்து** என்னும் உறுப்பு **இரு** என்பதன் மாற்று ருபாகக் கொள்ளப்படும். **இருப்பாய்** என்னும் உறுப்பு காலக்குறிப்பு ஏதுமின்றி இயைபு விகாரத்தின் மூலம் வருவிக்கப்பெறும்.[3] செய்தைக்க வாய்ப்பாட்டு வினைகளில் நிகழும் **ஐக்க** என்னும் வடிவம் **ஆக** என்பனை மாற்று வடிவமாகக் கொண்டுள்ளதால், பிந்தியது எங்ஙனம் **ஆகு + அ** என்ற ஆய்வுக்கு உரியதாகின்றதோ அங்ஙனமே முந்தியதும் **ஐக்க** என்ற ஆய்வுக்கு உரியதாகின்றது. இதன் மூலம் ஐயென்கிளவி **ஆகு** என்பதன் மாற்று வடிவம் என்ற செய்தி பெறப்படுகின்றது. இம்மாற்று வடிவம் காலத்தால் முந்தியதாகும். ஒரு நிலையில் பயனிலையாகவும், முற்றெச்சமாகவும் செயல்பட்ட ஐயென்கிளவி **செய்தைக்க** வாய்பாட்டு வினைகளில் விகுதி ஏற்குமளவுக்கு வளர்ச்சியடைந்துவிட்டது. **ஐக்க** என்ற வினையமைப்பில் ஐயென்கிளவி இருப்புப் பொருண்மையையும் **க்க** என்னும் வடிவம் வியங்கோட்பொருண்மையையும் உணர்த்துவன வாகும். இவ்வாய்வின் மூலம் செய்க வாய்ப்பாட்டு வியங்கோள் வினைகளில் நிகழும் ககரக்கிளவி [இருப்பு + வியங்கோள்] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாதும் செய்தியும் பெறப்படுகின்றது.[4] இப்பொருண்மையமைப்பில் காலப் பொருண்மைக்கு இடமில்லை. ஏனெனில் வியங்கோள் காலத்தைச் சார்ந்து நிற்கவேண்டுமென்ற கடப்பாடு இல்லை. இது ஏவல் வினைகளுக்கும் பொருந்தும்.

இந்தக் கட்டத்தில் சற்று பின் சென்று ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பில் நேர்ந்த மாறுதல்களைக் குறிப்பிட்டாக வேண்டும். செய்தைக்க வாய்பாட்டு வினைகளில் கண்டதுபோல் **ஐக்க** என்னும் வினையமைப்பு மட்டும் செய்து வாய்பாட்டு

வடிவங்களையடுத்து நிகழவில்லை. இவ்வாய்பாட்டு படிவங்களை யடுத்து ஐயென்கிளவி மட்டுமே நிகழும் நிலையும் பழந்தமிழில் காணப்படுகின்றது.

29. இன்னும், கடம்பூண் டொருகால்நீ **வந்தை** யுடம்பட்டாள்
என்னாமை என்மெய் தொடு (கலித்தொகை, 63. 12-13)

30. ஆயிழாய், தாவாத எற்குத் தவறுண்டோ காவாதீங்கு
ஈத்தை இவனையாம் கோடற்கு (கலித்தொகை, 86. 1-2)

31 நன்னுதால்! **காண்டை** நினையா நெடிதுயரா
என்னுற்றாள் கொல்லோ இஃதொத்தி
(கலித்தொகை, 144. 1-2)

32. நெட்டிருங் கூந்தலாய் **கண்டை** இஃதோர் சொல்
(கலித்தொகை, 105. 57)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் நிகழும் **வந்தை** (= வாராய்), **ஈத்தை** (=ஈதாய்) **காண்டை, கண்டை** (= காணாய்) ஆகிய வினையமைப்புக்கள் செய்தை வாய்பாட்டினவாகி ஏவற்பொருண்மையை உணர்த்துவனவாகின்றன. எடுத்துக்காட்டு (29)-இல் நிகழும் **வந்தை** என்பதற்கு **வாராய்** என உரை வகுத்து **வாவென்றது வந்தையெனத் திரிந்தது** எனக் குறிப்புரை நல்குவார் நச்சினார்க்கினியர். செய்தை வாய்பாட்டு வடிவங்களில் நிகழும் ஐயென்கிளவி [இருப்பு + ஏவல் + [+ ஒருமை)] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகும். ஏவற் பொருண்மையின் நிகழ்ச்சியில் முன்னிலைப் பொருண்மை உள்ளீடாக இருப்பதால் பிந்தியதைத் தனியாகச் சுட்டவேண்டுவதில்லை. செய்தை வினைகளில் ஐயென்கிளவிக்குக் குறிக்கப்பெற்ற பொருண்மையமைப்பு **செய்யாய்** வாய்பாட்டு ஏவல் வினைகளில் நிகழும் **ஆய்** என்னும் விகுதிக்கும் பொருந்தும். செய்தை வாய்பாட்டு வினைகளில் நிகழும் **ஆய்** என்னும் விதிக்கும் பொருந்தும். செய்தை வாய்பாட்டு வினைகளும் செய்யாய் வாய்பாட்டு வினைகளும் ஒரே பொருண்மையனவாதலால், முந்தியதில் நிகழும் செய்து வாய்பாட்டு வடிவங்கள் வினைடிகளின் மாற்றுருபுகளாகக் கொள்ளத்தக்கனவாகின்றன.[5]

செய்தைக்க வாய்பாட்டு வினைகளில் **ஐக்க** என்னும் செய்க வாய்பாட்டு வினை **ஐயென்னும்** வினையடியாகத் தோன்றியது என முன்னர் கண்டோம். இவ்வினை அடியாகத்தோன்றி செய்து வாய்பாட்டு வடிவங்களை அடுத்து நிகழும் இருவகை வினைகளைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

33. இடைபாய்ந் தெருத்தத்துக் கொண்டானோ டெய்தி
மிடைபாயும் வெள்ளேறு **கண்டைகா**
(கலித்தொகை, 105.43-44)

34. இனி, யாதுமீக் கூற்றம் யாமில மென்னுந்
தகையது **காண்டைப்பாய்**நெஞ்சே!
(கலித்தொகை, 87.14 - 15)

இவ்விரு எடுத்துக்காட்டுக்களிலும் செய்து வாய்ப்பாட்டு வடிவத்தை யடுத்து ஐயென் வினையடியாகத் தோன்றிய **-ஐகா, ஐப்பாய்** ஆகிய வினையமைப்புக்கள் நிகழ்கின்றன **கண்டைகா,** என்னும் வினைக்கு நச்சினார்க்கினியர் **காணாய்** என உரைவகுப்பதைக் கருத்தில் கொண்டு, -ஐகா என்னும் வினையமைப்பினை, செய்ததை வினைகளில் நிகழும் அய்யென்கிளவியின் பொருண்மை யமைப்புக்கு உரிமையாக்கலாம். **கண்டைகா** என்னும் வினைக்குக் குறிப்புரை எழுதுகையில் **இகா முன்னிலையசை, அது காவெனத் திரிந்தது** என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதால் மேற்படி வினை யமைப்பு அவர் பார்வையில் ***கண்டை + இகா** என்று அமைகின்றது. ஐயென்கிளவியை ஓர் வினையாகக் கொண்ட நமக்கு, நச்சினார்க் கினியர் ***கண்டை + இகா** என்ற ஆய்வுமுறை உடன் பாடில்லை. நமது ஆய்வில் **கண்டைகா** என்பது **கண்டு + ஐகா** என்றே அமையும். இந்த அமைப்பில் நிகழும் **-ஐகா** என்னும் வினை **செய்தைக்க** வினைகளில் நிகழும் **-ஐக்க** என்பதனுடன் தொடர் புடையதாகக் கொள்ளத்தகுமா என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும். **-ஐகா** என்பதனை **ஐ+ கா** அல்லது **ஐகு + ஆ** என்ற அமைப்பின் தாகக் கொண்டு முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையையும், இரண்டாம் உறுப்பு [ஏவல்+ [+ ஒருமை]] என்ற பொருண்மை யமைப்பையும் குறிப்பனவாகக் கொள்ளலாம். **ஐகு + ஆ** என்ற அமைப்பை மேற்கொண்டால் மேற்படி அமைப்பில் நிகழும் **ஐகு**

என்னும் இருப்பு வினை ஐயென்கிளவியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும். **கண்டைகா** என்ற அமைப்பில் **கண்டு** என்னும் செய்துவாய்ப்பாட்டு வடிவம் **காண்** என்னும் வினையடியின் மாற்றுருபாகும். **கண்டைகா, காணாய்** ஆகியவற்றில் **-ஐகா** என்னும் அமைப்பும், **ஆய்** என்னும் வரிவடிவமும் உணர்த்தும் பொருண்மையமைப்பினை ϕ எனக்குறிக்கப்பெறும் உருவிலாக் கிளவியும் எணர்த்தும். இவ்வுருவிலாக்கிளவி வினையடிகளையடுத்து நிகழற்பாலதாகும்.

இனி எடுத்துக் காட்டு (34)-க்கு வருவோம். இவ்வெடுத்துக் காட்டில் நிகழும் **காண்டைப்பாய்** என்னும் **காணாய்** என்னும் ஏவல்வினையின் பொருண்மையமைப்புக்கு உரியதாகும்.[6] நச்சினார்க் கினியர் இந்த வினைக்கு **நினைத்துப்பார்ப்பாய்** என்று பொருளுரைப் பார். **காண்டைபபாய்** எதிர்கால வினையாக நிகழுமாயின் அதில் உள்ள **-ஐப்பாய்** என்னும் ஐயடிவினை **ஐ**+ப்ப்+**ஆய்** என்ற அமைப்பினதாகக் கொள்ளப்பெற்று முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையையும், இரண்டாம் உறுப்பு காலப்பொருண்மையையும் மூன்றாம் உறுப்பாகிய **ஆய்** [முன்னிலை + [+ஒருமை]] என்ற பொருண்மையமைப்பையும் உணர்த்துவனவாகக் கொள்ளப்படும். எடுத்துக்காட்டு (34)-இல் நிகழும் **காண்டைப்பாய்** ஏவற்பொருண் மையை உணர்த்துவதால் **ஐயாய்** என்னும் அய்யடி வினை **ஐப்பு + ஆய்** என்ற அமைப்பினதாகக் கொள்ளப்பெற்று **ஐப்பு** என்னும் வடிவம் இருப்புப்பொருண்மையையும் அதனையடுத்து நிகழும் **ஆய்** என்னும் வடிவம் [ஏவல் + [+ஒருமை]] என்ற பொருண்மையமைப்பையும் குறிப்பனவாகக் கொள்ளப்படும். **ஐப்பு** என்பது அய்யென் கிளவியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும். இவ்வாறே **காண்டைப்பாய்** என்பதில் நிகழும் **காண்டு** என்னும் வடிவம் **காண்** என்னும் வினையடியின் மாற்றுருபாகக் கருதப்பெறும். ஏவல் வினைகளின் பொருண்மையமைப்பில் இருப்புப் பொருண்மை யின் நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை **காண்டைப்பாய்** வினையில் நிகழும் (இருப்புப்பொருண்மையை உணர்த்தும் அய்யென் கிளவியின் மாற்றுபாகிய) **ஐப்பு** என்ற வடிவம் நன்கு உணர்த்து கின்றது. ஆகவேதான் **காண்டைப்பாய்** என்பதற்கு நிகராக அமை யும் **காணாய் காண்பாய்** ஆகிய ஏவல் வினைகளில் நிகழும் **ஆய்**

என்னும் வடிவத்துக்குரிய பொருண்மையமைப்பு [இருப்பு+ஏவல்+ [+ஒருமை]] எனக் குறிக்கப்படுகின்றது. செய்தை வாய்பாட்டு ஏவல் வினைகளில் நிகழும் ஐயென்கிளவியின் பொருண்மை யமைப்பில் இருப்புப் பொருண்மை இடம் பெறுவதற்கும் இதுவே தான் காரணம்.

பகுதி - 3

ஐயென்னும் வடிவம் உண்மையில் ஐ என்பதன் எழுத்து வழக்காகக் கொள்ளத்தக்கதாகும். இந்த *ஐ என்னும் வடிவம் **இ, ஈ, எ, ஏ, அ** எனப் பலவாகத் திரிந்தமையும்.[7] ஐயென்கிளவி பற்றிய இந்த ஆய்வில் *ஐ என்பதன் திரிபுகளைக் கருத்தில் கொண்டால் மேற்படி கிளவியின் பொருண்மையமைப்புடன் மேலும் சில வரிவடிவங்களைத் தொடர்பு படுத்தலாம். இந்த வகையில் முதலில் **இகா, இகும், இசின்** ஆகிய மூன்று வடிவங்களைக் கருத்தில் கொள்ளலாம். இவற்றுள் **இகா** என்னும் வடிவம் வினைப் பகுதியையடுத்தும் அதன் மாற்று வடிவமாகிய செய்து வாய்பாட்டு வடிவத்தையடுத்தும் நிகழ்வதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

35. கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்திக்
கொள்வார்ப் பெறாஅக் குரூஉச்செகில் **காணிகா**
(கலித்தொகை, 105. 35-36)

36. பொய்யாமை நுவலுநின் செங்கோலச் செங்கோலின்
செய் தொழிற்கீழ்ப் பட்டாளோ இவளிவட் **காண்டிகா**
காமநோய் கடைக்கூட்ட வாழுநாள் முனிந்தாளை
(கலித்தொகை, 99.11-13)

எடுத்துக்காட்டு (33)-இல் காணப்படும் **கண்டைகா** என்பதில் நிகழும் **-ஐகா** என்ற வினையமைப்பும், மேலே (35), (36)-இல் **காணிகா, காண்டிகா** என்பவற்றில் நிகழும் **-இகா** என்ற அமைப்பும் ஒரே பொருண்மையனவாகக் கொள்ளத்தக்கதாகும். ஏனெனில் காணிகா, காண்டிகா ஆகிய இருவினைகளும் கண்டைகா என்ற வினையைப்போல் **காணாய்** என்னும் ஏவல்வினையின் பொருண்மை

யமைப்புக்கு உரியனவாகும். **நச்சினார்கினியரும்** இவ்வினை களுக்குப் **பாராய்** எனப் பொருள் குறிப்பார். **காண்டிகா** என்ற வினையமைப்பில் காண்டி என்னும் முன்னிலை **வினையோடு காவென்னும் அசைநிலையிடைச்சொல் நின்றது என்று குறிப்பார்** நச்சினார்க்கினியர். இந்தக் கூற்று நமக்கு உடன்பாடில்லை. ஏனெனில் நமது ஆய்வில் **இகா** என்பதில் காணப்படும் இகரக் கிளவி இருப்புப்பொருண்மையதாகிய ஐயென்கிளவியின் திரிபாக கொள்ளத்தக்கதாகின்றது. **இகா** என்ற வினையமைப்பின் ***இ+கா** அல்லது ***இகு+ஆ** என்ற அமைப்பினதாகக்கொண்டு முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையையும், இரண்டாம் உறுப்பு [ஏவல் + (+ ஒருமை)] என்ற பொருண்மையமைப்பையும் உணர்த்து வனவாகக் கொள்ளலாம். **இகா** என்பதில் முதல் உறுப்பாக நிகழும் இ அல்லது **இகு** ஐயென்கிளவியின் மாற்றுருபாகக் கருதப்பெறும்.

இகா என்னும் வினையமைப்புக்கு ஈடாகத் தொல்காப்பியர் முன்னிலை அசைச் சொல் என்ற பெயரில் **இக** என்னும் அமைப்பைக் குறிப்பிடுகிறார். (சொல்லதிகாரம், 270. தெய்வச்சிலையார்). இந்த 'முன்னிலையசைச் சொல்லின் நிகழ்ச்சியைத் **தண்டுறை யூரயாம் கண்டிக** என்ற எடுத்துக்காட்டு மூலம் தெய்வச்சிலையார் குறிப்பார். **இக** என்னும் தொல்காப்பிய முன்னிலை அசைச்சொல் **இகா** என்ப தனின்றும் வேறுபட்டதன்று. **இகா** என்பதற்கு அமைந்த ஆய்வு **இக** என்பதற்கும் பொருந்தும். ஆகவே **இக** என்னும் அமைப்பு நமது பார்வையில் **இகா**வைப்போல் வினையாகவே தென்படும். **இக, இகா** ஆகியவற்றில் நிகழும் இகரக்கிளவி மட்டுமே தனியாக வினையடிகளின் மாற்றுருபுகளாகிய செய்து வாய்பாட்டுவடிவங் களையடுத்தும், வினையடிகளையடுத்தும் நிகழ்வதைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

37. நெஞ்சம் பிணித்தல் தொழிலாத் திரிதரும்
நுந்தைபால் **உண்டி** சில (**கலித்தொகை,** 85. 24-25)

38. செறாஅ துளனாயின் கொள்வேன் அவனை
பெறாஅ தியான் நேவேன் அவனைறெற் **காட்டி**
(**கலித்தொகை** 147.40 - 41)

39. ஊசலூர்ந் தாட ஒருஞான்று வந்தானை
அய்ய சிறிதென்னை **யூக்கி** யெனக் கூறத்
தையால் நன்றென் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன்மார்பின் வாயாச்செத்
தொய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய்யறியா தேன்போற் கிடந்தேன்மன்
(கலித்தொகை, 37 14_19)

இம்மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **உண்டி**(= உண்ணாய்), **காட்டி**, (= காட்டாய்) **ஊக்கி** (= ஊக்காய்) ஆகியவற்றுள் நிகழும் இகரக்கிளவி அய்யென்கிளவியின் திரிபாகக் கொள்ளத்தக்கதாகலின் இதன் பொருண்மையமைப்பில் இருப்புப்பொருண்மையும் இடம் பெற்றாக வேண்டும், **உண்டி**, **காட்டி**, **ஊக்கி**, ஆகியவை **உண்டு + இ**, **காட்டு + இ**, **ஊக்கு + இ** என்ற அமைப்பினவாகலின், **காணிகா**, **காண்டிகா** ஆகியவற்றில் நிகழும் **இகா** என்பதனை இரண்டு உறுப்புக்களாகப் பகுத்து உறுப்புக்களாகப் பகுத்து ஆய்வதே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

காட்டி, **ஊக்கி** ஆகிய இகர ஈற்று வினையமைப்புக்கள் ஏவற் பொருண்மையை உணர்த்த **வாழ் + இ** என்ற அமைப்பினதாகிய **வாழி** என்னும் வினை வியங்கோட் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றது. வியங்கோளுக்கும் ஏவலுக்கும் உள்ள வேறுபாடு பற்றிய ஆய்வுக்கு இங்கு இடமில்லையாதலால் **வாழி** என்பதில் நிகழும் இகரக்கிளவியின் பொருண்மையமைப்பினை [இருப்பு + வியங்கோள்] எனக்குறிப்பதுடன் நாம் அமைந்து விடலாம். இருப்பு வினை பல்வேறு இலக்கணப் பொருண்மைகளைக் கவரவல்லது என்பதற்கு **காட்டி**, **ஊக்கி** என்பவற்றில் நிகழும் இகரக்கிளவியும், **வாழி** என்பதில் நிகழும் இகரக்கிளவியும் சிறந்த சான்றுகளாக அமைவதைக் காணலாம்.

இகும் என்னும் கிளவியை முன்னிலை அசைச்சொல்லாகக் கொள்வதுடன் தன்மையிலும் படர்க்கையிலும் அது நிகழவல்லது எனக்குறிப்பார் தொல்காப்பியர்.
(சொல்லதிகாரம், 270 & 271. தெய்வச்சிலையார்)

40. கடற்கோ டறுத்த வரம்போ ழவ்வளை
ஒண்டொடி மடவரற் **கண்டிகும்** கொண்க!
நன்னுதல் இன்று மாஅல் செய்தெனக்
கொன்னென்று கடுத்தனள் அன்னையது நிலையே
(ஐங்குறுநூறு, 194)

41 இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரும்
அயந்திகழ் சிலம்ப! **கண்டிகும்**
பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே
(ஐங்குறுநூறு, 264)

42. வளையணி முன்கை வாலெயிற் றமர்நகை
இளைய ராடும் தளையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுங்தோ எண்ணாற் **கண்டிகும்** யாமே
(ஐங்குறுநூறு, 198)

43. **கண்டிகும்** அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே
(ஐங்குறுநூறு, 122)

44. இலம்பா டுழந்தவென் னிரும்பே ரொக்கல்
கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப் பொலிந் தாஅங்கு
அறாஅ வருநகை யினிது**பெற் றிகுமே**
(புறம், 378.13 & 18-22)

45. **புகழ்ந்திகும்** அல்லரோ பெரிதே
(தொல், சொல், 275 சேனாவரையர் எடுத்துக்காட்டு)

இந்த ஆறு எடுத்துக்காட்டுகளில் முதல் இரண்டில் நிகழும் **கண்டிகும்** முன்னிலை வினைபோலவும், அடுத்த இரண்டில் நிகழும் **கண்டிகும்** தன்மை வினைபோலவும் இறுதி இரண்டில் நிகழும்

பெற்றிகும், புகழ்ந்திகும் ஆகியவை படர்க்கை உயர்திணை வினை போலவும் மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன. ஆய்வு வசதியின் பொருட்டு இவ்வினைகளைச் செய்திகும் வாய்ப்பாட்டினவாகக் கொள்ளலாம். முதல் இரண்டு எடுத்துக்காட்டுகளில் நிகழும் **கண்டிகும்** என்னும் செய்திகழும் வாய்ப்பாட்டு வினை **காணாய்** என்னும் ஏவல் வினையின் பொருண்மையமைப்புடன் பொருந்து வதாகும். **காணாய்** என்னும் ஏவல் வினையுடன் பொருந்தும் **கண்டிகும்** என்னும் வினையில் நிகழும் **இகும்** என்னும் கிளவி செய்யும் வாய்ப்பாட்டு ஏவல் வினையாகக் கொள்ளத் தக்கதாகும். இதனைக் கருத்தில் சொண்டு **இகும்** என்பதனை **இ+கும்** அல்லது **இகு+உம்** என்ற அமைப்பினதாகக் கொண்டு முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையும், இரண்டாம் உறுப்பு [ஏவல்+ [+ ஒருமை(?)]] என்ற பொருண்மையமைப்பையும் **உ**ணர்த்துவன வாகக் கொள்ளலாம். **செய்யும்** வாய்பாட்டு வினைகள் **செய்யும்** என்ற வாய்பாட்டினவாய் ஒருக்கி **ஏ** மற்றும் **ஓ** ஆகிய கிளவிகளை ஏற்றும் ஏற்காமலும் ஏவற்பொருண்மையை உணர்த்தும் நிலையைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.[8]

46. தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு **தின்ம்** எனத் தருதலின்
(புறம், 150, 12–13)

47. ... ... சான்றோர்
உண்ணா ராயினும் தன்னொடு சூளுற்று
உண்ம்என விரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்
(புறம், 178, 3–5)

48. செலீஇய! சேறி யாயின் இவளே
வருூஉவ யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை **சென்மே**
(நற்றிணை, 19, 7–9)

49. நின்னாங்கு வரூஉமென் நெஞ்சினை
என்னாங்கு வாராது ஓம்பினை **கொண்மே**
(கலித்தொகை, 23, 18–19)

50. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி!
காமஞ் செப்பாது கண்டது **மொழிமோ**
(குறுந்தொகை, 2. 1–2)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் நிகழும் ***தின்ம், *உண்ம், *சென்ம், *கொண்ம், *மொழிம்** ஆகிய ***செய்ம்** (<செய்யும்) வாய்பாட்டு ஏவல் வினைகளைக் கருத்தில் கொண்டு (40),(41)–இல் காணப் படும் **கண்டிகும்** என்னும் வினையமைப்பில் நிகழும் **இகும்** என்னும் கிளவியைச் செய்ம் வாய்பாட்டு ஏவல் வினையெனக் கொள்ளலாம். **இகும்** என்பதன்முன் நிகழும் **கண்டு** என்னும் செய்து வாய்பாட்டு வடிவம் **காண்** என்பதன் மாற்றுருபாகும்.

இனி (42) முதல் (45) வரையுள்ள எடுத்துக்காட்டுக்களில் நிகழும் செய்திகும் வாய்பாட்டு வினைகளைக் காண்போம். எடுத்துக்காட்டுக்கள் (42), (43)–இல் நிகழும் **யாமே, அல்லமோ** ஆகிய தன்மைப் பொருண்மையை உணர்த்தும் வடிவங்களைக் கொண்டு இவற்றின் முன் நிகழும் **கண்டிகும்** என்பதனைத் தன்மை வினையாகக் கருத முடியாது.[9] இவ்வாறே (44), (45)–இல் நிகழும் **ஒக்கல், அல்லரோ** ஆகிய படர்க்கை வடிவங்களை நினைத்துக் கொண்டு **பெற்றிகும், புகழ்ந்திகும்** ஆகியவற்றைப் படர்க்கை வினைகளாகக்கொள்ள முடியாது. **ஞான் வரும்** என்ற மலையாள வாக்கியத்தில் நிகழும் **வரும்** என்பது தன்மை வினை என்று வாதிட்டால் எப்படி இருக்கும்? இதனை எப்படி ஏற்கமுடியாதோ அப்படியே **செய்திகும்** வாய்பாட்டு வினைகளைத் தன்மை, படர்க்கை வினைகள் என்று கருத முற்படுவதையும் ஏற்கமுடியாது. தொல்காப்பியரையும் இக்கருத்தினராகக் கொள்ள முடியாது. ஏனெனில் செய்திகும் வாய்பாட்டு வினைகள் முன்னிலை தவிர ஏனையிடத்தும் பொருந்தும் என்று அவர் கூறுகிறாரே தவிர, இவ் வாய்பாட்டு வினைகளைத் தன்மை மற்றும் படர்க்கை வினைகளாக அவர் கருதுவதாகத் தோன்றவில்லை.

எடுத்துக்காட்டுக்கள் (42) முதல் (45) வரையுள்ளவற்றில் நிகழும் செய்திகும் வாய்பாட்டு வினைகள் ஒரு குறிப்பிட்ட காலப் பொருண்மையை உணர்த்துவனவாகத் தோன்றவில்லை. (42)–இல் நிகழும் **கண்டிகும்**, எதிர்கால வினைபோலவும், (44)–இல் நிகழும்

பெற்றிகும் இறந்தகால வினைபோலவும் தோன்றுகின்றன. (43), (45)-இல் நிகழும் **செய்திகும்** வினைகளின் காலப்பொருண்மையைத் திட்டவட்டமாகச் சொல்லமுடியவில்லை. செய்திகும் வாய்ப்பாட்டு வினைகள் மொழியில் பயிலத்தொடங்கிய நிலையில் அவை பல்வேறு காலப்பொருண்மைகளை உணர்த்தியிருக்கும் என்று நம்பமுடியவில்லை, சங்கப்புலவர்களாகட்டும். உரையாசிரியர்களாகட்டும் இதனை எந்த அளவுக்கு உணர்ந்திருந்தார்கள் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட வினையமைப்பு இருவேறு காலப்பொருண்மைகளை உணர்த்த முடியாது. **செய்திகும்** வாய்பாட்டு வினைகள் ஏவல், இறப்பு, எதிர்வு (?) ஆகிய பொருண்மைகளை உணர்த்துவனவாகச் சங்கப் புலவர்களால் கொள்ளப்பட்டிருக்குமோ என்று ஐயுறத் தோன்றுகின்றது. இவ்வாறு கொள்ளப்பட்டிருந்தால் **செய்திகும்** வினைகளின் பொருண்மையமைப்பு சங்கப்பாடல்கள் தோன்றிய காலத்தில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டதாகவோ அல்லது இவற்றின் பொருண்மையமைப்பு பலவாக மாறத்தொடங்கி விட்டதாகவோ தான் நினைக்கத்தோன்றுகிறது. **செய்திகும்** வினைகளின் பொருண்மையமைப்பு சங்கப்பாடல்கள் தோன்றிய காலத்தில் போற்றப்படாமற் போயிருந்தால் அதற்குக் காரணம் சங்கத்தமிழ் வழக்கில் இவ்வினைகள் வழக்கற்றுப் போயிருக்கவேண்டும். செய்திகும் வினைகள், செய்யும் வாய்பாட்டுவினைகளுக்கு நிகராகக் கொள்ளத்தக்கனவாகும். அப்படியாயின் இவ்வினைகள் ஒருபக்கம் மூவர் பொருண்மையையும், இன்னொருபக்கம் பொதுவினைகளாயமைந்த எதிர்வு அல்லது நிகழ்வுப் பொருண்மையையும் தொடக்கத்தில் உணர்த்தியிருக்கவேண்டும்.

செய்திகும் வினைகள் தெரிநிலை வினைகளாகக் கொள்ளப்படும் நிலையில் அவற்றில் நிகழும் **இகும்** என்னும் வினையமைப்பு **இகு+உம்** என்ற அமைப்பினதாகக் கொள்ளப்பட்டு முதல் உறுப்பு இருப்புப்பொருண்மையையும், இரண்டாம் உறுப்பு காலப்பொருண்மையையும் குறிப்பனவாகக் கொள்ளப்படும். இந்த வகையில் எடுத்துக்காட்டு (44)-இல் நிகழும் **பெற்றிகும்** என்னும் வினையில் உள்ள **இகும்** என்பதில் அமைந்த உம்மைக்கிளவி இறப்புப்பொருண்மையை உணர்த்துவதாகக் கொள்ளப்படும். **பெற்றிகும்** இறந்தகால

வினையல்லவென்றால் மேற்படி உம்மைக்கிளவி வேறுகாலப் பொருண்மையைக் குறிக்கும். செய்திதும் வாய்பாட்டு வினைகள் எந்தப்பொருண்மையமைப்பினை உணர்த்துமாயினும் அவற்றில் நிகழும் செய்துவாய்பாட்டு வடிவங்கள் வினையடிகளின் மாற்று ருபுகள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இகுமென் கிளவியைப் போன்றே செய்து வாய்பாட்டு வடிவங் களை அடுத்து நிகழும் இன்னொருவடிவம் **இசின்** என்னும் கிளவி யாகும். தொல்காப்பியர் இதனை **சின்** எனக்கொண்டு, இது முன் னிலையசைச் சொல்லாகவும், தன்மை, படர்க்கை இடங்களில் பொருந்த வல்லதாகவும் குறிப்பிடுவார். (சொல்லதிகாரம்,270 & 271 தெய்வச்சிலையார்.) இசின் என்னும் கிளவி நிகழும் வினைகளைச் செய்திசின் வாய்பாட்டு வினைகளாகக் கொள்ளலாம். முன்னிலையில் நிகழ்கையில் செய்திசின் வினைகள் ஏவல் தன்மையினவாய் அமைகின்றன.

51. காப்பும் **பூண்டிசிற்** கடையும் போகலை (அகம், 7, 5)

52. கைவன் பாரி மகளி ரென்றவென்
தேற்றுப் புன்சொல் **நோற்றிசிற்** பெரும!
(புறம், 202. 15-16)

63. தண்ணந் துறைவன் வந்தெனப்
பொன்னினும் சிவந்தன்று **கண்டிசின்** நுதலே
(ஐங்குறுநூறு, 105. 3-4)

இம்மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **பூண்டிசின், நோற்றிசின், கண்டிசின்** ஆகிய செய்திசின் வினைகள் முறையே **பூணாய், நோலாய், காணாய்** ஆகிய ஏவல் வினைகளின் பொருண்மையமைப் புடன் பொருந்துவனவாகும். இக்காரணம் பற்றியே செய்திசின் வினைகளில் நிகழும் **செய்து** வடிவங்கள் வினையடிகளின் மாற்றுருபு களாகக் கொள்ளத்தக்கனவாகின்றன. செய்திசின் வினைகளில் நிகழும் **இசின்** என்னும் கிளவி செய்திகும் வினைகளில் நிகழும் இகுமென் கிளவியைப்போன்றே ஓர் வினையாகக் கருதத்தக்கதாகும். இவ்வினை **இச் + இன்** என்ற அமைப்பினதாகும். **இச்** என்பதில்

நிகழும் சகர ஒற்று ஓர் உரசொலியாகும். இவ்வுரசொலி யகர ஒற்றின் திரிபாகும். யகரம் சகர உரசொலியாகத் திரியும் நிலையை **மை** (<***மய்**)>**மசி**, **நை** (<***நய்**) >**நசி** ஆகிய எடுத்துக்காட்டு களில் காணலாம். ஆகவே **இசின்** என்னும் வினையினை ***இயின்** (<***இய்** + **இன்**) என மீட்டுருவாக்கம் செய்யலாம். இம்மீட்டுருவாக்க அமைப்பில் ***இய்** என்னும் பகுதி இருப்புப் பொருண்மையை உணர்த்தும். இதனை அடிப்படையாகக் கொண்டு **இசின்** என்னும் வினையமைப்பில் **இச்** என்பது இருப்புப் பொருண்மையையும் அதனையடுத்து நிகழும் **இன்** என்பதானது [ஏவல்+ [+ஒருமை]] என்ற பொருண்மையமைப்பையும் குறிப்பதாகக்கொள்ளலாம். இந்த ஆய்வு **கண்டிசின்** என்பதற்கு நிகராய் அமையும் **காணாய்** என்னும் ஏவல் வினையில் நிகழும் **ஆய்** என்னும் வடிவம், **இசின்** என்ற வினையமைப்பின் ஒட்டுமொத்தமான பொருண்மையமைப்புக்கு உரியதாக வகை செய்கின்றது.

செய்திசின் வினைகள் பழந்தமிழில் பொதுவினைகளாய் அமைந்து இறப்புப் பொருண்மையை உணர்த்துவனவாயும் நிகழ் கின்றன. இந்த வகையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் கருத்தில் கொள்ளலாம்.

54. அஃதிவண் நுவலாது எழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் **றிசினே**
(தொல். எழுத்து, இளம், 103)

55. கான்கெழு நாடாற் படர்ந் தோர்க்குச்
கண்ணும் படுமோ **என்றிசின்** யானே
(நற்றிணை, 61.9 & 10)

56. ...மாற்றார், உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள்
வாழ்த்திக் காண்கு **வந்திசிற்** கழறொடி யண்ணல்
(பதிற்றுப்பத்து, 64.13-15

57. பாடல்சான்று விறல்வேந்தனும்மே
வெப்புடைய வரண்கடந்து
துப்புறுவர் புறம்**பெற்றிசினே** (புறம், 11.7-9)

58. புறம்பெற்ற வயவேந்தர்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சிற்
சீருடைய விழைபெற்றிசினே (புறம், 11.10-13)

இந்த ஐந்து எடுத்துக்காட்டுக்களில், முதல் எடுத்துக்காட்டில் நிகழும் **நுவன்றிசின்** என்னும் வினைக்குத் தன்மைப்பெயரை எழுவாயாகக் கொண்டு **கூறினேன்** எனப் பொருள் குறிப்பர் இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும். (**நுவன்றிசின்** என்பது இறந்த கால வினைதானா என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும். எனினும் இது நமது ஆய்வினைப் பாதிக்கப்போவதில்லை.) அடுத்த எடுத்துக் காட்டில் **என்றேன்** என்ற பொருள்படும் **என்றிசின்** வினைக்கு **யான்** என்னும் தன்மைப்பெயர் எழுவாயாக உள்ளது. மூன்றாம் எடுத்துக்காட்டில் நிகழும் **காண்கு** என்னும் தன்மை முற்றெச்ச வினையானது, **வந்திசின்** என்ற பயனிலையின் எழுவாயானது தன்மைப் பெயர் என்பதை உணர்த்தும். நான்காம் எடுத்துக் காட்டில் **வேந்தன்** என்பதும், இறுதி எடுத்துக்காட்டில் **பாடினி** என்பதும் எழுவாயாக நிகழ்வதால் இவற்றின் பயனிலையாகிய **பெற்றிசின்** என்னும் வினை முறையே **பெற்றான், பெற்றாள்,** என்ற வினைகளுடன் பொருந்துகின்றது. இதன்பொருள், **பெற்றிசின்** என்னும் வினை ஆண்பாற் பொருண்மைகளை உணர்த்தவல்லது என்பது அல்ல. செய்திசின் வினைகள் மேற்கண்ட எடுத்துக்காட்டுக் களில் தன்மை, படர்க்கைப்பெயர்களை எழுவாயாக ஏற்பதை நோக்குகையில் இவ்வினைகள் மலையாள வினைமுற்றுகளைப் போல் பொது வினைகளாகக் கொள்ளத்தக்கனவாகின்றன. இவ்வாய்ப்பாட்டு வினைகளில் நிகழும் **இசின்** என்னும் வினையைத் துணைவினையாகக் கொள்வதற்கான வாய்ப்பு உண்டா என்ற வினாவுக்கு இப்போதைக்கு நம்மிடம் விடை ஏதும் இல்லை. உரையாசிரியர்கள் மேற்படி வாய்ப்பாட்டு வினை களுக்குப் பொருள் எழுதுகையில் எழுவாயாக நிகழும் பெயருக்கு ஏற்ப **செய்தேன், செய்தான் செய்தாள்** என்ற வாய்ப்பாட்டு வினை களையே குறித்துச் செல்கின்றனர். இது எந்த அளவுக்குப் பொருத்த மானது என்பதைக் கண்டறிய நமக்கு இப்போதைய நிலையில் போதுமான மொழியியல் தடயங்கள் கிடைக்கவில்லை. ஆகவே உரையாசிரியர்களை இந்த வகையில் நம்பித்தான் ஆகவேண்டி

யிருக்கிறது. மேலே (54) முதல் (58) வரை உள்ள எடுத்துக்காட்டுக் களில் நிகழும் செய்திசின் வினனகளில் காணப்படும் செய்து வாய்ப் பாட்டு வடிவங்கள் வினையடிகளின் மாற்றுருபுகளாகும். **செய்து** வடிவங்களையடுத்து நிகழும் **இசின்** (<*இயின் < *இய்+இன்) என்பதனை **இச்** + **இன்** என்ற அமைப்பினதாகக்கொண்டு **இச்** என்பதற்கு இருப்புப்பொருண்மையையும், **இன்** என்பதற்குக் காலப் பொருண்மையையும் குறிக்கலாம். அவ்வாறின்றி, **இசின்** என்பதை ஒற்றை உறுப்பாகக் கொண்டால் [இருப்பு], [காலம்] ஆகிய பொருண்மைகளை அது ஒருங்கே குறிப்பதாகக் கொள்ளப்படும்.[10]

தமிழில் வினைகளின் வரலாற்றை உன்னிப்பாக நோக்கினால் பொதுவினைகள் முதலிலும், திணைபால் எண் இடம் பொருண்மை களை உணர்த்தும் சிறப்புவினைகள் பின்வரும் தோற்றம்கொண்ட நிலையே தென்படுகின்றது. சில பொதுவினைகள் அமைப்பில் மாறுதல் இன்றி சிறப்பு வினைகளாக மாறிய நிலையைத் தமிழில் செய்யும் வாய்ப்பாட்டு வினைகளில் காணலாம். பெரும்பாலான சிறப்பு வினைகள் பொது வினைகளின் அடியாகத் தோன்றியன வாகக் கருதத்தக்கவையாகும். செய்யும் வாய்பாட்டுப் பொதுவினை கள் சிறப்பு வினைகளாய் மலர்ந்த நிலையைப் பின்வரும் எடுத்துக் காட்டுகள் புலப்படுத்தும்

59. இரங்கு முரசின் இனஞ்சால் யானை
முந்நீ ரேணி விறல்கெழு மூவரை
இன்னு மோர்யா னவா வறியேனே
நீயே முன்யான் **அறிவு மோனே** (புறம், 137, 1-4)

60. கறங்குவெள் ளருவி யேற்றலின் நிறம்பெயர்ந்து
தில்லை யன்ன புல்லென் சடையோடு
அள்ளிலைத் தாளி **கொய்யு மோனே** (புறம், 252, 1-3)

61. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப **உணரு மோரே**
(தொல். எழுத்து. இளம், 194)

62. உயர்திணை **என்மனார்** மக்கட்சுட்டே
அஃறிணை **என்மனார்** அவரல பிறவே
ஆயிரு திணையின் **இசைக்குமன** சொல்லே
(தொல். சொல். 1)

63 மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பா லிரண்டென **மொழிமனார்** புலவர்
(தொல். சொல் தெய்வச்சிலையார், 259)

இவ் வெடுத்துக்காட்டுக்களில் முதல் மூன்றில் நிகழும் **அறியுமோன், கொய்யுமோன், உணருமோர்** ஆகிய சிறப்பு வினைகளு , இறுதி இரண்டு எடுத்துக்காட்டுகளில் நிகழும், **என்மனார், இசைக்குமன, மொழிமனார்** ஆகிய சிறப்பு வினைகளும் செய்யும் வாய்ப்பாட்டுப், பொதுவினைகளின் மீது தோன்றியவையாகும்.[11]

செய்யும் வாய்ப்பாட்டு பொதுவினைகளின் மீது தோன்றி யமைந்த சிறப்பு வினைகளைப் போலவே செய்திசின் வாய்ப் பாட்டுப் பொதுவினைகளின்மீது தோன்றியமைந்த சிறப்பு வினை களும் பழந்தமிழில் பரவலாகக் காணப்படுகின்றன.

64. .... உகரம் வருதல்
செவ்வி தென்ப **சிறந்திசி னோரே**
தொல். சொல். இளம். 296)

65. உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல **மாய்ந்திசினோர்** பலரே (புறம் 27. 5)

இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **சிறந்திசினோர் மாய்ந்திசினோர்** ஆகியவற்றுள் நிகழும் **இசின்** என்னும் கிளவி ஒற்றை உறுப்பாயமைந்து காலப் பொருண்மையை மட்டும் உணர்த்துவதாகும். இங்கே இக்கிளவியில் இருப்புப்பொருண்மையின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பு இல்லை. (பார்க்கவும்: அடிக்குறிப்பு 11) **செய்திசினோர்** வினைகளில் அமைந்த **இசினோர்** என்பதை **இச்+இன்** + **ஓர்** எனவும் ஆராயமுடியும். இந்த அமைப்பின்படி **இச்** என்னும் உறுப்பு இருப்புப் பொருண்மையையும், **இன்** என்னும்

உறுப்பு காலப் பொருண்மையையும், ஓர் என்னும் உறுப்பு இயைபுப் பொருண்மையையும் உணர்த்தும்.

பகுதி – 4

ஐயென்கிளவியின் பல திரிபுகளுள் ஈயென்கிளவியும் ஒன்றாகும். ஆகவே ஐயென்கிளவிக்குப் பொருந்திய பொருண்மை அதன் திரிபு களில் ஒன்றாகிய ஈயென்கிளவிக்கும் பொருந்தும். ஈயென்கிளவி வினையடிகளின் மாற்றுருபுகளாகிய செய்து வாய்ப்பாட்டு வடிவங் களையடுத்து நிகழும்

66. ... ... என்
ஒண்டொடி நெகிழினு நெகிழ்க
சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே (அகம் 16, 14–16)

67. அன்னாள் ஒருவன் தன் ஆண்டகை விட்டென்னைச்
சொல்லும் சொற்**கேட்டீ** சுடரிழாய்! (கலித்தொகை,47._78)

68 நோதலு மூண்டீங்கு என்கை **வந்தீ**
செம்மால்நின் பாலுண் ணிய (கலித்தொகை, 85,20 & 21)

இம்மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **சென்றீ கேட்டீ, வந்தீ** ஆகிய வினைகள் ஏவல் அல்லது வியங்கோட்பொருண்மையை உணர்த்துவனவாகும். ஏவலாயின் [இருப்பு + (ஏவல்) (+ ஒருமை)] என்ற பொருண்மையமைப்பையும், வியங்கோளாயின் [இருப்பு + வியங்கோள்] என்ற பொருண்மையமைப்பையும் மேற்படி வினை களில் நிகழும் ஈயென்கிளவி உணர்த்தி நிற்கும். ஈயென்கிளவியின் பொருண்மையமைப்பில் இருப்புப்பொருண்மையின் நிகழ்ச்சியை நியாயப்படுத்தும் வகையில் அமைந்தவையாகும் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள்.

69. செல்க பாகநின் செய்வினை நெடுந்தேர்
பூங்கண் புதல்வன் தூங்குவயின் ஒல்கி
வந்தீக எந்தை என்னும்
அந்தீங் கிளவி கேட்க நாமே (நற்றிணை, 221.7–11_14)

70. அவருள், எக்கடவுள் மற்றக்கடவுளைச் **செப்பீமன்**
(கலித்தொகை, 93.10)

71. பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்!
எங்கேள் இதனகத்து உள்வழிக் **காட்டீமோ**
(கலித்தொகை, 144.17-19)

72. முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகும்
பொய்த்தொருகால் எம்மை முயங்கினை **சென்றீமோ**
(கலித்தொகை, 64 28-29)

73. .. வேற்றுமை யென்கண்ணோ ஓராதி தீதின்மை
தேற்றக் **கண்டீயாய்** தெளிக்கு (கலித்தொகை, 88.15-16)

74. நின்னையான் கழறுதல் வேண்டுமோ
என்னோர்க ளிடும்பையும் **களைந்தீவாய்** நினக்கே
(கலித்தொகை, 100.22-23)

75. கடுமான் மாற **மறவா தீமே** (புறம், 198. 27)

76. ... ...குன்றழல் வெஞ்சுரம்
இறத்திரால் ஐயமற் றிவணிலைமை **கேட்டீமின்**
(கலித்தொகை, 25.11-12)

77. மெலியப் பொறுத்தேன் **களைந்தீமின்** சான்றீர்!
(கலித்தொகை, 142.55)

இவ்வெடுத்துக்காட்டுக்கள் அனைத்திலும் செய்து வாய்பாட்டு வடிவங்களையடுத்து நிகழும் ஈயென்கிளவி ஒரு வினைக்குரிய நிலையில் ஏவல் அல்லது வியங்கோட் பொருண்மையை உணர்த்தும் விகுதிகளை ஏற்று நிகழ்தலைக் காணலாம். இவ்வினையமைப்புக் களில் நிகழும் ஈயென்கிளவி இருப்புப் பொருண்மையை உணர்த்தும் ஐயென்கிளவியின் திரிபாதலால் மேற்படி ஈயென்கிளவியும் இருப்புப் பொருண்மையை உணர்த்துவதாகவே கொள்ளப்படும். ஈயென்கிளவி

ஐயென்கிளவியின் பொருண்மைக்கு உரியதாதலைப் பின்வரும் எடுத்துக்காட்டு தெற்றெனப் புலப்படுத்தும்.

78. ஆயமட மகளிர் எல்லீரும் கேட்டீமின்
ஆயமட மகளிர் எல்லீரும் கேட்டைக்க (சிலம்பு, 18,48-49)

இவ்வெடுத்துக்காட்டில் **கேட்டு** என்பதனையடுத்து நிகழும் **ஐக்க** இரண்டும் ஒரு பொருள் நுதலிவந்ததைக் காணலாம். (69) முதல் (77) வரையிலான எடுத்துக்காட்டுக்களில் ஈயென்னும் வினையடியாகத் தோன்றிய வினையமைப்புக்களில் இருப்புப் பொருண்மையும் ஏவல் அல்லது வியங்கோட் பொருண்மையும் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பாடு பெறுகின்றன. ஆனால் **சென்றீ** (66). **கேட்டீ** (67) **வந்தீ** (68) ஆகிய மூன்று வினையமைப்புக்களிலும் **இருப்பு** மற்றும் ஏவல் அல்லது வியங்கோட் பொருண்மைகள் ஈயென்னும் ஒரே வரிவடிவத்தின் மூலம் வெளிப்பாடு பெறுகின்றன.

ஈயென் கிளவியின் அடியாக மலர்ந்த **ஈத்தை** என்னும் முற்று வினை செய்து வாய்பாட்டு வடிவங்களையடுத்து நிகழும் நிலை பழந்தமிழில் காணப்படுகின்றது.

79. என்பாலால் பாராட் டுவந்தோய் **குடியுண்டீத்தை** யென்
பாராட்டைப் பாலோ சில (கலித்தொகை, 85. 32-33)

80. நின்னோ டுசாவுவேன் **ஈன்றீத்தை** (கலித்தொகை 94. 4)

81. எம்மையும் பொருளாக **மதித்தீத்தை**
(கலித்தொகை, 14. 17)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் நிகழும் **உண்டீத்தை, நின்றீத்தை, மதித்தீத்தை** ஆகிய வினைகள் **செய்தீத்தை** வாய்பாட்டினவாய் அமைந்து, ஏற்கனவே குறிப்பிட்ட செய்தை வாய்பாட்டு வினைகளின் பொருண்மையமைப்புக்கு உரியனவாகின்றன செய்தை வினைகளில் நிகழும் ஐயென்கிளவிக்கு அமைந்த [இருப்பு+ஏவல் + [+ ஒருமை]] என்ற பொருண்மையமைப்பு, செய்தீத்தை வாய்பாட்டு வினைகளில் நிகழும் **ஈத்தை** என்னும் வினையமைப்பையும் தழுவிச் செல்லும். இவ்வினை **ஈத்த்+ஐ** என்ற அமைப்பினதாகி முதல்

உறுப்பு இருப்புப் பொருண்மையையும், இரண்டாம் உறுப்பு [ஏவல் + [+ஒருமை]] என்ற பொருண்மையமைப்பையும் உணர்த்தும். பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் **செய்தீத்தை** வாய்பாட்டில் அமை யாமல் வித்தியாசமாகக் காணப்படுகின்றன.

82. வரிசைப் பெரும்பாட்டோ டெல்லாம் **பருகீத்தை**
தண்டுவெண் ஞாயர் மாட்டைப் பால்
(கலித்தொகை, 85 35-36)

83. வேய்நரல் விடரகம் நீயொன்று **பாடித்தை**
(கலித்தொகை, 40.10)

இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களிலும் **பருகு, பாடு** ஆகிய வினை யடிகளையடுத்து முறையே **ஈத்தை, இத்தை** ஆகிய வடிவங்கள் நிகழ்கின்றன. பிந்தியதில் அமைந்த **இத்தை** என்பது பதிப்பில் நேர்ந்த தவறா அல்லது மூலபாடமே அப்படியா என்று விளங்க வில்லை. மூலபாடமே அப்படித்தான் எனில் **இத்தை** என்பதனை **ஈத்தை** என்பதன் மாற்று வடிவமாகக்கொள்ளலாம். பொருண்மை யமைப்பைப் பொருத்தவரையில் **ஈத்தை** என்பதன் பொருண்மை யமைப்பே **இத்தை** என்பதற்கும் உரியதாகும்.

செய்தீத்தை வாய்பாட்டு வினைகள் செய்வாய் என்னும் வாய்பாட்டு எதிர்கால முன்னிலை வினைகளுடன் பொருந்துமாயின், **ஈத்தை** என்பதனை ஈ + **த்த** + ஐ என மூன்று உறுப்பினவாகக் கொண்டு, முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையையும் இரண்டாம் உறுப்பு எதிர்வுப் பொருண்மையையும், மூன்றாம் உறுப்பு [முன்னிலை + (+ஒருமை)] என்ற பொருண்மையமைப்பையும் உணர்த்துவனவாக ஆராயலாம்.

செய்தீத்தை வாய்பாட்டு வினைகளுக்கு நிகராக அமைவன வற்றுள் **செய்தி** வாய்பாட்டு வினைகளும் அடங்கும். இவ்வாய்பாட்டு வினைகள் பழந்தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

84. கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் **ஒத்தியோ** வீங்குசெலன் மண்டிலம்

பொழுதென **வரைதி** புறக்கொடுத் **திறத்தி**
மாறி **வருதி** மலைமறைந் **தொளித்தி**
அகலிரு விசும்பி னானும்
பகல்**விளங் குதி**யாற் பல்கதிர் விரித்தே (புறம், 8.5-10)

இவ்வெடுத்துக்காட்டில் நிகழும் **ஒத்தி, வரைதி, இறத்தி, வருதி, ஒளித்தி, விளங்குதி** ஆகிய செய்தி வாய்பாட்டு வினைகள் கால வினைகளாய் அமைந்து **செய்+த்+இ** என்ற வாய்பாட்டு அமைப்பினை மேற்கொண்டு, இரண்டாம் உறுப்பு காலப் பொருண்மையையும், மூன்றாம் உறுப்பு [இருப்பு + முன்னிலை + (+ ஒருமை)] என்ற பொருண்மையமைப்பையும் உணர்த்துவனவாய் நிகழ்கின்றன. இவ்வினைகள் **செய்து+இ** என்ற வாய்பாட்டு அமைப்பினவாகக் கொள்ளப்பட்டால், இவ்வமைப்பில் நிகழும் இகரக்கிளவி [இருப்பு + காலம் + முன்னிலை + (+ ஒருமை)] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகும். எடுத்துக்காட்டுக்கள் (37), (38), (39)-இல் நிகழும் **உண்டி, காட்டி, ஊக்கி** ஆகிய வினைகள் காலவினைகளாய் நிகழுமாயின் இவற்றில் அமைந்த இகரக்கிளவியும் மேலே குறிப்பிட்ட பொருண்மையமைப்புடன் பொருந்தும். **காட்டி, ஊக்கி** ஆகிய வினைகளின் பகுதி **செய்து** வாய்பாட்டு வடிவின அல்லவாதலால் இவற்றை **காட்டு + இ, ஊக்கு + இ** என்று பிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதனைக் கருத்தில் கொண்டு **செய்தி** வினைகளைச் **செய்து+இ** என்ற அமைப்பினவாகக் கொள்வதே பொருந்தும் என்று தோன்றுகின்றது.

ஐயென்கிளவியின் திரிபாகிய ஈயென்கிளவி வினைக்குரிய தகுதியுடன் முற்றாகவும் எச்சமாகவும் செய்து வாய்பாட்டு வடிவங்களையடுத்துச் செயல்படும் நிலையினைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம். ஒவ்வொரு எடுத்துக்காட்டிலும் அடைப்புக்களில் மேலும் கீழுமாக இரண்டு வினையமைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மேலே நிகழும் வினையமைப்பு பாடத்திலும், கீழே நிகழும் வினையமைப்பு நம்மால் குறிக்கப்பெற்று இலக்கிய வழக்கிலும் காணப்படுவனவாகும்.

85. பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியாய்
யாதொன்றும் வாளாது { **இறந்தீவாய்!** / இறப்பாய்! } கேளினி
(கலித்தொகை, 56.27-28)

86. நன்றும், தடைஇய மென்றோளாய் { **கேட்டீவாய்!** / கேட்பாய் } ஆயின்
(கலித்தொகை, 93.5)

87. தூதுவந் தன்றே தோழி
துயரறு கிளவியோடு { **அயர்ந்தீகம்** / அயர்கம்/அயர்வோம் } விருந்தே
(கலித்தொகை, 32.18-19)

88. மறைநின்று, தாமன்ற { **வந்தீத்தனர்** / வந்தார் }
(கலித்தொகை, 86.28)

89. முலையிடைத் துயிலும் { **மறந்தீத்தோய்** / மறந்தோய் }
(கலித்தொகை, 128.14)

90. பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால்!
எங்கேள் இதனகத்து உள்வழிக் காட்டீமோ

{ **காட்டீயாய்** / காட்டாய் } ஆயின் கதநாய் கொளுவுவேள்
(கலித்தொகை, 144.17-

91. பண்டின்னை யல்லைமன் ஈங்கெல்லி { **வந்தீய** / வர }
கண்ட தெவன்மற் றுரை (கலித்தொகை, 93.8-

92. யாயும் அறிய { **உரைத்தீயின்** / உரைக்கின்/உரைத்தால் } யானுற்ற
நோயும் களைகுவைமன் (கலித்தொகை, 111 23-24

93. அன்ன தன்மை { அறிந்தீயார் / அறியாது/அறியாமல் }
நின்னது தாவென நிலைதளர
... ... குறுங்கூளியர்
பரந்தலைக்கும் பகையொன் றென்கோ
(புறம். 136. 10-11, 13-14)

இவ்வெடுத்துக்காட்டுக்கள் அனைத்திலும் அடைப்புக்களில் மேலே நிகழும் வினையமைப்புக்களில் செய்து வாய்பாட்டு வடிவங்களை யடுத்து நிகழும் ஈயென்கிளவி இருப்புப் பொருண்மையை உணர்த்து வதால், மேற்படி அடைப்புக்களில் கீழே நிகழும் வினைகளின் பொருண்மையமைப்பிலும் இருப்புப்பொருண்மை இடம்பெற்றாக வேண்டும். ஏனெனில் மேலும் கீழுமாக அமைந்த வினையமைப்புக் கள் ஒரே பொருளனவாகும். இதன்மூலம் அறியலாகும் ஓர் உண்மை யாதெனில் பயனிலைச் செயற்பாட்டில் நிகழும் வினைகளாகட்டும், எச்சச் செயற்பாட்டில் நிகழும் வினைகளாகட்டும் அவற்றின் பொருண்மையமைப்பில் இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்பதேயாகும். அடைப்புக்களில் கீழே நிகழும் வினைகளில் எந்த வரிவடிவத்தின் பொருண்மையமைப்பில் இருப்புப் பொருண்மை இடம்பெறும் என்பது வினையமைப்பைப் பொறுத்து முடிவு செய்யப்படவேண்டியதாகும். கால இடைநிலை என்று ஒன்று தனியாகச் சுட்டப்படும் வினைமுற்றுக்களில் அவ்விடைநிலையை அடுத்து நிகழும் முற்று விகுதியின் பொருண்மையமைப்பிலும், எச்ச வினைகளில் எச்சவிகுதிகளின் பொருண்மையமைப்பிலும் இருப்புப் பொருண்மை இடம்பெறும். செய்கு மற்றும் செய்யும் வாய்பாட்டு வினைகளில் குகரக்கிளவியும், உம்மைக்கிளவியும் தம் பொருண்மை யமைப்பில் இருப்புப் பொருண்மையை ஏற்றுச்செயல்படும். இருப்புப் பொருண்மையை உணர்த்தும் வினையடிகளின் மீது அமைந்த வினையமைப்புக்களில் பகுதியே இருப்புப் பொருண்மையை உணர்த்துவதால் மீண்டுமொருமுறை முற்று விகுதிகளிலோ, எச்ச விகுதிகளிலோ இருப்புப் பொருண்மையைச் சுட்ட வேண்டிய தில்லை. (சுட்டுவதால் நேரும் இழுக்கும் ஒன்றுமில்லை).

ஈயென்கிளவியின் அடியாகத் தோன்றிய வினையமைப்புக்கள் செய்து வாய்பாட்டு வடிவங்களையடுத்து நிகழாமல் தொழிற்பெயர்

கவென மரபிலக்கணிகளால் குறிக்கப்படும் வடிவங்களையடுத்து நிகழும் நிலையும் பழந்தமிழில் காணப்படுகின்றது.

94. முரசு முழங்கு நெடுநகர் அரசு { **துயிலீயாது** / துயிலாது/துயிலாமல் }
(பதிற்றுப்பத்து, 12 7)

95. போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதிவாய்த் { **தோன்றலீயாது** / தோன்றாது/தோன்றாமல் } தம்பழி யூக்குநர்
(பதிற்றுப்பத்து, 71. 10-11)

96. கந்து { **கோளியாது** / கொள்ளாது/கொள்ளாமல் } காழ்பல முருக்கி
(பதற்றுப்பத்து, 77.8)

97. கட்போர் உளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பின் அல்லது { **கொடுத்தல்** ஈயாது / கொடுக்காது/கொடுக்காமல் }
உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்*
(சிலம்பு, 5.115-117)

இவ்வெடுத்துக்காட்டுக்களுள் முதல் இரண்டில் நிகழும் **துயிலீயாது, தோன்றலீயாது** ஆகிய வினையமைப்புக்கள் வினை (யெச்ச) த்திரி சொல்லாகக் குறிக்கப் பெற்று **துயிலாது, தோன்றாது** என்ற எச்ச வினைகளின் பொருளனவாகப் பதிற்றுப்பத்தின் பழைய உரை கொள்கின்றது (உ. வே. சா பதிப்பைப் பார்க்கவும்). இறுதி இரண்டு எடுத்துக்காட்டுக்களில் ஈயென் அடியாகத் தோன்றிய எச்ச வினைகள் **கோள், கொடுத்தல்** ஆகிய தொழிற் பெயர்களையடுத்து நிகழ்கின்றன. இத் தொழிற்பெயர்கள் வினையடிகளின் மாற்றுருபு களாகக் கொள்ளத்தக்கனவாதலால், வினையடிகள் அனைத்தும் தொழிற்பெயர்களாகக் கொள்ளத்தக்கவை என்பது தெளிவாகின்றது. எடுத்துக்காட்டு (94)-இல் நிகழும் **துயிலீயாது** என்பதில் உள்ள

*இந்த எடுத்துக்காட்டை எனது பார்வைக்குக் கொணர்ந்த எனது ஆராய்ச்சி மாணவி திருமதி மைக்கேல் சரோஜினிபாய்க்கு நன்றி.

துயில் என்னும் சொல் தொழிற் பெயராகச் செயல்படுவதால் **துயிலாது/துயிலாமல்** என்பதில் நிகழும் **துயில்** என்னும் வினையடியும் தொழிற் பெயராகவே கொள்ளப்படும். ஈயென்கிளவியின் அடியாகத் தோன்றிய பல வினையமைப்புக்கள் வினையடிகளின் மாற்றுருபுகளாகிய செய்து வாய்பாட்டு வடிவங்களையடுத்தே நிகழ்வதால், மேற்படி வாய்பாட்டு வடிவங்களும் தொழிற்பெயர்களாய்க் கொள்வதற்குரிய தகுதியைப்பெறுகின்றன. (94) முதல் (97) வரையுள்ள நான்கு எடுத்துக்காட்டுகளிலும் அடைப்புக்களில் மேலே நிகழும் வினையமைப்புக்களின் பொருண்மையமைப்பில் தென்படும் இருப்புப் பொருண்மை, மேற்படி அடைப்புக்களில் கீழே நிகழும் **துயிலாது / துயிலாமல், தோன்றாது / தோன்றாமல், கொள்ளாது / கொள்ளாமல், கொடுக்காது / கொடுக்காமல்** ஆகிய எச்ச வினைகளின் பொருண்மையமைப்பிலும் இடம்பெற்றாக வேண்டும். இவ்வினைகளின ஈற்றில் நிகழும் துகரக் கிளவி மற்றும் அல்லென் கிளவி ஆகியவற்றின் பொருண்மையமைப்பில் இருப்புப் பொருண்மை இடம்பெறும். இக்கிளவிகளின் பொருண்மையமைப்பு [இருப்பு + காலம்] என்று அமையும்.

தமிழ் வினைகளின் வரலாற்றில் ஏற்பட்ட விபத்து, இருப்புப் பொருண்மையை உணர்த்தும் ஐயென்கிளவியின் திரிபாகிய ஈயென் கிளவியும் இருப்புப் பொருண்மையதே என்பதை உணராமற் போனதாகும். இதன் விளைவு, ஈயென்கிளவியின் பொருண்மை **தருதல்** எனத் தவறாகக் கொள்ளப்பட்டு, தருதற் பொருண்மையதாகிய **தா** என்னும் வினை ஈயென்வினைக்குப் பக்கத்தில் சேர்க்கப் பட்டுவிட்டது. இந்த நிலையை பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

98. யாரைநீ எம்மில் **புகுதர்வாய்** (கலித்தொகை 98. 1)

99. மெய்ம்மலி யுவகையன் **புகுதந்தான்**
கலித்தொகை 40. 32)

100. அளைமாரிப் **பெயர்தருவாய்** (கலித்தொகை 108. 26)

101. தோளிடைப் **புகுதந்து** (கலித்தொகை 105. 32)

102. தெறுகதிர் **திகழ்தரும்** உழுகெழு ஞாயிறு
(பதிற்றுப்பத்து 52. 29)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் **புகு, பெயர், திகழ்** ஆகிய வினையடிகளை அடுத்து நிகழும் **தா** என்னும் வினை **செய்தல்** என்ற பொருண்மையது என நாம் கருதிய காலம் ஒன்று உண்டு' (கோதண்டராமன் இரா. 1976:8) இந்தக் கருத்தினை மாற்றிக் கொள்ளவேண்டிய நிலையில் இப்பொழுது நாம் இருக்கிறோம். மேல் எடுத்துக்காட்டுக்களில் நிகழும் தாவென்கிளவி ஐயென்கிளவியின் மாற்றுருபாகக் கொள்ளத்தக்கதாகும். இதனடிப்படையில் தாவென் கிளவி மேற்படி எடுத்துக்காட்டுக்களில் இருப்புப்பொருண்மையை உணர்த்துவதாகக் கொள்ளப்படும். மேல் எடுத்துக்காட்டுக்கள் ஐந்திலும் நிகழும் தாவென்கிளவி யமைந்த வினையமைப்புக்கள் புலவர்களின் படைப்பாகவே கருதத்தோன்றுகின்றது. பேச்சு வழக்கில் இது எந்தக் காலத்திலும் நிகழ்ந்திருக்குமா என்பதும் ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாகும்.

இவ்வாய்வினை முடிப்பதற்கு முன் ஐயென்கிளவியின் நெடிற்கிளவியைப்பற்றியும் சிறிது கூறியாக வேண்டும். ஐயென்கிளவியின் நெடிற்கிளவி ***ஆய்** என்பதாகும். இவ்வடிவம் ஐயென்கிளவியின் தாய்வடிவமாகிய ***அய்** என்ற குறில் வடிவத்தின் நெடிற்கிளவியாகும். ஐயென்கிளவியின் மாற்றுருபுகளாகக் கொள்ளத்தக்க வடிவங்களுள் ***ஆய்** என்னும் நெடிற்கிளவியும் ஒன்றாகும். இதன் நிகழ்ச்சியைப் பின்வரும் எடுத்துக்காட்டில் காணலாம்.

103. மலர்காணின் **மையாத்தி** நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று (குறள், 1112)

இவ்வெடுத்துக்காட்டில் நிகழும் **மையாத்தி** என்னும் வினையமைப்பு **மயங்குதி/மயங்குவாய்** என்று பொருள்படும். இவ்வினையமைப்பில் நிகழும் மையென்கிளவியானது **மயங்குதி/மயங்குவாய்** என்பதில் உள்ள **மயங்கு** என்பதன் மாற்றுருபாகும். மையென் கிளவியை அடுத்து நிகழும் **ஆத்தி** என்னும் முன்னிலைவினை **ஆய்+த்த்+இ** என்ற அமைப்பினதாயின் முதல் உறுப்பு இருப்புப்பொருண்மையை

யும், இரண்டாம் உறுப்பு காலப் பொருண்மையையும், மூன்றாம் உறுப்பு [முன்னிலை+காலம்+[+ஒருமை]] என்ற பொருண்மை யமைப்பையும் உணர்த்துவனவாய் அமையும். அவ்வாறின்றி **ஆத்து+இ** என்ற அமைப்பினதாய்க் கொண்டால் முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையையும், இரண்டாம் உறுப்பாகிய இகரக்கிளவி [முன்னிலை+காலம்+[+ஒருமை]] என்ற பொருண்மையமைப்பை யும் உணர்த்தி நிற்கும். **ஆத்தி** என்பதில் நிகழும் **ஆ** என்னும் வடிவம் ***ஆய்** என்பதன் திரிபாகும். அதாவது, ஐயென்கிளவிக்கு ***ஆய்** என்பதின் மூலம் கிடைத்த மாற்றுருபாகும். இந்த **ஆ** என்னும் வடிவம்.

பகுதி-5

இருப்புப் பொருண்மையை உணர்த்தும் ஐயென்கிளவியை மையமாகக் கொண்டு இதுவரை நிகழ்த்திய ஆய்வு மாற்றிலக்கணச் சிந்தனையைப் பின்புலமாகக் கொண்டதாகும். ஐயென்கிளவி பல்வேறு சூழல்களில் உணர்த்தும் பொருண்மையமைப்பு பல்வேறு கிளவியாக்க விதிகளின் நிகழ்ச்சிக்கு வித்திடுவதாய் உள்ளது. கிளவி யாக்க விதி என்பது ஒரு குறிப்பிட்ட பொருண்மையமைப்பு வரி வடிவம் பெறுவதற்குக் காரணமாய் இருப்பதாகும். கிளவியாக்க விதியின் உட்கிடை அமைப்பு (Input Structure) இரண்டு உறுப்புக்களைக் கொண்டதாய் இருக்கும். முதல் உறுப்பு பொருள் கோட் கிளவியாகும். இரண்டாம் உறுப்பு பொருண்மையமைப் பாகும். பொருள்கோட்கிளவியாக **ஆகு** என்னும் பொருளற்ற ஓர் கற்பிதக் கிளவியை நாம் புதையமைப்பில் அமைத்துக்கொள்கிறோம். கற்பிதக் கிளவியாகிய இந்தப் பொருள்கோட்கிளவியின் பணி, பொருண்மை உறுப்புக்களைத் தனியாகவோ தொகுப்பாகவோ கவர்ந்து சூழலுக்கேற்ற வரிவடிவமாக மாறி அமைவதாகும். புதை யமைப்பில் பொருள்கோட்கிளவி தேவைக்கேற்பப் பலவாக பிரதி யாக்கம் செய்துகொள்ளத்தக்கதாகும். ஒரு குறிப்பிட்ட அமைப்பைப் பற்றிய ஆய்வில் ஒரே ஒரு பொருள்கோட்கிளவிதான் புதை யமைப்பில் குறிக்கப்படும். இந்த அமைப்பில் X, Y, என்ற இரண்டு பொருண்மை உறுப்புக்கள் இருப்பதாகக் கொள்வோம். புறஅமைப்பில் இவ்விரண்டு பொருண்மை உறுப்புக்களையும் Z என்ற ஒரே ஒரு

வரிவடிவம் உணர்த்துமாயின் பொருள்கோட்கிளவி பிரதியாக்கத்துக்கு உட்படாது. பொருள்கோட் கிளவியானது குறிப்பிட்ட இரண்டு பொருண்மை உறுப்புக்களையும் கவர்ந்து பின்வரும் கிளவியாக்கவிதி செயல்பட வகைசெய்யும்.

104. ஆகு + [X+Y] >Z/–

குறிப்பிட்ட இரண்டு பொருண்மையமைப்புக்களும் புற அமைப்பில் A,B என்று இருவேறு வடிவங்களில் வெளிப்பாடு பெறுவதாகக் கொள்வோம். இப்போது, புதையமைப்பில் நிகழும் பொருள்கோட் கிளவி ஒரு முறை பிரதியாக்கம் செய்து கொள்ளப்படும். இதன் விளைவாக நமக்கு இரண்டு பொருள்கோட்கிளவிகள் கிடைக்கின்றன. இவ்விரண்டு பொருள்கோட் கிளவிகளும் குறிப்பிட்ட இரண்டு பொருண்மையமைப்புக்களைத் தனித்தனியாகக் கவர்ந்து பின்வரும் கிளவியாக்க விதிகள் செயல்பட வகைசெய்கின்றன.

105. (அ) ஆகு + [X] > A/–
(ஆ) ஆகு + [Y] > B/

பொருள்கோட்கிளவியைப் பிரதியாக்கம் செய்தல், பொருண்மை உறுப்புக்களைப் பொருள்கோட்கிளவிகள் கவர்தல் ஆகியவை விகாரங்கள் மூலம் நிகழ்வனவாகும். விகாரங்கள் செயல்பட்ட பிறகு கிளவியாக்க விதிகள் செயல்படும். கிளவியாக்க விதிகள் மூலம் வருவிக்கப்பட்ட வரிவடிவங்களுக்கிடையில் நிகழும் விட்டிசையைத் தவிர்க்கும் வகையில் கிளவியாக்க விதிகளைத் தொடர்ந்து சேர்க்கை விகாரம் (Adjunction Transformation) ஒன்று செயல்படும். இது முடிந்த பிறகு தேவையெனில் சந்திவிதிகள் செயல்படும். இந்த விதிகள் செயல்பட்ட பிறகு கிடைக்கும் அமைப்பே புற அமைப்பாகும்.

மேலே குறிக்கப்பெற்றுள்ள கோட்பாட்டுப் பின்னணியில், இந்த ஆய்வில் நாம் கண்ட பல்வேறு வினையமைப்புக்களை வருவிப்பதைப் பற்றி இனி நாம் சிந்திக்கலாம். வருவிப்பு முறை மிகச் சுருக்கமாகவே அமையும். கிளவியாக்க விதிகள் மட்டுமே குறிக்கப் பெறும் பொருள்கோட்கிளவி எங்கெங்கே பிரதிசெய்யப்படும் என்பது அங்கங்கே சுட்டப்பெறும். சேர்க்கை விகாரம் செயல்பட்டதாகக் கொண்டு சந்திவிதிகள் குறிக்கப்பெறும். இந்த விதிகள் தேவைப்

படாவிட்டால் இவைபற்றிய குறிப்புகளுக்கு இடமில்லை. இந்தச் சிறு குறிப்புக்களைக் கருத்தில்கொண்டு, வருவிக்கப்படவேண்டிய வினையமைப்புக்களுக்கு இனி வருவோம். ஒவ்வொரு வினையமைப்பும் அதனுடன் பொருண்மையமைப்பில் பொருந்தும் அமைப்புக்களுடன் குறிக்கப்பெறும். இந்த வகையில் முதலில் சுருக்க அமைப்பும், பின்னர் விரிந்த அமைப்பும் சுட்டப்பெற்று அதே வைப்பு முறையில் அவை வருவிக்கப்பெறும். வினையமைப்புக்குக் கொடுக்கப்பட்டுள்ள எண்களே, அவை வருவிக்கப்படும் விதிகளுக்கும் கொள்ளப்படும். பெரும்பாலும் வினையமைப்புக்கள் வாய்பாட்டு முறையிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

106. 1) மள்ளர் கையதை கூர்வாள் (எடுத்துக்காட்டு 9)

2) 1) மள்ளர் கையில் உள்ள கூர்வாள்

2) மள்ளர் கையில் உள்ளதாகிய கூர்வாள்

3) 1) மள்ளர் கையில் இருந்த கூர்வாள்

2) மள்ளர் கையில் இருந்ததாகிய கூர்வாள்

1. **கையதை** என்பதில் உள்ள **அது** + ஐ என்ற அமைப்பை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு+[இருப்பு+காலம்[+ஒன்றன்பால்]]>அது

ஆ) ஆகு + [இருப்பு + காலம்] > ஐ/ அது–

குறிப்பு: [காலம்] இறப்பாகவோ நிகழ்வாகவோ கொள்ளத் தக்கதாகும்.

2. 1. **கையில் உள்ள** என்பதில் நிகழும் **உள்ள** என்பதனை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒரு முறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2. 1. அ) ஆகு + [இருப்பு + நிகழ்வு]> உள்

ஆ) ஆகு + [இருப்பு + நிகழ்வு] அ / உள்–

குறிப்பு: **உள்ள** என்பதில் நிகழும் அகரக்கிளவி**, கையதை** என்பதில் உள்ள ஐயென்கிளவியின் பொருண்மையமைப்புக்குரியது.

சந்திவிதி: **உள் + அ** என்பது **உள்ள** என மாறும்.

2. 2. **கையில் உள்ளதாகிய** என்பதில் நிகழும் **உள்ளதாகிய** என்ற அமைப்பை வருவிக்க பொருள்கோட்கிளவி மும்முறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2. 2) அ) ஆகு + [இருப்பு + நிகழ்வு]> உள்
ஆ) ஆகு + [+ ஒன்றன்பால்]> அது/உள்
இ) ஆகு + [இருப்பு]> ஆகு
ஈ) ஆகு + [நிகழ்வு]> இய/ஆகு – பெயர்

சந்திவிதி: **உள் + அது** என்பது **உள்ளது** என மாறும்.

3. 1. **கையில் இருந்த** என்பது உள்ள **இருந்த** என்னும் அமைப்பை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **இருந்த** என்பதில் நிகழும் அகரக்கிளவி **கையதை** என்பதில் உள்ள ஐயென்கிளவியின் பொருண்மையமைப்புக்குரியது

3. 1) அ) ஆகு + [இருப்பு]> இரு
ஆ) ஆகு + [இறப்பு]> ந்த் இரு–
இ) ஆகு + [இருப்பு + இறப்பு]> அ / – பெயர்

3. 2. **கையில் இருந்ததாகிய** என்பதில் உள்ள **இருந்ததாகிய** என்ற அமைப்பை வருவிக்க பொருள்கோட்கிளவி நான்குமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

3. 2) அ) ஆகு + [இருப்பு] > இரு
ஆ) ஆகு + [இறப்பு] > ந்த்/இரு–
இ) ஆகு + [+ ஒன்றன்பால்] > அது/ந்த்–
ஈ) ஆகு + [இருப்பு] > ஆகு
உ) ஆகு + [இறப்பு] > இய/ஆகு-பெயர்.

107. 1) விளைந்தது
2) விளைந்ததை (எடுத்துக்காட்டு 11)

விளைந்தது என்பதில் கால இடைநிலையையும், முற்று விகுதியையும் வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதி யாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு + [இறப்பு] > ந்த்/விளை–
ஆ) ஆகு + [இருப்பு + இறப்பு + [ஒன்றன்பால்]] > அது/ந்த்–

2. விளைந்ததை என்பதில் கால இடைநிலை, முற்றுவிகுதி, ஐயென்கிளவி ஆகியவற்றை வருவிக்க பொருள்கோட்கிளவி இரு முறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2. அ) ஆகு + [இறப்பு] > ந்த்/விளை–
ஆ) ஆகு + [+ ஒன்றன்பால்] > அது/ந்த்–
இ) ஆகு + [இருப்பு + இறப்பு + [ஒன்றன்பால்]] > ஐ/அது–

3. விளைந்ததாயிற்று என்பதில் கால இடைநிலைகள், முற்று விகுதிகள், இருப்புவினை ஆகியவற்றை வருவிக்க பொருள்கோட் கிளவி நான்குமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

3. அ) ஆகு + [இறப்பு] > ந்த்/விளை–
ஆ) ஆகு + [+ ஒன்றன்பால்] > அது/ந்த்–
இ) ஆகு + [இருப்பு] > ஆகு
ஈ) ஆகு + [இறப்பு] > இன்/ஆகு
உ) ஆகு + [+ ஒன்றன்பால்] > த்து/இன்–

சந்திவிதிகள்: அ) ஆகு > ஆய் / –இன்
ஆ) இன் + த்து > இற்று

(108) 1) மறக்க

2) மறப்பார் **ஆக**

3) **மறந்தைக்க** (எடுத்துக்காட்டு 25)

1. **மறக்க** என்பதில் **க்க** என்பதை **க்க் + அ** எனக்கொண்டால் பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1 1) அ) ஆகு + [இருப்பு] > க்க்/மற-

ஆ) ஆகு + [வியங்கோள்] > அ/க்க்-

மறக்க என்பதை **மறக்கு + அ** என்ற அமைப்பினதாகக் கொண்டால் **மறக்கு** வினையடியின் மாற்றுருபாகக்கொள்ளப்படும். ஒரே ஒரு கிளவியாக்க விதி செயல்படும்.

1 2) ஆகு + [இருப்பு + வியங்கோள்] > அ

சந்திவிதி: மற > மறக்கி/-அ

2. **மறப்பார் ஆக** என்பதை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **மறப்பார்** என்பதில் **மறப்பு** என்பது வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

2 அ) ஆகு + [மரியாதை] > ஆர்

ஆ) ஆகு + [இருப்பு] > ஆகு

இ) ஆகு + [வியங்கோள்] > அ/ஆகு-

சந்திவிதி: மற > மறப்பு / -ஆர்

3. **மறந்தைக்க** என்பதை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒரு முறை பிரதியாக்கம் செய்யப்படும். **மறந்து** என்பது வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

3 அ) ஆகு + [இருப்பு] > ஐ

ஆ) ஆகு + [வியங்கோள்] > க்க/ஐ-

சந்திவிதி: மற > மறந்து/ -ஐ

109. 1. 1) செய்யாய் (வாய்பாட்டு ஏவல் வினை)
2) செய்தை (எடுத்துக்காட்டுக்கள் 29-32)
3) செய்தி (எடுத்துக்காட்டுக்கள் 37-39)
4) செய்தீ (எடுத்துக்காட்டுக்கள் 66-68)

2. 1) செய்தைப்பாய் (எடுத்துக்காட்டு 34)
2) செய்தீத்தை (எடுத்துக்காட்டுக்கள் 79-81)
3) செய்தீயாய் (எடுத்துக்காட்டு 73)
4) செய்தீவாய் (எடுத்துக்காட்டு 85)

3. 1. செய்தைகா (எடுத்துக்காட்டு 33)
2. செய்திகா (எடுத்துக்காட்டு 36)
3 செய்திகும் (எடுத்துக்காட்டுக்கள் 40 & 41)
4. செய்திசின் (எடுத்துக்காட்டுக்கள் (51)-(53)
5. செய்தீக (எடுத்துக்காட்டு 69)
6. செய்தீமோ (எடுத்துக்காட்டு 72)

மேலே 109 (1)-இல் நிகழும் வினையமைப்புக்களை வருவிக்க பின் வரும் கிளவியாக்க விதி செயல்படும்.

1. ஆகு + [இருப்பு + ஏவல் + [+ ஒருமை]] > { ஆய் / ஐ / இ / ஈ }

சந்திவிதிகள்: அ) செய் > செய்து / — { ஐ / இ / ஈ }

ஆ) $(C_1)\breve{V}C_2 > (C_1)\breve{V}C_2C_2$ /— உயிரொலி
C_2 = ய்

109 2), 3_இல் உள்ள வினையமைப்புக்களைப் பெற பொருள் கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2 அ) ஆகு + [இருப்பு] { ஐ / ஈ }

ஆ) ஆகு + [ஏவல் + [+ஒருமை]] > { ஆய் / ஐ }

சந்திவிதிகள்: அ) ஐ > ஐப்பு /– ஆய்

ஆ) ஈ > [ஈத்து / { ஈய் / ஈவ் }] / – [ஐ / ஆய்]

மேலே 2)–இல் உள்ள கிளவியாக்க விதிகளும், சந்திவிதிகளும் 109(2)–இல் உள்ள வினையமைப்புக்களை வருவிப்பனவாகும்.

3 அ) ஆகு + [இருப்பு] > { ஐ / இக் / இச் / ஈ }

ஆ) ஆகு+[ஏவல்+[+ஒருமை]] > [கா / { ஆ / உம் } / இன் / { க / மோ }] / – [ஐ / இக் / இச் / ஈ]

சந்திவிதி: செய் > செய்து/– { ஐ / இக் / இச் / ஈ }

மேலே (3)–இல் உள்ள கிளவியாக்கம் மற்றும் சந்திவிதிகள் 109 (3)–இல் குறிக்கப்பெற்றுள்ள வினையமைப்புக்களை வருவிப்பன வாகும்.

(110) 1) செப்பாய்

2) **செப்பீமன் (எடுத்துக்காட்டு 70)**

1. **செப்பாய்** என்னும் ஏவல் வினை, 109 (1)–இல் **நிகழும்** செய்யாய் வாய்பாட்டு வினையப்போல் வருவிக்கப்படும்.

2. **செப்பீமன்** வினையை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒரு முறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2. அ) ஆகு + [இருப்பு] > ஈ

ஆ) ஆகு + [ஏவல்+[+ஒருமை]] > மன்/ஈ–

111. 1) கேளுங்கள்

2) கேண்மின்

3) கேட்டீமின் (எடுத்துக்காட்டு 76)

இவ்வினைகள் அனைத்தையும் வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1) அ) ஆகு+[இருப்பு]> { உம் / ம் / ஈ }

ஆ) ஆகு+[ஏவல்+மரியாதை]> [கள் / இன் / மின்] [உம் / ம் / ஈ]

சந்திவிதி: ள் > ண் /–ம் (கேள் > கேண்/–ம்)

112. 1) 1) மயங்குவாய் (நிகழ்வு அல்லது எதிர்கால முன்னிலை வினை)

2) மயங்குதி

2) **மையாத்தி** (எடுத்துக்காட்டு 103)

1. முதல் இரண்டு வினைகளை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1) அ) ஆகு + [–இறப்பு] > { வ் / த் } மயங்கு–

ஆ) ஆகு+[இருப்பு+[இறப்பு]+முன்னிலை+[+ஒருமை]] > [ஆய் / இ]/[வ் / த்]–

2. **மையாத்தி** என்னும் வினையை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2) அ) ஆகு + [இருப்பு] > ஆ
ஆ) ஆகு + [–இறப்பு] > த்த்/ஆ–
இ) ஆகு + [முன்னிலை + [+ ஒருமை]] > இ/த்த்–

சந்திவிதி: மயங்கு > மை/–ஆ

113. 1) 1) அயர்வோம்
2) அயர்கம்
2) **அயர்ந்தீகம்** (எடுத்துக்காட்டு 87)

1. முதல் இரண்டு வினைகளை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1) அ) ஆகு + [எதிர்வு] > {வ் / க்}

ஆ) ஆகு + [இருப்பு + எதிர்வு + தன்மை + [–ஒருமை]] > [ஓம் / அம்] / [வ் / க்]–

2. **அயர்ந்தீகம்** என்னும் வினையை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2) அ) ஆகு + [இருப்பு] > ஈ +
ஆ) ஆகு + [எதிர்வு] > க்/ஈ–
ஈ) ஆகு + [தன்மை + [–ஒருமை]] > அம்/க்–

114 1) வந்தேன்
2) வந்திசின் (எடுத்துக்காட்டு 56)

1. **வந்தேன்** என்பதை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு+[இறப்பு]>ந்த்/வா–

ஆ) ஆகு+[இருப்பு+இறப்பு+தன்மை+
[+ஒருமை]]>ஏன்

சந்திவிதி: வா>வ/–ந்த்

2. **வந்திசின்** என்னும் வினையமைப்பை இரண்டு முறைகளில் வருவிக்கலாம்.

வருவிப்புமுறை 1: பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **வந்து** என்னும் வடிவம் வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

2. 1) அ) ஆகு+[இருப்பு]>இச்

ஆ) ஆகு+[இறப்பு[>இன்/இச்–

சந்திவிதி: வா>வந்து/இச்

வருவிப்புமுறை 2: பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **வந்து** என்னும் மாற்றுருபுக்கு இடமில்லை.

2. 2) அ) ஆகு+[இறப்பு]>ந்த்/வா–

ஆ) ஆகு+[இருப்பு]>இச்

இ) ஆகு+[இறப்பு]>இன்/இச்–

சந்திவிதி: வா>வ/–ந்த்

குறிப்பு: **வந்திசின்** என்னும் வினை பொதுவினையாதலால் இதன் பொருண்மையமைப்பில் [தன்மை], [+ஒருமை] ஆகிய பொருண்மை உறுப்புக்களுக்கு இடமில்லை.

115. 1. மறந்தோய்

2. **மறந்தீத்தோய் (எடுத்துக்காட்டு 89)**

1. **மறந்தோய்** என்னும் வினையை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒரு முறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு + [இறப்பு] > ந்த்/மற-

ஆ) ஆகு + [இருப்பு + இறப்பு + முன்னிலை +
[+ ஒருமை]] > ஓய்

2. **மறந்தீத்தோய்** என்ற வினையமைப்பை வருவிக்க பொருள் கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **மறந்து** என்னும் வடிவம் வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

2. அ) ஆகு + [இருப்பு] > ஈ

ஆ) ஆகு + [இறப்பு] > த்த்/ஈ-

இ) ஆகு + [முன்னிலை] + [+ ஒருமை]] > ஓய்

சந்திவிதி: மற < மறந்து / -ஈ

116. 1) வந்தார்

2) வந்தனர்

3) **வந்தீத்தனர் (எடுத்துக்காட்டு-88)**

1. **வந்தார்** என்னும் வினையை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு + [இறப்பு] > ந்த் / வா-

ஆ) ஆகு + [இருப்பு + இறப்பு + மரியாதை] > ஆர்

சந்திவிதி: வா > வ/-ந்த்

2. **வந்தனர்** என்பதை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

2. அ) ஆகு + [இறப்பு] > ந்த்/வா-

ஆ) ஆகு + [இருப்பு] > அன்/ந்த்-

இ) ஆகு + [மரியாதை] > அர்/அன்-

சந்திவிதி: வா > வ/-ந்த்

குறிப்பு: இந்த ஆய்வில் அன்னென்கிளவி சாரியையாகக் கொள்ளப்படவில்லை.

3. **வந்தீத்தனர்** என்னும் அமைப்பை வருவிக்க பொருள்கோட் கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **வந்து** என்னும் வடிவம் வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

3. அ) ஆகு + [இருப்பு] > ஈ

ஆ) ஆகு + [இறப்பு] > த்த்/ஈ–

இ) ஆகு + [மரியாதை] > அனர்/த்த்–

சந்திவிதி: வா > வந்து/–ஈ.

குறிப்பு: அன்னென் கிளவி இந்த **ஆய்வில்** இலக்கண முக்கியத்துவம் இல்லாமல் போகின்றது.

117. 1) காட்டாய்

2) காட்டவில்லை

3) 1) காட்டமாட்டாய்

2) காட்டியாய் (எடுத்துக்காட்டு 90) இவ்வினை, **ஆயின்** என்னும் எச்சவினையின்முன் நிகழ்கிறது.

1. **காட்டாய்** என்னும் எதிர்மறை வினையை இரண்டு முறை களில் வருவிக்கலாம்

வருவிப்புமுறை: 1. **காட்டாய்** என்பதைக் **காட்டு+ஆ + அய்** என்ற அமைப்பினதாகக் கொள்ளுதல். இந்த அமைப்பினை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு+[எதிர்மறை] > **ஆ**

ஆ) ஆகு+[இருப்பு+காலம்+முன்னிலை+[+ஒருமை]]> அய்/ஆ–

சந்திவிதி: ஆ+அய்>ஆய்

வருவிப்புமுறை 2. காட்டாய் என்பதைக் **காட்டு+ஆய்** என்ற அமைப்பினதாகக் கொள்ளுதல். பொருள்கோட்கிளவி பிரதியாக்

கத்துக்கு இடமில்லை. பொருள்கோட்கிளவியானது [எதிர்மறை+ இருப்பு + காலம் + முன்னிலை[+ ஒருமை]] என்ற பொருண்மை யமைப்பைக் கவர்ந்து **ஆய்** என வெளிப்பாடு பெறும்.

2. **காட்டவில்லை** என்பதில் நிகழும் **இல்லை** என்பதை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப் படும். **காட்டல்** என்பது வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

2. 1) ஆகு + [எதிர்மறை] > இல்

2) ஆகு + [இருப்பு+காலம்] > ஐ/இல்–

சந்திவிதி. **இல்+ஐ** என்பது **இல்லை** எனவும் **காட்டு** என்பது எதிர்மறைக் கிளவியின் முன் **காட்டல்** எனவும் அமையும்.

குறிப்பு: **காட்டவில்லை** என்பது ஒரு பொது வினையாகும். ஆகவே இரண்டாம் கிளவியாக்க விதியில் இயைபும் பொருண்மை கள் சுட்டப்பெறவில்லை. (Kothandaraman, R. 1978: 103–108)

3. **காட்டமாட்டாய், காட்டீயாய்** ஆகிய அமைப்புக்களை இரண்டு முறைகளில் வருவிக்கலாம்.

வருவிப்புமுறை-1: இவ்வினையமைப்புக்களில் நிகழும் **மாட்டாய், ஈயாய்** ஆகிய அமைப்புக்களை முறையே **மாட்டு + ஆ + அய், ஈ + ஆ + அய்** என்ற அமைப்பினவாகக் கொள்ளுதல். இவ் வமைப்புக்களை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதி யாக்கம் செய்யப்படும்.

3. அ) ஆகு + [இருப்பு] > {மாட்டு / ஈ}

ஆ) ஆகு + [எதிர்மறை] > ஆ / {மாட்டு / ஈ} —

இ) ஆகு + [இருப்பு + காலம் + முன்னிலை + [+ ஒருமை]] > அய் / ஆ–

சந்திவிதி: அ) ஆ + அய் > ஆய்

ஆ) காட்டு > காட்ட/–மாட்டு.

வருவிப்புமுறை-2: **காட்டமாட்டாய், காட்டீயாய்** ஆகியவற்றில் உள்ள **மாட்டாய், ஈயாய்,** ஆகியவற்றை முறையே **மாட்டு + ஆய், ஈ + ஆய்** என்ற அமைப்பினவாகக் கொள்ளுதல். இவ்வமைப்புக் களை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். முதல் பொருட்கோட்கிளவி இருப்புப்பொருண்மையைக் கவர்ந்து **மாட்டு, ஈ** என அமையும். இரண்டாம் பொருள்கோட் கிளவி [எதிர்மறை + இருப்பு + காலம் + முன்னிலை + [+ ஒருமை]] என்ற பொருண்மையமைப்பைக் கவர்ந்து **ஆய்** என அமையும். **காட்டு** என்பது **மாட்டு** என்பதன்முன் **காட்ட** எனத்திரியும்.

118. 1) 1) மறவாதீர்

2) **மறவாதீம் (எடுத்துக்காட்டு–75)**

இவ்வினைகளை வருவிக்க பொருள்கோட்கிளவி இருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு + [எதிர்மறை] > ஆ

ஆ) ஆகு + [இருப்பு] > த்/ஆ–

இ) ஆகு + [ஏவல் + மரியாதை] > {ஈர் / ஈம்} த்—

சந்திவிதி: மற > மறவ்/–ஆ

119. 1) 1) அறியாது

2) அறியாமல்

2) **அறிந்தீயார் (முற்றெச்சம், எடுத்துக்காட்டு–93)**

1. முதல் இரண்டு எச்ச வினைகளையும் வருவிக்க பொருள் கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும்.

1. அ) ஆகு + [எதிர்மறை] > {ஆ / ஆம்} /அறி–

ஆ) ஆகு + [இருப்பு + இறப்பு] > [து / அல்] / [ஆ / ஆம்] —

2. அறிந்தியார் என்னும் முற்றெச்சத்தை வருவிக்க பொருள் கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **அறிந்து** என்பது வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

2. அ) ஆகு + [இருப்பு] > ஈ

ஆ) ஆகு + {எதிர்மறை + இறப்பு + மரியாதை] > ஆர் / ஈ—

சந்திவிதி: அறி > அறிந்து / —ஈ

120. 1) 1) உரைக்கின்

2) உரைத்தால்

2) **உரைத்தீயின்** (எடுத்துக்காட்டு 92)

1. முதல் இரண்டு வினைகளையும் வருவிக்க பொருள்கோட் கிளவி பிரதியாக்கம் செய்யப்படவேண்டியதில்லை.

1. ஆகு + [இருப்பு + நிபந்தனை] > {இன் / ஆல்}

சந்திவிதி: உரை > [உரைக்கு / உரைத்து] / — [இன் / ஆல்]

2. **உரைத்தீயின்** என்னும் வினையமைப்பை வருவிக்க பொருள்கோட்கிளவி ஒருமுறை பிரதியாக்கம் செய்யப்படும். **உரைத்து** என்பது வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும்.

2) அ) ஆகு + [இருப்பு] > ஈ

ஆ) ஆகு + [நிபந்தனை] > இன் / ஈ—

சந்திவிதி: உரை > உரைத்து / ஈ

அடிக்குறிப்புக்கள்

1. **ஐயென்** கிளவி தொடர்புள்ள எடுத்துக்காட்டுக்களில் [இருப்பு + விளி + [ஒருமை]] என்ற பொருண்மையமைப்பினை உணர்த்துவதாகக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. ஏனெனில் **கண்ணே, மணியே** என்ற கொஞ்சு மொழிகள் **கண்ணானவனே, மணியானவனே** என்றோ **கண்போன்று உள்ளவனே, மணி போன்று உள்ளவனே** என்றோ விரிக்கத்தக்கனவாய் அமைந்து **கண்ணே, மணியே** என்பனவற்றில் நிகழும் (ஐயென்கிளவியின் திரிபாகிய) ஏகாரக்கிளவி இருப்புப் பொருண்மையுட்பட பல பொருண்மைகளை உணர்த்துவனவாய் அமைகின்றன.

2. இவ்வாய்வில் (15) முதல் (20) வரையுள்ள எடுத்துக்காட்டுக் களில் நிகழும் **உரைத்ததை, சிதைத்ததை, வருவதை, ஊர்ந்ததை, பூண்டதை, அமர்ந்ததை** ஆகிய கனவ வினைகளை இன்னொரு கோணத்திலும் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக (15)–இல் நிகழும் **உரைத்ததை** என்ற வினையமைப்பு **உரைத்தபொழுது** அல்லது **உரைத்தகாலம்** எனவும் விரிக்கற்பாலதாகலின் மேற்படி வினையமைப்பை **உரைத்தபொழுதானது** அல்லது **உரைத்தகாலமானது** என்ற தொடர்களுடனும் பொருத்தலாம். இந்த வகையிலும் ஐயென் கிளவி **ஆனது** என்பதன் பொருண்மையமைப்புக்கு உரியதாகின்றது

இதனைக் கருத்தில்கொண்டு எடுத்துக்காட்டுக்கள் (2),(3)–இல் நிகழும் **மகளை, நாடனை** ஆகியவற்றை முறையே ***மகள் ஆனவளை** (= மகள் ஆனவளே), ***நாடன்** ஆனவனை (= நாடன் ஆனவனே) என விரிக்கலாம். இவ்விரிவமைப்புக்களில் நிகழும் ஐயென்கிளவி [விளி + [+ ஒருமை]] என்ற பொருண்மையமைப்பை மட்டுமே உணர்த்தும். ஆனால் **மகளை, நாடனை** என்பனவற்றில் நிகழும் ஐயென்கிளவி இத்தகையதன்று. ஆகவேதான் இக்கிளவி அடிக்குறிப்பு(1)_ல் குறிக்கப்பெற்றுள்ள[இருப்பு + விளி + [+ ஒருமை]] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகின்றது. இதிலும் ஒரு திருத்தம் தேவைப்படுகின்றது. **மகளை, நாடனை** ஆகியவை **மகள் ஆனவளை *நாடன் ஆனவனை** என விரிக்கற்பாலனவாகலின், மேற்படி குறுக்க வடிவங்களில் நிகழும் ஐயென் கிளவிக்கு உரிய

பொருண்மையமைப்பில் காலப்பொருண்மையும் இடம்பெறவேண்டும் என்பது பெறப்படுகின்றது.

3. **இருப்பாய் ஆக** என்ற தொடரில் நிகழும் **இருப்பாய்** என்னும் வினை **இருப்பு+ஆய்** எனக்கொள்ளப்படும். இவ்வமைப்பில் நிகழும் **இருப்பு** என்னும் வரிவடிவம் **இரு** என்னும் வினையடியின் மாற்றுருபாகக் கொள்ளப்படும். [முன்னிலை + [+ஒருமை]] என்ற பொருண்மையமைப்புக்கு உரிய **ஆய்** என்னும் விகுதி இயைபு விகாரத்தின் துணைகொண்டு வருவிக்கப்படும்.

4. **இருந்தைக்க, இருப்பாய் ஆக** ஆகிய வியங்கோள் வினைகளில் இருப்புப் பொருண்மை **இரு, ஐ, ஆகு** என மூன்று வரிவடிவங்களில் வெளிப்பாடு பெறுகின்றன. முதல் வினையில் இப்பொருண்மை **இரு, ஐ** ஆகிய வடிவங்களிலும் இரண்டாம் வினையில் **இரு, ஆகு** என்ற வடிவங்களிலும் வெளிப்பாடுபெறுகின்றன. **இருக்க** என்ற வினையமைப்பில் **–க்க** என்பது இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சியைக் குறிக்க வேண்டியதில்லை என்றே தோன்றுகின்றது. ஏனெனில் **இருக்க** என்பதில் பகுதியே இப்பொருண்மையை உணர்த்திவிடுகின்றது. **இருந்தைக்க, இருப்பாய்ஆக** ஆகிய வினைகளில் இருப்புப்பொருண்மை பிரதிசெய்யப்பட்டாக வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது இந்த நிர்ப்பந்தத்தை **இருக்க** என்ற வியங்கோள் வினையின் மீது சுமத்த வேண்டாம் என்றே தோன்றுகின்றது. சுமத்தித்தான் தீர வேண்டுமென்றால் இங்கும் இருப்புப் பொருண்மையைப் பிரதி செய்வதைத் தவிர வேறுவழியில்லை. இந்த வகையில் **இருக்க** என்பதில் நிகழும் **க்க** என்னும் வடிவம் **க்க+அ** எனப்பிரிக்கப்பட்டு முந்திய உறுப்பு இருப்புப் பொருண்மையையும் உணர்த்துவனவாகக் கொள்ளப்படும். தள்ளவோ கொள்ளவோ முடியாத ஒருவகை ஆய்வாகும் இது. இருப்பு வினைகளைத் தவிர ஏனைய வினையடிகளின் அடியாகத் தோன்றிய செய்க வாய்பாட்டு வியங்கோள் வினைகளில் நிகழும் ககரக்கிளவி [இருப்பு+வியங்கோள்] என்ற பொருண்மையமைப்பைக் குறித்து நிற்கும். ககரக்கிளவியை **க் + அ** என்ற அமைப்பினதாகக் கொண்டால் ககர ஒற்று இருப்புப்பொருண்மையையும், அதனையடுத்து நிகழும் அகரக்கிளவி வியங்கோட் பொருண்மையையும் உணர்த்துவதாகக் கருதலாம்.

5. செய்தை வாய்பாட்டு வினைகளை இன்னொரு வகையி லும் அணுகலாம். **செய்+த்+ஐ** என்ற அமைப்பினதாக இவ்வாய் பாட்டு வினைகளைக் கொள்ளும் பட்சத்தில் இரண்டாம் உறுப் பாகிய தகர ஒற்று இருப்புப் பொருண்மையையும் ஈற்றுறுப்பாகிய ஐயென்கிளவி [ஏவல் + [+ ஒருமை]] என்ற பொருண்மையமைப் பையும் உணர்த்துவதாகக் கொள்ளலாம். இவ்வாய்பாட்டு வினைகளை எதிர்கால வினைகளாய்க் கொள்ள நேர்ந்தால் தகர ஒற்று காலப் பொருண்மையையும், ஐயென்கிளவி [இருப்பு+காலம் + முன்னிலை + [+ ஒருமை]] என்ற பொருண்மையமைப்பையும் உணர்த்துவனவாகும். ஐயென்கிளவியின் பொருண்மையமைப்பு எப்படியெல்லாம் மாறியமையும் என்பதை இந்த ஆய்வு புலப்படுத்து வதைக் காணலாம்.

6. **காண்டைப்பாய்** என்னும் ஏவல் வினை **கண்டைப்பாய்** என்று அமையும் நிலையும் காணப்படுகின்றது. **புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே!** (கலித்தொகை 89.13) என்ற எடுத்துக் காட்டில் நிகழும் **காண்டைப்பாய்** என்ற வினைக்கு **கண்டைப்பாய்** என்றும் ஒரு பாடல் இருப்பதாகக் கழகப்பதிப்பில் குறிக்கப் பெற்றுள்ளது. கழகப் பதிப்பாகலின் இந்தப் பாடம் எந்த அளவுக்கு நம்பகத் தன்மை வாய்ந்தது என்பது சிந்திக்கற்பாலதாகும்.

7. அகவற் பாடல்களில் ஈற்றடி ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவதைப் பழந்தமிழ்ப் பாடல்களில் காணலாம். (நிலைமண்டில அகவற்பா இதற்கு விலக்கு.) இந்த ஏகாரம் *அய் என்பதன் திரி பாகக் கருதத்தக்கதாகும். ஐயென்கிளவியின் இருப்புப் பொருண் மையை இந்த ஏகாரத்துக்கும் உரிமையாக்க முடியும். ஓர் எடுத்துக் காட்டின் மூலம் இதனை விளக்கலாம்.

அ) வருவர் வாழி தோழி........
கன்மிசை யருவிய காடிறந் தோரே (அகம், 25.18&22

இந்த எடுத்துக்காட்டின் வாக்கிய அமைப்பினைப் பின்வருமாறு உரைநடைப் படுத்திக்கொள்ளலாம்.

ஆ) தோழி! கன்மிசையருவிய காடிறந்தோர் வருவரே (ஆ)-வில் நிகழும் இறுதி ஏகாரக்கிளவியை ஐயென்வினையின் திரிபாகக் கொண்டு ***தோழி! கன்மிசையருவிய காடிறந்தோர் வருவர் ஆவர்** என்று மேற்படி பிரிவில் நிகழும் வாக்கியத்திற்குப் பொருள் உரைக்கலாம். (அ) பிரிவில் நிகழும் வாக்கிய அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு ***வருவர்... காடிறந்தோர் ஆனவர்** எனவும் பொருளுரைக்கலாம். இந்த ஆய்வு அகவற்பாடல்களில் ஈற்றடி ஈற்றுச்சீரில் நிகழும் ஏகாரக் கிளவியை வெறும் யாப்பு வயப்பட்ட உறுப்பாகக் கொள்ளாமல் இருப்புப்பொருண்மையைக் குறிக்கும் உறுப்பாய்க் கொள்வதற்கு வகை செய்கின்றது. பொருண்மை விளக்கம் பெறாத நிலையில் இந்த ஏகாரக்கிளவி யாப்பு வயப்பட்ட உறுப்பாகக் கொள்ளப்பட்டதில் வியப்பொன்று மில்லை.

8. **செய்(ம்)மோ** வாய்ப்பாட்டு ஏவல்வினைகளை **செய்+மோ** என்ற அமைப்பினவாகக் கொண்டு **மோ** என்பதனை முன்னிலை அசைச்சொல்லாகக் கொள்வார் தொல்காப்பியர். (சொல்லதிகாரம், 270. தெய்வச்சிலையார்) வரலாற்று நிலையில் **செய்(ம்)மோ** வாய்பாட்டு வினைகள் ***செய்ம்+ஓ** என்ற அமைப்பினவாகி முதல் உறுப்பாகிய **செய்ம்** வாய்ப்பாட்டு வினைகள் ஏவற் பொருண்மையை உணர்த்தினவாகக் கொள்வது பொருத்தமாக அமையும். தொல்காப்பியரின் ஆய்வு முறையில் நிகழும் மோவென் கிளவி பிறழ்பிரிப்பால் தோற்றம் கொண்டதாகும்.

9. செய்திகும் வாய்பாட்டு வினைகள் தன்மைப்பன்மை வினைகளாகக் கொள்ளத்தக்கனவாயின், அவற்றில் நிகழும் இகும் என்னும் கிளவியைச் **செய்கும்** வாய்பாட்டு வினையாகக்கொண்டு **இ+க்+உம்** அல்லது **இ+கும்** என ஆராயலாம். செய்கும் வாய்பாட்டு வினைகளைக் இகுமைன் கிளவியுடன் தொடர்புபடுத்துவது எந்த அளவுக்குப்பொருந்தும் என்று தோன்றவில்லை. ஏனெனில் செய்திகும் வாய்பாட்டு வினைகள் தன்மை, படர்க்கை மற்றும் ஏவல் ஆகிய பொருண்மைகளை அவை தோற்றம் கொண்ட காலக்கட்டத்தில் உணர்த்தியிருக்கும் என்று கருதமுடியாது.

10. செய்திசின் வாய்பாட்டு இறந்தகால வினைகளுக்கு நிகராக அமைந்தவையாகும் மலையாளத்தில் காணப்படும் செய்து

வாய்பாட்டு வினைமுற்றுக்கள். **இசின்** என்னும் வினையமைப்பு [இருப்பு+இறப்பு] என்ற பொருண்மையனதாகலின் இப்பொருண்மை யமைப்பு **செய்து** வினைகளில் நிகழும் துகரக்கிளவிக்கும் பொருந்துவ தாகின்றது. திராவிட மொழிகளில் அமையும் வினையமைப்புக்களில் இருப்புப்பொருண்மையின் நிகழ்ச்சி ஒரு பொதுமைப் பண்பாக அமையும் என்பது நமது கருதுகோள்.

செய்திசின் வினைகளில் நிகழும் **இசின்** என்னும் கிளவியில் இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சிக்கு வாய்ப்பில்லை; அது காலப்பொருண்மையை மட்டுமே உணர்த்தும் என்று ஒரு வாதம் எழுமாயின் அதற்கு நமது விடை இப்படி இருக்கும்: **இருப்பு வினைக் குரிய சிறப்பியல்புகளில் ஒன்று, தனது பொருண்மையை இழந்து வேறு பொருண்மையை உணர்த்தி நிற்பதாகும். இதன்படி இசின் இருப்புப்பொருண்மையை இழந்து, காலப்பொருண்மையை உணர்த்தி நிற்கிறது.**

11. **என்மனார், இசைக்குமன** ஆகிய எடுத்துக்காட்டுக்களில் செய்யும் வினைகளின்மீது அமைந்த இன்னொரு வகையான பொது வினைகளும் நிகழ்கின்றன. இவற்றைச் **செய்யுமன்** அல்லது **செய்(ம்)மன்** வாய்பாட்டு வினைகளாகக் கொள்ளலாம். **என்மனார், இசைக்குமன** ஆகிய வினைகள் இந்த இரண்டாவது வகைப் பொதுவினைகளின் மீது தோன்றியவையாகும். இவ்வகைப் பொது வினைகளைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

அ) பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய **முடியுமன்** பொருளே

(தொல். சொல். தெய்வச்சிலையார், 227)

ஆ) மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
இன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபில் **தோன்றுமன்** பொருளே

(தொல். சொல். தெய்வச்சிலையார், 385)

இவ்வெடுத்துக்காட்டுக்களில் **முடியுமன், தோன்றுமன்** ஆகியவற்றில் நிகழும் **அன்** என்னும் கிளவி **ஆகும்** என்ற வினைக்கு நிகராகி [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகின்றது. செய்யும் வாய்பாட்டு வினைகளையடுத்து நிகழும் அன் என்னும் கிளவி ஒரு புதிய சிக்கலை உண்டாக்கியிருக்கின்றது. அன்னென் கிளவி மேற்படி பொருண்மையமைப்புக்கு உரியதாயின் அதன் முன் நிகழும் செய்யும் வாய்பாட்டு வினையில் உள்ள உம்மைக்கிளவியின் பொருண்மையமைப்பு எத்தகையது என்பதே அச்சிக்கல். அன்னென் கிளவி, செய்யும் வினைகளையடுத்து நிகழாத நிலையில் மேற்படி வினைகளில் நிகழும் உம்மைக் கிளவி [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பினையும், அன்னென் கிளவி நிகழும் நிலையில் [காலம்] என்ற பொருண்மையையும் உணர்த்தி நிற்கும். ஆக, **செய்யுமன்** வினைகளில் காலம் இருமுறை நிகழ்தல் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். செய்யும் வினைகளில் உம்மைக்கிளவி ஓர் இருப்பு வினையாகும். இவ்வினை அன்னென் கிளவி தன்னையடுத்து நிகழாத போது தன் பொருண்மையை இழக்காமல் இன்னொரு பொருண்மையைக் கவர்ந்தும், மேற்படி கிளவி தன்னையடுத்து நிகழ்கையில் தன் பொருண்மையை இழந்து வேறொரு பொருண்மையை உணர்த்தியும் நிகழ்வதைக் காணலாம். இருப்பு வினைக்குரிய பண்புகளில் இவ்விரண்டும் அடங்கும்.

செய்யுமன் (<செய்யும்+அன்) வினைகளைச் செய்மன் வினைகளாகக் கொண்டு பிந்தியவற்றை **செய்+மன்** எனக்கொண்டது பிறழ்பிரிப்பால் நேர்ந்த விபத்தாகும். இதற்குக் காரணம் அன்னென் கிளவியின் பொருண்மையமைப்பு, இருப்பு வினைகளின் பண்புகள் ஆகியவை அறியப்படாமல் போனதேயாகும்.

சுருக்க விளக்கம்

அகம்:	அகநானூறு;	இளம்.	இளம்பூரணர்;
எழுத்து:	எழுத்ததிகாரம்;	குறள்:	திருக்குறள்;
சிலம்பு:	சிலப்பதிகாரம்;	சொல்:	சொல்லதிகாரம்;
தொல்:	தொல்காப்பியம்;	புறம்:	புறநானூறு;

இக்கட்டுரையில் கையாண்ட பழந்தமிழ் இலக்கியங்களின் பதிப்பு பற்றிய தகவல்கள்:

1. அகநானூறு (கழகம்)
2. ஐங்குறுநூறு (அவ்வை சு. துரைசாமிப்பிள்ளை)
3. கலித்தொகை (கழகம்)
4 குறுந்தொகை (உ. வே. சாமிநாதையர்)
5. சிலப்பதிகாரம் (உ வே. சாமிநாதையர்)
6. திருக்குறள் (கழகம், (பரிமேலழகர் உரை))
7. தொல்காப்பியம் (கழகம்)
8. நற்றிணை (கழகம்)
9. பதிற்றுப்பத்து (உ. வே. சாமிநாதய்யர்)
10 பரிபாடல் (கழகம்)
11. புறநானூறு (உ. வே. சாமிநாதய்யர்)

கருவி நூல்கள்

1. Kothandaraman, R. (1975), ma:ṭṭu in Future Negation. *Ayvukovai*-7 (Proceedings of the All India University Tamil Teachers' Conference.)

2. கோதண்டராமன் இரா. (1976), வினைப்பகுதிகளும், கால இடைநிலைகளும் (**வையை,** மலர் 3. மதுரைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை வெளியீடு)

3. Kothandaraman R. (1978), A Brief on the Negatives in Tamil. *Ayvukkovai*-10. Vol. 2. (Proceedings of the All India University Tamil Teachers' Conference).

4. கோதண்டராமன் இரா. (வெளிவரும்), அறிந்த முகங்களில் அறியாத முகங்கள். (**மொழியியல்**)

மொழியியல் 2,4 (1979)

பேச்சுத்தமிழ் இலங்கையிலும் தமிழகத்திலும்

சி. ஏசுதாசன்
அண்ணாமலைநகர்

0. எடுப்புரை:

0.1. இந்தியாவில் வழக்கிலிருக்கும் 1652 மொழிகளில், 15 மொழிகள் இந்திய தேசிய மொழிகளாக (Indian National Languages) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.[1] அவைகளில் ஒன்றான தமிழ் மொழியும் தமிழகத்தில் பெரும்பான்மையினரால் மட்டுமின்றி இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களிலும், இலங்கை (SriLunka) கயானா (Gyuana), குவாடிலோப் (Guadelope), ஜமைக்கா (Jemaikka), டிரினிடாட் (Trinidad), தாய்லாந்து (Thailand), தென் ஆப்பிரிக்கா (South Africa), தென்வியட்னாம் (South Vietnam), பர்மா (Burma), நியூகலடோனியா (New Caledonia), ஃபிரான்சு கய்யானா (French Guiana), ஃபிஜி (Figi), மலேசியா (Malasiya), மார்ட்டினிக் (Martinique), மோரிசு (Maurtius) போன்ற பிற நாடுகளிலும் பல ஆண்டுகளுக்கு முன் குடியேறிய

சிறுபான்மை தமிழ் இனத்தினரால் பேசப்பட்டு வருகின்றது. (கோதண்டராமன் 1976). தமிழ் பேசப்படும் அயல்நாடுகளில் இலங்கை தமிழகத்தின் வெகு அண்மையில் உள்ள நாடு. இந் நாட்டில் உள்ள மக்கட்தொகையில் 20 விழுக்காட்டினர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இங்கு பேசும் தமிழ்மொழி வேற்றுமொழியோ என ஐயுறும் வண்ணம் வேறுபட்டு விளங்கு கின்றது.

0·2. புவியியல் (Geological), தாவரயியல் (Botanical), விலங்கியல் (Zoological) ஆராய்ச்சிகளும் இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் குறிப்பாக தமிழகத்திற்கும் சில குறிப் பிட்ட ஒற்றுமைகள் இருப்பதாகக் காட்டுகின்றன. தற்போதைய புவியியலாரும், ஆழ்கடல் ஆராய்ச்சியாளரும் (Oceanographers) இலங்கையும் தென்னிந்தியாவும் இன்னும் பல கண்டங் களும் முன் ஒரு காலத்தில் ஒரே நிலப்பரப்பாய் இருந்திருக்க லாம் என்ற கருத்தை வெளியிடுகின்றனர். இவ்விரு நாடு களும் குறுகிய நீர்ப்பகுதியால் பிரிக்கப்பட்ட பின்னரும் தத்தமக்குள் வியாபாரம், அரசியல் முதலியவைகளில் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. இலங்கையில் முதன் முதலில் நாகர்கள் என்ற திராவிட இனத்தவர் வாழ்ந்தனர் எனவும் பின்னர் வந்த தமிழர்கள் முற்குடி யக்களுடன் இரண்டறக்கலந்து தற் போதைய தமிழ்க் குடியினர் வந்தனர் என்றும் கணபதிப்பிள்ளை யவர்கள் கூறுகின்றார். (கணபதி பிள்ளை 1958:220). எவ்வாறு இருப்பினும் கி பி. முதல் நூற்றாண்டுத் தொடக்க காலத்தில் இருந்து பரவலாக தெரிய வந்திருக்கும் இலங்கை வரலாற்றுக் காலத்திலேயே தமிழர்கள் அங்கு வாழ்ந்தார்கள் என்ற செய்தி நமக்குத் தெரிய வருகின்றது. சங்க இலக்கியக் கோவையின் முத்துக்களாகிய குறுந்தொகையிலும் (34-6) அகநானூற்றிலும் (376-18) இலங்கையில் உள்ள மரந்தை என்ற கப்பற்துறையைப் பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன. இன்னும் ஈழத்துப் பூதன் தேவனார் என்ற புலவர் சங்க இலக்கியக் கோவையில பல பாக்கள் கோத்துள்ளார் என்ற செய்தியும் தெரிய வருகின்றது. (மீனாட்சி சுந்தரன் 1964). இன்னும் தென்னிந்திய வரலாற்றைப் புரட்டுவோ மானால் சோழ அரசன் ஏலாலசிங்கன் என்பவனும், சேர அரசன்

செங்குட்டுவன் என்பவனும் தத்தமது அரியணைக் காலத்தில் இலங்கையைத் தத்தமது அரசாணையின் கீழ்க் கொணர்ந்ததாகத் தெரிய வருகின்றது. எனவே தமிழர்கள் இலங்கையில் பழங்காலத்தி லிருந்தே குடியேற வாய்ப்புக்கள் நிறைய இருந்தன என்பது மறுக்க முடியாத ஒன்று. இங்கு பேசப்படும் தமிழ்மொழி பல வகைகளில் தாய்த் தமிழோடு ஒன்றுபட்டும் (Resembles), மாறுபட்டும் (Changes), வேறுபட்டும் (Differences) காணக் கிடக்கின்றது.

0.3. இலங்கையில் பேசப்படும் தமிழ் மொழியை, கிளை மொழி ஆராய்ச்சியாளர்களாகிய கமில் வி. சுவிலாபில் (Kamil V. Zvelebil) என்பவரும் சுசீந்திர இராஜா (Suseendira Rajah) என்பவரும் யாழ்ப்பாணம் (Jaffna), மட்டக்களப்பு (Banticaloa), திரிகோண மலை (Trincomalee) என முப்பெரும் நிலக்கூற்றுக் கிளைமொழிப் (Regional dialects) பரப்புகளாகப் பிரிப்பர். இங்கு சமூகக் கிளை மொழி (Sociolect) வேறுபாடுகளைத் தமிழகத்தில் பிரிப்பது போன்று, (பிராமணர்கள் பேச்சு வழக்கு, பிராமணர் அல்லாதார் பேச்சு வழக்கு, தாழ்த்தப்பட்டோர் பேச்சுவழக்கு என்று) பிரிக்க முடியாது என்ற திடமான கருத்தை சுசீந்திர இராஜா அவர்கள் கொண்டுள்ளார்கள். இன்னும் அங்குள்ள மக்களின் சமூக அமைப்பு (Social set up) இந்திய மக்களைப் போன்று குறிப்பாகத் தமிழகத்து மக்களைப்போன்று குலம் என்னும் குறுகிய அளவைக்குள் இல்லை என்றும், அவ்வாறு குல அடிப்படையில் பார்ப்பினும் முகமதியர்கள் பேச்சு வழக்கு, முகமதியர்கள் அல்லாதார் பேச்சு வழக்கு என இரண்டாக ஒரு சில வேற்றுமைகளைக்கொண்டு மட்டும் பிரிக்கலாம் என்றும் கருதுகின்றுர் (சுசீந்திர இராஜா 1967). இலங்கையில் உள்ள கிளைமொழிகளில் மட்டக்களப்பு கிளைமொழி தற்போதைய பொதுத் தமிழுக்கு (பொ. தமிழ்)[2] (Standard Tamil) மிகவும் அண்மையில் உள்ளதாக சுவிலாபில் கருதுகின்றுர் (சுவிலாபில் 1966: 138).

0.4. இலங்கைக் கிளை மொழிகளில் காணப்படும் பழந்தமிழ் இலக்கணக் கூறுகளையும், அதன் தனித் தன்மைகளையும், அது பேச்சு பொதுத் தமிழ் (பே. பொ. தமிழ்)[3] பால் கொண்டுள்ள வேறுபாடுகளையும், அது தமிழகத்தின் தென்கிளை மொழி களிடத்து, குறிப்பாக கன்னியாகுமரி கிளைமொழி இடத்தும்

(க. மொழி)[4], விளவங்கோடு துணைக் கிளை மொழியிடத்தும் (வி. மொழி)[5] கொண்டுள்ள தொடர்புகளையும், அத்தொடர்புகளுக்கான காரணங்களைப் பற்றியும் இங்கு காண்போம். இலங்கைத் தமிழின் கிளை மொழி மாதிரிகள் (forms) சுசீந்திர இராஜா அவர்களது வெளியீடுகளில் இருந்தும் (சுசீந்திர இராஜா, 1967; 1973; 1976), கணபதிப் பிள்ளையவர்களின் வெளியீட்டில் இருந்தும் (கணபதிப்பிள்ளை 1958), முத்துச் சண்முகம் பிள்ளையவர்களின் வெளியீடுகளில் இருந்தும் (சண்முகம் பிள்ளை 1962; 1973) கமில் வி. சுவிலாபில் அவர்களது வெளியீடுகளில் இருந்தும் (சுவிலாபில் 1969; 1960; 1966), ஜெபம்பவதாரணி எழுதிய "ஞானா" என்கிற சிறுகதையில் இருந்தும் (ஜெபம்பவதாரணி 1977) எடுத்தாளப் பட்டுள்ளன.

1.0. இலங்கைத் தமிழில் காணப்படும் பழந்தமிழ்க் கூறுகள்

பழந்தமிழில் காணப்படும் சில இலக்கணக் கூறுகள் தமிழகத்தில் காணப்படும் இக்காலப் பே. பொ. தமிழிலோ அல்லது பொ. தமிழிலோ அல்லது தமிழகத்தில் காணக் கிடக்கும் கிளை மொழிகளிலோ காணப்படவில்லையாயினும், அவைகள் இன்னும் அழியா வண்ணம் இலங்கைத்தமிழில் (இ. தமிழ்) நிலை கொண்டு பேச்சு மொழியிலும் சில கூறுகள் எழுத்து மொழியிலும் பரவலாகக் காணக் கிடக்கின்றன.

1.1 பழந்தமிழில் காணப்படும் சுட்டுப்பெயர்களில் அண்மைச் சுட்டும், இடைச் சுட்டும், சேய்மைச் சுட்டும் இ. தமிழில் இன்னும் வழக்கில் இருக்கின்றன. ஆயின் தமிழகத்தில் பொ. தமிழிலும், பே. பொ. தமிலும் அண்மை, சேய்மை ஆகிய இருசுட்டுகளுமே நிலை கொண்டு இருக்கின்றன. எடுத்துக்காட்டாக இ. தமிழில் உள்ள **உது**, (intermediate) it', **உவன்**, that (intermediate) he'' **உவள்**, 'that (intermediate) she', **உங்கெ**, '(intermediate) there' **உப்பெ**, '(intermediate) then' என்கின்ற இடைச்சுட்டுப் பெயர்கள் சங்கத் தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன. பின் கூறிய **உங்கெ, உப்பெ** என்கின்ற இரு எடுத்துக் காட்டுகளும் சங்கத் தமிழில் காணப்படவில்லை. இவைகள் சங்கத்தமிழில் தற்செயலாக விடுபட்டனவாகவோ (accidental gap), அல்லது இ. தமிழில்

ஏனையவைகளைப் பார்த்து உருவாக்கப்பட்டனவாகவோ (anolo gically created) இருக்கலாம் எனத் தெரிகின்றது.

1.2. பழந்தமிழில் -φ- வருங்கால எதிர்மறைக் குறியீட்டு உருபாக வருகின்றது. இக்கால தாய்நாட்டு பொ. தமிழிலோ அல்லது பே. பொ. தமிழிலோ அல்லது ஏனைய கிளைமொழி களிலோ இவ்வுருபு தென்படுவதாகத் தெரியவில்லை. ஆயின் இ. தமிழில் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழில் (யா. தமிழ்) இவ்வுருபு மிகுந்து காணப்படுவதாகத் தெரிகின்றது. எடுத்துக்காட்டாக **செய் -φ- ஏன் > செய்யேன்** 'I wouldn't do '**நடக் -φ- ஏன் > நடக்கேன்**' I wouldn't walk', **ஓடு -φ- ஆன் > ஓடான்** 'he wouldn't run', **வர் -φ- ஆன் > வரான்** 'he wouldn't come' என்பன பழந்தமிழிலும் இ. தமிழிலும் ஒத்திருக்கின்றன.

1.3. இ. தமிழில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவை களின் ஒருமைப் பன்மைப் பெயர்கள் இறந்தகால வினைமுற்று களின் விகுதிகளாக வரும்போது இருவிதமான அமைப்புகளைக் (Structures) கொண்டுள்ளன. ஒன்று தாய் நாட்டுத் தமிழ் போல் விகுதிகளைக் கொண்டு முடிகின்றது. மற்றொன்று தன்மை, முன் னிலை, படர்க்கை ஆகிய தனிப் பெயர்கள் பெயரெச்சங்களின் பின்கொண்டு வினைமுற்றை உணர்த்துகின்றன. எடுத்துக்காட் டாக **செய்த-நான் > செய்தனான்** 'Idid', **செய்த-நீ > செய்தனீ** 'You (non-hon.) did', **செய்த-நீர் > செய்தனீர்** 'You (hon.) did' **செய்த-நீங்கள் > செய்தனீங்கள்** 'You (hon) did', **செய்த-அவன் > செய்தவன்** 'he did' **செய்த-அவர் > செய்தவர்** 'he (hon.) did, என்பன. மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் தாய்த் தமிழிலும் இ. தமிழிலும் வினையாலணையும் பெயர்களாகவும் வருகின்றனன. சுவிலாபிலும் சண்முகம் பிள்ளையும் இதை விளக்கும் போது தமிழ் மொழியில் விகுதிகள் பெயர்களிலிருந்தே வந்தவை என்றும், வினை முற்றும், வினையாலணையும் பெயரும் ஒரே வடிவைப் பெற்று நின்ற காலத்தில் மொழியமைப்பை இவை காட்டுகின்றன என்றும் கூறுகின்றனர் (சுவிலாபில் 1966: 122, சண்முகம் பிள்ளை 1973: 31). முதல் வகையான அமைப்பு பிற்காலத்தில் தாய்த்தமிழின் ஊடுருவல் (influence) அல்லது இம்மக்களின் இடப்பெயர்ப்பு நடந்த

சமயம் முதல் வகையமைப்பு பரவும் காலமாக (Propagational period) இருந்திருக்கலாம் எனக் கொள்ள வாய்ப்பு உண்டு.

2.0. இலங்கைத் தமிழின் தனித்தன்மை

இ. தமிழ் தாய் நாட்டுத் தமிழிலிருந்து சில ஒலியன் நிலை (Phonological), உருபன் நிலை (morphological), சொல்நிலை (lexical) ஆகியவைகளில் மாறுபடுகின்றது.

2.1. ஒலியன்கள் மாறுபாடு

2.1.1. நடு அண்ண ஒலியற்ற அடைப்பொலியாகிய (Palatal voiceless stop) /ச்/ இன் மாற்றொலி (allophone) [ஸ்–][5] என்பது பே.பொ. தமிழில் சொற்களின் முதலில் வழங்கப்படுகின்றது. ஆயின் பே. பொ. தமிழில் காணவிருக்கும் [ஸ்–] என்ற ஒலி இ. தமிழில் குறிப்பாக யாழ். தமிழில் [த்ஸ்–] என்கின்ற ஒலித் தொகுதியாக (Phonological cluster) ஒலிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக **ஸூந்தரம்** 'Mr. Sundaram' **ஸீதா** 'Sita' **ஸந்தெ** 'Market' என்கின்ற பே. பொ. தமிழ்ச் சான்றுகள் முறையே **த்ஸூந்தரம் த்ஸீதா, த்ஸந்தெ** என யாழ் தமிழில் மாறுபட்டு ஒலிக்கப்படுகின்றன.

2.1.2. பொ. தமிழில், சொற்களின் நடுவில் வரும், **–ன்ற்–** என்கிற ஒலித் தொகுதிகள் பே. பொ. தமிழில் **–ண்ண்–** ஆகவும், யாழ். தமிழில் **–ண்ட்–** ஆகவும் மாறுபட்டு உள்ளன. எடுத்துக் காட்டாக, **ஒன்று** 'One' **அன்று** 'on that day' **இன்று** 'on this day' **என்று** 'on which day / like that', **கன்றுக்குட்டி** 'calf', என ஒலிக்கப்படும் பொ. தமிழ்ச் சான்றுகள் முறையே **ஒண்ணு, அண்ணு, இண்ணு, எண்ணு, கண்ணுக்குட்டி**, எனப் பே. பொ. தமிழிலும், **ஒண்டு, அண்டு, இண்டு, எண்டு, கண்டுகுட்டி** என இ. தமிழிலும் வழக்கிலிருக்கின்றன.

2.2. உருபன்கள் மாறுபாடு

2.2.1. பொ. தமிழிலும் பே. பொ. தமிழிலும் பொதுவாக வியப்பைக் குறிக்க தனிப்பட்ட உருபு ஏதும் கிடையாது. அதிகமாக வினாவை குறிக்கும் உருபோ, அல்லது **ஆ–** என்கிற உருபே சொல்லின் முன் அல்லது வாக்கியத்தின் முன்வந்து வியப்புப் பொருளை

உணர்த்தும். ஆயின் இ. தமிழில் குறிப்பாக யாழ். தமிழில் **-தி/-தா** என்கிற உருபுகள் **-ன்** என்கிற ஒலியுடன் முடியும் பெயர்களின் பின்னும் **-அடா** என்கிற உருபு ஏனைய இடங்களிலும் வியப்பை உணர்த்த வருகின்றன. எடுத்துக்காட்டாக **தேன்-தி / தேன்-தா** 'ho it is honey', **வந்தவன்-தி / வந்தவன்-தா** 'ho he has come', **அவன்-தி / அவன்-தா** 'oh it is he', **மரம்-அடா** 'oh it is tree', **பாட்டு-அடா > பாட்டடா** 'oh it is song', என்கின்ற யாழ். தமிழ்ச் சொற்களைக் கூறலாம். இருப்பினும் தற்போதைய பே. பொ. தமிழில் **-அட** என்கிற உருபின் இரட்டிப்பு **அடடா** என வந்து வியப்பை உணர்த்துகின்றது.

ஆறாம் வேற்றுமை உருபுகளாக **-றெ** என்ற உருபு **-ன், -ர்** ஆகிய ஒலிகளோடு முடியும் பெயர்களின் பின்னும், **ஆடெ** அல்லது **-இன்றே** உருபுகள் ஏனைய இடங்களிலும் இ. தமிழில் இவைகளுக்கு இணையாக **-ஓடெ** என்கின்ற உருபு எல்லாப் பெயர்களின் பின்வரும் வரக்கூடியதாகச் செயல்படுகின்றது எடுத்துக்காட்டாக **என்-றெ** 'my', **அவன்-றெ** 'his (non hon)' **அவர்-றெ** his (hon.)', **அவள்-அடெ > அவள்டெ** 'her' **மாமி-இன்றே > மாமியின்றே** 'aunt's' என்கின்ற இ. தமிழ்ச் சான்றுகள் முறையே **என்-ஓடே > என்னோடெ, அவன்-ஓடெ, > அவனோடெ, அவர்-ஓடெ > அவரோடெ, அவள் - ஓடெ > அவளோடெ, மாமி - ஓடே > மாமியோடெ** என்கிற பே.பொ.தமிழ்ச் சான்றுகளுக்கு இணையாக உள்ளன. இ. தமிழில் காணப்படும் **- றெ, இன்றெ** என்ற இரு உருபுகளும் மலையாள மொழியில் காணப்படும் ஆறாம் வேற்றுமை உருபுகளை ஒத்திருக்கின்றன. மலையாள மொழியிலும் இ. தமிழிலும், பே. பொ. தமிழிலும் காணக்கிடைக்கும் உருபுகள் யாவும், பொ. தமிழில் காணக்கிடைக்கும் **-உடைய** என்கிற உருபின் உருமாற்றமாக இருக்கலாம் எனத் தெரிகின்றது.

2. 2. 3 இ. தமிழில் பன்மையொட்டு (Plurel suffix) -அவெ ஒவ்வொரு தனிப் பெயர்களின் (Personal Pronouns) பின்னும் மதிப்புச் சொல்லாகப் (honorific) பயன்படுத்தப்படுகின்றது. இ. தமிழில் காணப்படும் இப்பன்மையொட்டு பொ-தமிழில் தனிப் பெயர்களின் பின்வரும் **அவர்கள்** என்கிற மதிப்புச் சொல்லுக்கு

இணையாக இருக்கின்றது. எடுத்துக்காட்டாக இ தமிழில் காணப் படும் **பொன்னம்பலம்- -அவெ** 'Mr. Ponnampalam' **ராமநாதன்-அவெ** 'Mr. Ramanathan' என்பன பொ. தமிழில் **பொன்னம்பலம் -அவர்கள், இராமநாதன்-அவர்கள்-** என்பனவற்றை ஒக்கும்.

எ என்கிற உருபு நான்காம் வேற்றுமை உருபாக, **வீடு** என்கிற பெயரின் பின் **வா- போ-** என்கின்ற இருவினைகளின் முன் இ. தமிழில் குறிப்பாக யாழ். தமிழில் சிலபேர்களின் பேச்சு வழக்கில் மட்டும் காணக்கிடக்கின்றது. எடுத்துக்காட்டு: **வீடு-எ-போ > வீட்டெ போ** 'go to the house' **வீடு-எ-வா > வீட்டெ வா** 'come to the house' இவ்வுருபு பொ. தமிழிலோ அல்லது பே. பொ. தமிழிலோ காணப்படுவதாகத் தெரியவில்லை. ஆயின் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் ஒருசிலரால் வேகமாகப் பேசும் போது இவ்வுருபு இதே மதிரியான சொற்களில் காணக்கிடக்கின்றது.

2.2.5. 'முடியாமை' (inability) என்னும் எதிர்மறைப் பெயரைக் குறிக்க இ.தமிழில் குறிப்பாக யாழ். தமிழில் **கூடா** என்கிற ஒட்டு (suffix) வினை எச்சத்தின் பின் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வொட்டுக்கு இணையாக பொ. தமிழில் **கூடாது** என்கிற ஒட்டு எதிர்மறைப் பெயரெச்சமாகப் பயன்படுத்தப் படுகிறது. எடுத்துக் காட்டாக **எழுதக்கூடா** 'not possible to write', **வரக்கூடா** 'not possible to come', **தின்னக்கூடா** 'not possible to eat' என்பவை கள் யாழ். தமிழ்ச் சான்றுகளாகும். யாழ் தமிழில் பொ. தமிழிலிருந்து சிறு பொருள் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. **கூடா** என்கிற சொல் பொ. தமிழில் சிலவிடங்களில் பழந்தமிழையொட்டி தனிச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகின்றது. **கூடா ஒழுக்கம்** என்பது இதற்குச் சான்று ஆகும்.

2 3. சொல் வேறுபாடுகள்

பல சொற்கள் பொ. தமிழ், பே. பொ. தமிழ் ஆகியவைகளில் இருந்து இ தமிழில் மாறுபட்டு விளங்குகின்றன. ஆயினும் பல சொற்கள் பே.பொ. தமிழிலும் இ. தமிழிலும் ஒரே மூலத்திலிருந்து (Cognate) பிறந்து திரிவு பெற்றவை என்பது தெரியவருகின்றது. எடுத்துக்காட்டுக்கள்: **அப்பு** 'father', **வெருளி** 'shyness', **காவெட**

'rowdyism', **வவுத்தி** 'teacher' **பே** 'fool', **கோப்பி** 'coffee', **கோச்சி** 'train' **வண்டில்** 'cart' என்பன.

3 0. இலங்கைத் தமிழும் பேச்சுப் பொதுத் தமிழும்

கீழே கொடுக்கப்பட்டுள்ள **ஒலியன்** கூறுகளில் இ. தமிழும் பொ. தமிழும் ஒன்றுபட்டு விளங்கக் காணலாம். ஆயின் பே. பொ. தமிழ் மேற் கூறிய இரண்டிலிருந்தும் சற்று மாறுபட்டு இருக்கக் காணலாம்.

3.1. ஒலியன் வேற்றுமைகள்:

3.1.1. பொ. தமிழில், சொற்களின் முதலசையில் வரும் /-உ-/, /-இ-/ என்னுமுயிர்கள் (பின் அசையில் /-அ-/[6] வந்தால்) முறையே /-ஒ-/ ஆகவும் /-எ-/ ஆகவும் பே. பொ. தமிழில் மாறுபடுகின்றன. இவ்வாறான மாற்றம் இ. தமிழில் ஏற்படுவதாகத் தெரியவில்லை. எடுத்துக்காட்டாக **உம்மெ** 'you (hon-Acco)', **குளம்** 'Pond', **குடெ** 'Umbrella', **கிளமெ** 'week, **கிளக்கு**, east', **விலெ** 'Price', **கிளங்கு** 'edible root', என்கின்ற இ. தமிழ் சான்றுகள் முறையே **ஒம்மெ, கொளம், கொடெ, கெளமெ, கெளக்கு, வெலெ, கெளங்கு** எனப் பே. பொ. தமிழில் வழக்கில் இருக்கின்றன.

3.1.2. பே. பொ. தமிழில் மூக்கொலிகளாகிய -ன்/, /-ம்/ என்னும் ஒலிகள் சொல்லின் **கடைசியில்** வருமாயின் முன்னர் வரும் உயிர்களுடன் சேர்ந்து மூக்குயிர்களாக (nasalized vowel) வரக்காணலாம். ஆயின் இ. தமிழில் பொ. தமிழைப் போன்று /-ன்,/-ம்/ என்கின்ற ஒலிகள் சொல்லின் கடைசியில் வரக்காணலாம். எடுத்துக்காட்டாக **நான்**, 'I', **அவன்** 'he' **மகன்**. 'son' **மரம்** 'tree' **படம்** 'picture' என்கின்ற இ. தமிழ்ச் சான்றுகள், முறையே [நா̃], [அவெ̃], [மகெ̃], [படொ̃] என்பனவற்றை பே பொ. தமிழில் ஒக்கும்.

3.1 3 பே. பொ. தமிழில் மெய்யெழுத்துகளாகிய /-ன்/, /-ல்/, /-ள்/, /-ர்/ என்னும் ஒலிகள் சொற்களின் இறுதியில் பொது

வாக வருவது இல்லை. /-ன்/ சில சமயங்களில் முன்னுயிரோடு சேர்ந்து மூக்குயிராகவும், சில சமயங்களில் குற்றியலுகரம் பெற்றும், /-ன்/ எப்போதும் குற்றியலுகரம் பெற்றும், /-ல்/-உம்/-ள்/-உம் சில சமயங்களில் மறைந்தும், சில சமயங்களில் குற்றியலுகரம் பெற்றும் /ர்/ எப்போதும் குற்றியலுகரம் பெற்றும் வருகின்றன. ஆயின் இ. தமிழின் மேற்கூறிய ஒலிகள் யாவும் பொ. தமிழ் போல் சொற்களின் இறுதியில் வருகின்றன. எடுத்துக்காட்டாக **மீன்** 'fish' **பேன்** 'louse', **அவன்** 'he', **கண்** 'eye', **மண்** 'soil' **பால்** 'milk', **வராமல்** 'without coming', **வாள்** 'sword', **அவள்** 'she', **நீர்** you (hon. Sg)' **வேர்** 'root' என்னும் இ. தமிழ்ச் சான்றுகள் முறையே

மீனு, பேனு, $\left[\begin{matrix}\sim\\ \text{அவெ}\end{matrix}\right]$ **கண்ணு, மண்ணு,** பாலு, **வராமெ, வாளு, அவ, நீரு, வேரு** எனப் பே. பொ. தமிழில் வழக்கிலிருக்கின்றன.

4 0. இலங்கைத் தமிழும் கன்னியாகுமரி தமிழும்

பொதுவாக இலங்கைத் தமிழில் **ள** கரத்திற்கும் **ழ** கரத்திற்கும் வேறுபாடு இல்லாமையால் இது தென்னகத் தமிழை ஒத்திருக்கிறது எனலாம். இன்னும் குறிப்பாக **ற** கரத்திற்கும் **ர** கரத்திற்கும் வேறுபாடு இருப்பதால் கன்னியாகுமரிக் கிளை மொழியை (க. தமிழ்) ஒத்திருக்கிறது எனலாம். பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்களும், பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களும் இ. தமிழுக்கும் க.தமிழுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதாகக் கூறிப் போந்துள்ளனர். இவண் இ தமிழும் க. தமிழும் எந்த எந்த இலக்கணக் கூறுகளில் ஒன்றுபடுகின்றன என்பது பற்றிச் சிறிது காண்போம்.

4.1. ஒலியியல் ஒற்றுமை

4.1.1. பொ. தமிழில் காணப்படும் முன்னுயிர் (front vowel) /-இ-/ யும் /-எ-/ யும் சொல்லின் முதலசையில் ஈரிதழ் (bilabial) ஒலி **ப** விற்கும் வருடொலிகள் (retroflex) **ட், ள், ண்** ஆகிய வற்றிற்கும் இடையில் வரின், க.தமிழும் இ. தமிழும் தவிர ஏனைய தமிழ் கிளை மொழிகளில் முறையே /-உ-/ ஆகவும் /-ஒ-/ ஆகவும் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக **பிடி** 'catch', **பிள்ளெ** 'child',

பிளி **'crash'**, **பெட்டி** **'box'**, **பெட** 'female bird', **பெணம்** 'dead body', **பெளப்பு** 'living',[8] என இ. தமிழிலும் க. தமிழிலும் காணக்கிடக்கும் சொற்கள் முறையே **புடி, புள்ளெ, புளி, பெட்டி, பொடெ, பொணம், பொளப்பு** என ஏனைய கிளை மொழிகளில் வழக்கிலிருக்கின்றன.

4.1.2. கிளை மொழிகளாகிய க. தமிழிலும் இ. தமிழிலும் மட்டுமே ஆடொலி (Trill) /_ற_/ உம் வருடொலி (flap) /-ர_/ உம் தனித்தனி ஒலியன்களாகத் திகழ்கின்றன. ஏனைய தமிழ் கிளை மொழிகளில் இவை இரண்டும் வருடொலி /_ர_/ ஆக வழங்கப்படு கின்றன எடுத்துக்காட்டாக; **கறி** 'curry'. **புறு** 'pigeon', **பொறு** 'bearwith', **கறுப்பு** 'black', **பறி** 'pluck', **குறி** 'mark', **முறி** 'break', எனக் க. தமிழிலும், இ. தமிழிலும் காணப்படும் சொற்கள் முறையே **கரி, புரா, பொரு, கருப்பு, பரி, குரி, முரி** என ஏனைய கிளை மொழிகளில் வழங்கப்படுகின்றன.

4.1.3. பொ. தமிழில் காணப்படும் /-ய்/ சொல்லின் இறுதியில், கீழ் நடு நெடிலுயிர் (low central long vowel) /_ஆ_/-இன் பின் வரின் இ. தமிழிலும், க. தமிழிலும் **-ய்** கெட்டும், ஏனைய கிளை மொழிகளில் **_ய்** உடன் முன்னுயிர் **-இ** இணைத்தும் ஒலிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக **வாய்** 'mouth', **நாய்** 'dog' **பாய்** 'met' **காய்** 'unriped fruit' என்ற பொ. தமிழ்ச் சொற்கள்: **வா, நா, பா, கா** என இ. தமிழிலும், க. தமிழிலும், **வாய், நாய், பாய், காய்** என ஏனைய கிளை மொழிகளிலும் வழக்கிலிருக்கின்றன.

4 2 தொடரியல் ஒற்றுமைகள்:

4.2.1. இறந்தகால எதிர்மறை வினை எச்சத்தை உருபன் மாதிரிககளாலும் (morphological forms) தொடரியல் மாதிரி களாலும் (Syntactical forms) உணர்த்தும் தன்மை இ. தமிழிலும் க.தமிழிலும் வழக்கிலிருக்கின்றன. ஆயின் ஏனைய கிளை மொழி களில் இறந்தகால எதிர்மறைவினை எச்சத்தை உருபனியல் உறுப்புக்களால் மட்டுமே உணர்த்துகின்றனர். எடுத்துக்காட்டாக **வந்தான் இல்லெ** he didn,t come **போனான் இல்லெ** he didn't go **படிச்சாள் இல்லெ** she didn't study **செய்தெ இல்லெ** you didn't

do' **பார்த்தேன் இல்லெ** 'I didn't see' என்கின்ற இ.தமிழ், க. தமிழ் தொடர்கள் முறையே **வரல்லெ, போகல்லெ, படிக்கெல்லே செய்யல்லே, பார்க்கல்லெ** என்கின்ற ஏனைய கிளை மொழி வழக்கு களுக்கு இணையாக உள்ளன.

4 3 சொற்களின் ஒற்றுமைகள்:

இ. தமிழுக்கும், க. தமிழுக்கும் சொற்களைப் பொருத்தமட்டில் நிறைய ஒற்றுமைகள் காணக் கிடக்கின்றன. அவைகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன **திரி** 'turn', **அலக்களி** 'destory', **விடுகாலி** 'Person undergo no normel restraint', **காவாலி** 'Vagabond', **மொச்சி** 'they(neuter) crowded', **கடவம்** 'largebasket made of palm leaves; **கிடுவு**[11] 'thatch made of coconut leaves', **பிள்ளெ** 'daughter'' **வெள்ளம்** 'water'. **உறக்கம்**[12] 'Sleep', **எப்பம்** 'a little', **கிளமே**[13] 'week', என்பன வாகும்.

5. 0. இலங்கைத்தமிழும் விளவங்கோடுதமிழும்:

இ. தமிழும் விளவங்கோடு தமிழும் (வி. தமிழ்) பல கோணங் களில் நிறைந்த ஒற்றுமை உடையனவாக இருக்கின்றன. இவ் விரண்டு கிளை மொழிகளிலும் பொதுவாக சொற்களின் முதலசை யில் வரும் உயிர்கள் ஏனைய அசை உயிர்களை விடச் சற்று அழுத்தம் (Stress) கூடியனவாகப் பயன்படுத்தப் படுகின்றன. இன்னும் இவ்விரு கிளை மொழிகளிலும் காணப்படும் இசைக்குணம் (tone), ஒலியேற்றம், இறக்கம் (intonation) முதலியவைகளில் ஏதோ ஒருவகையான ஒற்றுமை இருப்பதாகவே தெரிகின்றது[14]. இவ்வாறான ஒற்றுமைகளை பிற கருவிகள் (instruments) கொண்டு நுணுகி ஆய்ந்தால் ஒழிய சரியாக விளக்க இயலாது எனத் தெரிகிறது. இங்கு இவ்விரு கிளைமொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய (diagnostic) சில மொழியியல் கூறுகள் (linguistic variables) கொண்டு நோக்கு வோம். இவ்விரு கிளைமொழிகளுக்குள்ளும் ஒலியன், உருபன், சொற்கள் ஆகிய மொழியியல் கூறுகளில் பல ஒற்றுமைகள் காணக் கிடக்கின்றன.

5.1. ஒலியன் ஒற்றுமைகள்:

5.1.1. பொ. தமிழில் காணப்படும் இரட்டித்த நுனிநா நுனி யண்ண அடைப்பொலி (geminated alveolar stops) **-ற்ற்-** இ. தமிழிலும், வி.தமிழிலும் காணப்படுகின்றது. ஏனைய கிளைமொழிகள் யாவிலும் **-ற்ற்-**உக்கு இணையாக இரட்டித்த நுனிநா பல்லொலி (geminated dental stops) **-த்த்-** பயன்படுத்தப் படுகின்றது. எடுத்துக்காட்டாக, **காற்று** 'air', **மாற்று** 'change', **நேற்று** 'yesterday', **சுற்று** 'round', **வற்றி** 'having dried' **அதைப்பற்றி** 'about that' என்கின்ற இ தமிழ்ச் சான்றுகளும் வி. தமிழ்ச் சான்றுகளும் முறையே **காத்து, மாத்து, நேத்து, சுத்து, வத்தி, அதைப் பத்தி** என ஏனைய கிளைமொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

5.1.2. பொ. தமிழிலும், பே. பொ. தமிழிலும், ஏனைய கிளைமொழிகளிலும் வழக்கிலிருக்கும் /-ஓ-/ /-ஒ-/ என்ற ஒலிகள் /-எ-/ ஆகவும் இ.தமிழிலும், வி.தமிழிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. **சொன்னான்** 'he told', **சொல்வான்** 'he will tell', **போயிட்டான்** 'he has gone' என்கின்ற பே. பொ. தமிழ் மாதிரிகளும் ஏனைய கிளைமொழி மாதிரிகளும் முறையே **சென்னான் செல்வான், பெயிட்டான்** என இ. தமிழிலும் வி.தமிழிலும் பயன்படுத்தப் படுகின்றன.[15]

5.2. உருபன்களின் ஒற்றுமைகள்

5.2.1. உயிரைக்கொண்டு தொடங்கும் நெருங்கிய உறவு முறைச் சொற்களின் ஒட்டாக **கொ**[16] என்கிற முன் ஒட்டு (prefix) 'உன்னுடைய' (your) என்ற பொருளில் இ.தமிழிலும் குறிப்பாக யாழ் தமிழிலும், வி.தமிழிலும் வருகின்றது. இவ் முன் ஒட்டுக்கு இணையாக **ஒங்க்-** அல்லது **ஒ-** என்கின்ற முன் ஒட்டுக்கள் ஏனைய கிளை மொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக **கொ-அய்யா > கொய்யா** 'your father' **கொ-அப்பன் > கொப்பன்** 'your father', **கொ-அம்மெ > கொம்மெ** 'your mother', **கொ-அண்ணன் > கொண்ணன்** 'your elder brother', **கொ-அக்காள் > கொக்காள்** 'your elder sister' என்கின்ற இ தமிழ்ச் சொற்களுக்கும்

வி.தமிழ்ச் சொற்களுக்கும் இணையாக **ஒங்க-அய்யா** > **ஒங்கய்யா** அல்லது **ஒ-அய்யா** > **ஒய்யா**, **ஒங்க - அப்பன்** > **ஒங்கப்பன்** அல்லது **ஒ-அப்பன்** > **ஒப்பன்**, **ஒங்க-அண்ணன்** > **ஒங்கண்ணன்** அல்லது **ஒ-அண்ணன்** > **ஒண்ணன்**, **ஒங்க-அக்காள்** > **ஒங்கக்கா(ள்)** அல்லது **ஒ-அக்கா(ள்)** > **ஒக்காள்**, என்கின்ற சான்றுகள் ஏனைய கிளை மொழிகளில் வழக்கிலிருக்கின்றன.

5.2.2. பொ. தமிழில் காணப்படும் பன்மைச் சுட்டுப் பெயர்களாகிய (Plural demonstrative pronouns) **அவர்கள்** 'that they', **இவர்கள்** 'this they', **எவர்கள்** 'which they', என்பனவற்றிற்கு இணையாக முறையே இ. தமிழிலும் குறிப்பாக யாழ் - தமிலும் வி. தமிழிலும் **அவியள்(ள்)**, **இவியள்(ள்)**, **எவிய(ள்)** என்ற சுட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன.

5.2.3. முன்னிலை ஒருமை மதிப்பிற்குரிய அல்லது பன்மைக்குரிய ஒட்டாக **-இய(ள்)** என்கிற ஒட்டு வினைமுற்று விகுதியாக இ. தமிழிலும் குறிப்பாக யாழ். தமிழிலும், வி.தமிழிலும் வருகின்றது. இவ்வொட்டுக்கு இணையாக பொ. தமிழில் **-ஈர்கள்** என்கிற ஒட்டு காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக **வந்திய(ள்)** 'you (pl.or. hon.sg.) came', **படிப்பியள்(ள்)** 'You (pl.or.hon.sg.) will study,' **பாப்பிய(ள்)** 'you (pl.or.hon.sg.) will see', என்கின்ற யாழ். தமிழ்ச் சான்றுகளும் வி. தமிழ்ச் சான்றுகளும் முறையே **வந்தீர்கள்**, **படிப்பீர்கள்**, **பார்ப்பீர்கள்** என்கின்ற பொ. தமிழ்ச் சான்றுகளுக்கு இணையாக உள்ளன. **-இய(ள்)** என்கிற யாழ். தமிழ் மாதிரியும் வி. தமிழ் மாதிரியும் **-ஈர்கள்** என்கிற பொ. தமிழ் மாதிரியில் இருந்து உருமாற்றம் பெற்றிருக்கலாம் எனத் தெரிகின்றது.

5.2.4. பலர்பால் விகுதியாக (epicene plural) **-இனம்** என்கிற ஒட்டு இ. தமிழிலும் குறிப்பாக யாழ். தமிழிலும், வி. தமிழிலும் (குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், நாடார் ஆகியோரது பேச்சு வழக்கில்) வழங்கப்படுகிறது. இவ்வொட்டு **-இனம்**, வேறு எந்த கிளை மொழிகளிலோ அல்லது பே. பொ. தமிழிலோ காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக: **வந்தினம்** 'they came', **போச்சினம்** 'they went,' **பாப்பினம்** 'they will see', **செய்வினம்** 'they will

do,' **நடந்தினம்** (they walked) **இருந்தினம்** 'they were present sit', என்பன. ஏனைய கிளை மொழிகளில் இவ்வொட்டுக்கு இணையாக பல உருபுகள் வழக்கிலிருக்கின்றன. பொ. தமிழில் **-ஆர்கள்** என்ற உருபு இதற்கு இணையாக வருகின்றது. பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் இவ்வுருபு நாஞ்சில் நாட்டுப் பேச்சு வழக்கில் சிலவிடங்களில் அரிதாக வருகின்றது என்றும், அவ்விடங்களில் அகறிணைப் பன்மைப் பொருளை உணர்த்து கின்றது என்றும் கூறுகின்றார். சான்றாக அவர் **அதுகெ வந்தினம்** 'they (neuter) came', என்றும் கொடுத்துள்ளார் (அகத்தியலிங்கம் 1969). இவ்வுருபு **-இனத்தை** இ. தமிழில் காணப்போந்த கமில் சுவிலாபில் அவர்கள் தற்போது இவ்வுருபைப் பற்றிய வரலாறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்கிறார் (சுவிலாபில் 1966:122). இவ்வுருபு இரு உருபுகளின் கூட்டாக இருக்கலாம் எனத் தெரிகிறது. அதாவன **-இன் + அம்**. **-இன்** சாரியையாக பழந்தமிழில் வருவது நினைவு கூரத்தக்கது. **-அம்** என்கிற உருபு பொ. தமிழின் -உம் என்கிற அகறிணை ஒட்டின் ஒருமாற்றமாகவோ அல்லது தன்னிலை பன்மை **-ஓம்** ஒட்டின் ஒருமாற்றமாகவோ இருக்கும் எனவும் எண்ணத் தோன்றுகிறது. பொ. தமிழில் காணப்படும் -உம் என்கிற அகறிணை ஒட்டு -அம் என உருமாற்றம் பெற்று சில சமூகத்தின ரிடையே மதிப்புச் சொல்லாக இறந்தகால இடை நிலையின் பின் பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக **அப்பா வரம்** 'father will come', '**அப்பா அடிக்கம்** 'father will beat', **அண்ணன் போகம்** ''elder brother will go', என்பனவாகும். இன்னும் பொ. தமிழில் உள்ள தன்மைப் பன்மையொட்டு -ஓம், சில பேச்சு வழக்கில் -ஓம் ஆகவும் -அம் ஆகவும் மாறியிருக்கக் காணலாம் இன்னும் இவ்வொட்டைப்பற்றி விளக்கம் தேவைப்படுகின்றது.

5. 3. சொற்களின் ஒற்றுமை:

கீழே தரப்பட்டுள்ள சொற்கள் யாவும் இ. தமிழிலும் வி. தமிழிலும் ஒத்திருக்கின்றன. அவையாவன **வாரி** 'reaper or the roor', **சவள்**[17] 'become bend', **இஞ்செ** 'here'' **அப்பச்சி** 'grand father', **எப்பன்** 'a little', **ஓம்**[18] 'yes'. **லெத்தம்** 'blood', **கெடியா**[19] 'quickly', **வடலி** 'Small palmyra tree', **வெள்ளென** 'early', இன்னும் பல.

6. 0. முடிப்புரை:

இதுகாறும் இ. தமிழ் கிளை மொழிகளை ஆய்ந்தவர்களிடையே கூடுதலாக முரண்பட்ட கருத்துக்கள் ஒன்றும் தென்படவில்லை. ஆயினும் மொழியியல் ஆராய்ச்சிப் பண்புகளுக்கு தகுந்தாற்போல் ஒவ்வொருவரின் ஆய்வும் ஏனையோரை ஒத்திருக்கவில்லை என்பது மட்டும் உண்மை. இ தமிழை ஆய்ந்தவர்களில் தனஞ்ஜெயஇராஜ சிங்கம் என்பவரைத் தவிர ஏனைய யாவரும் குரல் (Voiced) மெய்யொலிகள், மூக்கொலிகள் பின்னும் கூட இ. தமிழில் அதிக மாகக் தென்படவில்லை என்ற கருத்தையே கொண்டுள்ளனர்[20]. கணபதி பிள்ளையவர்கள் இ. தமிழ் எழுதப்படும் தமிழ்போல் உச்சரிக்கப்படுகின்றது என்கிறார் (கணபதி பிள்ளை 1956:222) சண்முகம் பிள்ளையவர்கள் ஜ [j], ட் [ḍ], ஆகிய குரல் ஒலிகள் மட்டும் சொல்லின் முதலில் கடன் (borrowed words) வருவதாக கூறுகின்றார்[21]. சுசீந்திரஇராஜா அவர்கள் [ப்] (b) என்ற குரல் ஒலி மட்டும் [ப்ல்ப்] 'bulb' 'bulp' என்ற சொல்லின் முதலில் வருவ தாகக்கூறுகிறுர். ஆயினும் அவரே தற்போதைய கட்டுரையொன்றில் **பல்ப்** என்ற சொல் **வல்ப்** எனப் பயன்படுத்தப்படுவதாகக் கூறு கிறார். (I.L.Vol 34. No. 3, 1973). சண்முகம் பிள்ளையவர்களும் **பேங்** 'bank' என்ற ஆங்கிலச் சொல் **வாங்கு** (vaṅku) என உச்சரிக்கப்படுவதாகக் கூறுகிறுர். இவ்வாறான வேறுபாடு அதாவது கடன் சொற்களில் சொல்லின் முதலில் காணப்படும் **ப** (b) என்ற குரல் ஒலி **வ** [v]ஆக மாறுவது வி. தமிழில் மிகுந்து காணப் படுகின்றது. எடுத்துக்காட்டாக **பலி** (bali) 'offesing to God' என்பது **வலி** என்றும் **பெஞ்சு** 'bench' **வெஞ்சி** என்றும் **பீற்றி**(B.T.) 'Bachalor of Training', என்பது **வீற்றி** என்றும் **பீயே** (B.A.) 'Bachelor of Arts' என்பது **வீயே** என்றும், **பேங்** 'bank' என்பது **வேங்கு** என்றும் **பிஸ்கற்** 'buiscuit' என்பது **விஸ்கோத்து** என்றும், **பார்லி** 'barley' என்பது **வாற்லி** என்றும் **பிராந்தி** 'brandy' என்பது **விராந்தி** என்றும் **பேக்** 'bag' என்பது **வேக்கு** என்றும் வி.தமிழில் வழக்கிலிருக்கின்றன. மேற்கூறிய பல வி.தமிழுக்கு இணையான இ தமிழ்ச் சான்றுகள் சரியாகத் தெரியவரவில்லை.

** இக்கட்டுரை எழுதும்போது எழுந்த சில ஐயப்பாடுகளை தீர்த்து உற்சாக மூட்டிய பேராசிரியர் வி. ஐ சுப்பிரமணியம் அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி.

6.2. சில பழந்தமிழ்க் கூறுகளும், பொ. தமிழ்க் கூறுகளும் இ தமிழில் நிலைத்திருக்கின்றன. இவற்றிற்குக் காரணம் இம்மக்கள் இடம்பெயர்ந்தபோது பேச்சு வழக்கு அதிக மாற்றம் இன்றி பாதுகாக்கப்பட்டிருக்கின்றது எனலாம். சண்முகம் பிள்ளையவர்கள் ஈழநாடு தமிழ்நாட்டிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டுத் தனித்து நிற்ப தால், தாய்நாட்டுத் தமிழ்போல் பிற்காலத்தில் தென் இந்தியாவின் ஏனைய மொழிகளாகிய கன்னடம், தெலுங்கு மற்றும் வடமொழி களுடன் நெருங்கிய நேரடி உறவுகொள்ளாமல் தனித்து இயங்கும் தன்மையைக் காணமுடிகிறது என்பதனை விளக்குகின்றார் (சண் முகம் பிள்ளை 1973; 84)

6 3. பொதுவாக இ.தமிழுக்கும் தமிழ்நாட்டின் தென் மாநில பேச்சுத் தமிழுக்கும் குறிப்பாக இ. தமிழுக்கும் க. தமிழுக்கும் அதனிலும் குறிப்பாக இ.தமிழுக்கும் வி.தமிழுக்கும் ஏதோ ஒருவகை யான ஒற்றுமை இருப்பதாகவே தெரியவருகின்றது. இவ்வொற்றுமை களுக்குக் காரணம் கூறப் போந்த சண்முகம் பிள்ளையவர்கள் ''இந்த ஒலிப்புடை அடைப்பொலிகள் (voiced consonants) மொழி முதலிலும் உயிர்களின் இடையேயும் சென்னைத் தமிழில் மிகுந்து காணப்படுகின்றன. அங்கிருந்து தெற்கே செல்லச்செல்ல ஒலிப்புடை அடைப்பொலிகள் குறைந்துகொண்டே வருகின்றன. திருநெல்வேலி தமிழில் மிகக்குறைந்தும், யாழ்ப்பாணத் தமிழில் மறைந்தும் விடுகின்றன'' என்றும் ''இம்முறையில் தென்னாட்டுத் தமிழ், யாழ்ப் பாணத் தமிழ், மலையாளம் மூன்றும் ஒரே மூலத்திலிருந்து கிளைத் திருக்க வேண்டும்'' என்றும் கூறுகின்றார் (சண்முகம்பிள்ளை 1973:35). எவ்வாறு இருப்பினும் இவற்றில் இன்னும் நுணுகிய ஆராய்ச்சி தேவைப்படுகின்றது.

5. 4. இ தமிழிலும் வி. தமிழிலும் காணக்கிடைக்கும் ஒற்றுமைகள் (பிரிவு 5-யை பார்க்க) தற்செயலாக (accidental) ஏற்பட்டதாகவோ, அல்லது தனித்தனியாக வளர்ந்தவைகளாகவோ (parallal developments) மட்டும் இருக்க முடியாது என்று எண்ண வாய்ப்பு உண்டு. இலங்கை வங்காள விரிகுடாக் கடலையடுத்தும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம் அரபிக் கடல் எல்லை நெடுஓரத்திலும் அமைந்திருக்கின்றன. மக்கள்

போக்குவரத்து தொடர்பு மூலமாக (by contact) இவ்வொற்றுமைகள் ஏற்பட்டிருப்பின் தமிழ் நாட்டின் இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பேசும் தமிழுக்கும் இ தமிழுக்கும் ஒற்றுமைகள் பல இருந்திருக்க வேண்டும், ஏன் எனில் இரு மாவட்டங்களும் இலங்கையின் அண்மையில் உள்ளன. ஆயின் அவ்வாறான ஒற்றுமைகள் இருப்பதாகத் தெரியவில்லை. பிறகு ஏன் இவ்வாறான ஒற்றுமைகள் இ. தமிழுக்கும் வி. தமிழுக்கும் திகழ்கின்றன என்பது மட்டும் கேள்விக்குறியாக இருக்கின்றது பின்னர் வருகின்ற இருவரலாற்றுச் செய்திகளை இம் மொழியியல் ஒற்றுமைகளுக்கு முக்கிய காரணமாக இருக்கலாம் எனக்கொள்ளத் தோன்றுகிறது. தாஸ்றடன் (Thurston) என்பவர் **தென்னிந்திய குலமும் மலைவாழ் மக்களும்** (Castes and tribes of Southern India, Vol. II, C-J, 1909:392) என்ற நூலில், இலங்கையிலிருந்து சிலர் இந்தியாவின் மேற்குக் கடலோரப் பகுதிகளுக்கு (தற்போதைய கேரள மாநிலம்) வந்து குடியேறினர் என்றும் அவர்கள் ஈழநாட்டிலிருந்து வந்தமையால் ஈழவர்கள்[22] எனப் பெயர்பெற்றனர் என்றும், இவர்களோடு வந்த பாண்டியா என அழைக்கப்படும் ஒரு சாரார் தென் திருவிதாங்கூரில் (தற்போதைய கன்னியாகுமரி மாவட்டமும் அதைச்சார்ந்த பகுதிகளும்) வந்து குடியேறினர் என்றும் அங்கு இவர்கள் பணிக்கர்கள் என்ற பட்டப் பெயரோடு விளங்குகின்றனர் என்றும் கூறிப் போந்துள்ளார். இன்னும் அவர் இவ்வாறு குடியேறிய மக்கள் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதனை நிலைநாட்ட அவர்களிடம் வாய்மொழியாக இன்னும் வழக்கிலிருக்கும் ஒருவரலாற்றுச் செய்தியையும் கொடுக்கின்றார். அதாவது ஒரு பாண்டிய இளவரசி அல்லி என்பாள் கர்நாடக அரசன் நரசிம்மன் என்பவனை மணந்து இலங்கைக்கு தங்கள் பரிவாரங்களுடன் சென்று தம் ஆட்சியை நிலைப்படுத்தினர். சிறிது காலம் அவர்கள் குலத்தின் அரசாட்சி அங்கு நிலை பெற்றது. பின்னர் அழிவுற்றது. அழிவுற்ற பின் அவ்வம்சத்தினர் தாய்நாடு திரும்பி மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் வாழத் தொடங்கினர் என்ற வாய்மொழிக் கதையையும் கூறியுள்ளார். இன்னும் வேலுப்பிள்ளை என்பாரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வேறுசில மக்களும் தென் தமிழகத்தில் குறிப்பாக பழைய

திருவிதாங்கூரில் குடியேறியுள்ளதாக கூறியுள்ளார் (வேலுப்பிள்ளை 1977).

6.5. கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக விளவங்கோடு வட்டத்தில் வழக்கிலிருக்கும் எல்லா மொழி வேறுபாடுகளுக்கும் அங்கு குடியேறிய மக்கள் காரணமாக இல்லாவிட்டாலும் குறிப்பாக இ. தமிழுக்கும் வி. தமிழுக்கும் காணப்படும் (பிரிவுகள் 5.2.1; 5.22; 5.2.3; 5.2.4; 5.3 ஆகிய) ஒருசில ஒற்றுமைகளுக்கு இவர்களது குடியேற்றம் காரணமாக இருக்குமோ என்று எண்ணத் தோன்று கிறது. மேற்குக் கடற்கரை வழியாக குடிபுகுந்த இம்மக்கள் தற்போதைய விளவங்கோடு வட்டத்தின் வழியாக கன்னியாகுமரி மாவட்டத்தின் ஏனைய இடங்களுக்குச் சென்று இருக்க வேண்டும் எனத் தெரிகிறது. விளவங்கோடு வட்டத்தில் இன்னும் பணிக்கர் விளை, பணிக்கர் குடியிருப்பு எனப் பெயருள்ள இடங்களைக் காணலாம். இம்மக்களுடைய பேச்சு மொழியை ஏனைய சமூகத்தினரும் பின்பற்றி இருப்பதில் இருந்து இவர்களுடைய சமூகநிலை மேம்பட்டிருந்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகின்றது.

பின் குறிப்புகள்

1 இந்திய தேசிய மொழியட்டவணையில் இடம் பெற்றுள்ள 15 மொழிகளுள் 12 பிரதேச மொழிகளும் regional languages) சமஸ்கிரதம் இறந்த மொழியும் (extinct language) உருதுவும், சிந்தியும் பிரதேச மொழியல்லாதவையும் ஆகும்.

2 பொ. தமிழ் எனப்படுவது தமிழகத்தில் உயர்வகை மொழி மாதிரியாகக் (Variety) கருதப்படுவனவும், தற்போது தமிழகத்தில் எழுத்து மொழியாக எடுத்தாளப்பட்டு வரும் மொழி மாதிரியைச் சார்ந்தனவும், பெரும்பாலும் பள்ளிப்படிப்பின் வாயிலாகப் பயிற்றுவிக்கப்படும் மாதிரியும் சில குறிப்பிட்ட சிறப்புச் சூழ் நிலைகளில் (formal situation) மட்டுமே பேசப்படுவன அன்றிச் சாதாரணப் பேச்சு சூழ்நிலையில் (informal speech situation) எந்த மக்களாலும் முழுமையாகப் பேசப்படாததும் ஆன மொழி மாதிரியாகும்.

3 பே. பொ. தமிழ் என்பது தமிழகத்தின் தமிழ் மக்களின் பேச்சு வகைகள் அனைத்திற்கும் பொதுவகையாக அமைந்துள்ளதும், திசைக்கிளை மொழி (regional dialect) என்றும் சமூகக்கிளை மொழி என்றும் வரையறுத்துக் கூறமுடியாததும், ஆனால் பொ. தமிழ் மாதிரியில் இருந்து மாறுபட்டதும். பொதுவாகத் தமிழைத் தாய் மொழியாக கொண்டுள்ளோர் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதுமான தமிழ் மொழிவகையைச் சாரும். (இங்கு எடுத்தாளப்பட்டுள்ள பே. பொ. தமிழ் மாதிரிகள் முக்கியமாக தென் மாவட்டங்களாகிய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வழக்கிலிருக்கும் பேச்சு மொழியாகும்.)

4 க. தமிழ் என்பது தமிழகத்தின் தென் மாவட்டமாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லா சமூகத்தினராலும் பேசப்படும் பொது மொழி வகையைச்சாரும்.

5 வி. மொழி என்பது கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்தில் எல்லா சமூகத்தினராலும் பேசப்படும் பேச்சு பொது மொழி வகையைச்சாரும். இதை க. கிளைமொழியின் துணைக்கிளை மொழி (Sub-regional dialect) எனக் கொள்ளலாம். விளவங்கோடு என்ற இடப்பெயர். வில்லவன் கோடு என்பதின் உருமாற்றம் எனலாம். வில்லவன் என்பது சேர அரசனைக் குறிக்கும் பெயர். **கோடு** என்பது **கோட்டம்**'region' என விரிவுபடுத்தலாம், அல்லது **கோடு** என்பது எல்லை (boundary) அல்லது குன்று (hill) எனப்பொருள்படும்.

6 பொ. தமிழில் -அ- விற்கு பதிலாக -அய் என்ற உயிர்த்தொகுதி சொல்லின் இறுதியில் வருவதுண்டு. இவ்வுயிர்த் தொகுதிகள் பே. பொ. தமிழில் -எ ஆக மாற்றம் அடைகின்றது. இவ்வாறான இடங்களிலும் மேற்கூறிய மாறுபாடு பே. பொ. தமிழில் நிகழ்கின்றது.

7 (~) என்கிற குறியானது உயிர்களின் மேல் வரின் உயிரும் இக்குறியும் சேர்ந்து மூக்குயிரைக் குறிக்கும்.

8 * இக்குறியிட்ட மூன்று சொற்களும் முறையே **பிடை**, **பிணம்**, **பிழப்பு** என்றும் பொ. தமிழ் சொற்களில் இருந்து (பின்னசையில் **-அய்-** அல்லது **-அ-** வருவதால்) மாறுதல் அடைந்தவைகள்.

9 க. தமிழில் இவ்வித முறைக்கு ஒவ்வாமல் **புண்ணாக்கு** என்ற சொல் வழக்கில் இருக்கின்றது. இது பொ. தமிழில் **பிண்ணாக்கு** ஆகும். இது ஒரு சமயம் ஏனைய கிளை மொழிகளில் இருந்து கடன் வாங்கிக்கொண்டதாக இருக்கலாம் எனத் தெரிகின்றது

10 பின்குறிப்பு 11-ஐப் பார்க்கவும்.

11 க. தமிழில் காணப்படும் **கடவம்**, **கிடுவு** ஆகிய சொற்கள் முறையே **கடகம்**, **கிடுகு** என சில சமயங்களில் இ தமிழில் வழங்கப்படுகின்றன.

12 **உறக்கம்** என்கிற பொ. தமிழ்ச் சொல் **உறக்கம்** என்றே இ. தமிழிலும் **ஒறக்கம்** என்று க தமிழிலும் வழக்கத்திலிருக் கின்றது.

13 **கிழமை** என்கிற பொ. தமிழ்ச் சொல் **கிளமை** என இ.தமிழிலும் **கெளமை** என க. தமிழிலும் வழக்கிலிருக்கின்றன.

14 இ. தமிழில் ஒலி பரப்பப்படும் நாட்டுப் பாடல்கள், நாட்டுப் பேச்சு வழக்குகள், நாட்டுப்புற நாடகங்கள் முதலியவைகளை இலங்கை தமிழ்ச் சேவை ஒன்று, அல்லது இரண்டு மூலம் ஒலி பரப்புவதைக் கேட்போர்க்கு அவைகள் புரிவது மிகக் கடினம். சில சமயங்களில் அவைகள் வேற்று மொழியோ என எண்ணும் அளவிற்கு புரியாமல் வேறுபட்டு விளங்கும். அதே சமயம் வி. தமிழ் பேசுநர் ஒருவருக்கு தன் கிளை மொழியை ஒலி பரப்புவது போன்ற உணர்வு ஏற்படும். இவ்வுணர்வை நான் பல நாட்கள் உணர்ந்துள்ளேன்.

15 இவ்வாறான மாற்றங்கள் (ஒ > எ ஆகவும் ஓ > ஏ ஆகவும்) குறிப்பிட்ட சில சொற்களில் மட்டும், சில ஏனைய தமிழ்நாட்டு கிளை மொழிகளாகிய தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பேச்சு வழக்கில் அரிதாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

16 பேராசிரியர் சண்முகம் பிள்ளையவர்கள் **-கொ-** என்கிற முன்னொட்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யூரையடுத்து வாழும் கிருஷ்ணவகைக்காரர் என்ற சமுகத்தினர் பேச்சிலும், நாடார் சமூகத்தினரது பேச்சிலும் காணப்படுவதாகக் கண்டுள்ளார். ஆயின் என்னுடைய தொகுப்புக்களில்(data collection) இவ்வொட்டு விளவங்கோடு வட்டத்திலும், அதையடுத்த கல்குளம் வட்டத்தின் சில பகுதிகளிலும் மீனவ சமூகத்தினரைத் தவிர ஏனைய எல்லாச் சமூகத்தினராலும் வழங்கப்பட்டு வருகின்றது.

17 **சவள்** என்ற இ. தமிழ்ச் சொல் **சவளு** என்று வி. தமிழில் பயன்படுத்தப்படுகின்றது.

18 **ஓம்** என இ. தமிழில் காணப்படும் சொல் [ஓ̃] என்று மூக்குயிராக வி. தமிழில் பயன்படுத்தப்படுகின்றது.

19 **கொடியா** என்ற சொல் விரைவாக (quick) என்ற பொருளுடன் இ தமிழிலும் **செடியா கெடுக்கி கெடியாட்டு** என்ற மாறிகளுடன் (variables) வி தமிழில் வந்து குறித்த நேரத்தில் (at that moment) என்ற பொருளையும் தருகின்றது.

20 தனஞ்ஜெய இராஜசிங்கம் என்பவர் தன்னுடைய பேச்சை மட்டும் கைமோகிராப் (Kymographic) ஆய்வு மூலம் ஆய்ந்து ஏனையோரது பொதுப்படையான கூற்றை மறுக்கிறார். எப்படியாயினும், ஒருவருடைய பேச்சை ஆய்வதின் மூலம் ஒருகிளை மொழியை ஆய்ந்து விட இயலாது.

21 இங்கு குரல் ஒலியைக் (voiced sound) குறிக்க போதிய வரி வடிவம் இல்லாமையால் குரல் ஒலியைக் குறிக்க ஒலியற்ற எழுத்தின் அடியில் ஒரு புள்ளி இடப்பட்டுள்ளது.

22 ஈழல் என்பது சிங்களம் என்ற பெயரின் உருமாற்றம் எனத் தெரிகிறது. **சிங்களம்** என்பது இலங்கையின் பழைய பெயராகும். குறிப்பாக இப்பெயர் தற்போதைய யாழ்ப்பாணத்தை குறிக்கும் பழம் பெயராகும். இவ்வீழவர்கள் ஈழநாட்டிலிருந்து வந்தமையால் ஈழவர்கள் எனப் பெயர் பெற்றனர்.

நன்றியுரை:

முதன் முதலில் இலங்கைப் பேச்சுத் தமிழுக்கும் விளவங்கோடு பேச்சுத் தமிழுக்கும் ஏதோ ஒருவகையான ஒற்றுமை இருப்பதை எனக்குக் கூறி அதற்கான காரணங்களை அறிய முழுமூச்சுடன் உற்சாகமூட்டிய என் ஆசிரியர் டாக்டர் செ. வை. சண்முகம் அவர்களுக்கும், இக்கட்டுரையை படித்து பல திருத்தங்களும் கூறிய என் ஆசிரியர் திரு க. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், என் அன்பர் திரு ச. வேணுகோபால் அவர்களுக்கும், இன்னும் பல உசாத்துணை நூற்களைத் தந்து உதவிய ஆசிரியர் டாக்டர் ஜி. சீனிவாச வர்மா அவர்களுக்கும் என்னுள்ளம் கனிந்த நன்றி.

உசாத்துணை நூற்கள்

1. Agesthialingom, S. 1969 "Pronominal endings in Ceylon Tamil" *Journal of Annamalai University* Vol. 26, 49-64, Annamalainagr.

2. ——— 1970 "Three dialects of Tamil" *Pakha Sanjam* No. 13. Patiyala.

3. Balasubramanian, K. and Yesudhason C. 1979, *Southern Vilavancode Tamil A Sub-regional dialect* Annamalai University(forth coming)Annamalainagar.

4. Japam Pavadaarini, 1977. "Ñaanaa" (Five hundrad Rupees awarded, Ceylon short story) Kumudam, December 1977.

5. Kamil V. Zvelebil, 1959, "Dialects of Tamil" Ar. Or. Vol. 27, 286-96.

6. ——— 1960. "Dialects of Tamil II" Ar. Or. Vol. 28, 220-4

7. ——— 1966 "Some feets of Ceylon Tamil" I. I. J. Vol. IX, No. 2, 113–38

8. Kanapathi Pillai K. 1958 "The Jaffna Dialect of Tamil" I. L. Turner Jubilee, Vol. 1, 211–27

9. Kothandaraman P. 1976. *Ulakil Tamilum Tamilarum* Ulakattamil a:ra:ycci niruvanam, Madrass.

10. Meenakshisundaran, T. P. 1964 "*Ceylon and Tamil*" An address delivered by the author at Annamalai University during Orient-week. Oct. 1963.

11. Shanmugam Pillai M. 1972. "A Tamil dialect in Ceylon" I. L., Vol. 23, 90.

12. ——— 1973 "Ya:lppa:nattamil", *ikka:lattamil* Madurai.

13. Suseendira Rajah, S. 1967. *A Descriptive study of Ceylon Tamil* (with special Reference to Jaffna Tamil), unpublished Ph.D. dissertation submitted to Annamalai University.

14. ——— 1973 "Phonology of Sri-Lanka Tamil and Indian Tamil contrasted", I. L. Vol 34, No. 3, 171–179.

15. ——— 1976 "Enunciative Vowel in Jaffna Tamil", S.T.D Vol., No. 1, 123.

16. Thurston, E. 1909 *Castes and Tribes of Southern India*, Vol. 2, (C–J), 392, Cosmo Publications Delhi.

17. Velupillai, A. 1977, "Commoness between Malayalam and Jaffna dialect of Tamil" paper read in the world conference on Malayalam 1977.

மொழியியற் பேரறிஞர்

மு. ப. எமனோ (M. B. Emeneau)

திராவிட மொழியியல் பேரறிஞர் டாக்டர் முர்ரே பர்ன்சன் எமனோ (**M. B. Emeneau**) அவர்கள் 1904ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 ஆம் நாள் லுன்னென்பர்க் என்னுமிடத்தில் பிறந்தார். 1923 ஆம் ஆண்டு டல்ஹௌசி பல்கலைக்கழகத்தில் பி ஏ. பட்டமும் 1935 ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பட்டமும், 1931 ஆம் ஆண்டு யேல் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டமும் (பி.எச் டி.) பெற்றார். பி.ஏ. பட்டப் படிப்பிலேயே சம்ஸ்கிருதம், இலத்தின், கிரேக்கம் முதலிய மொழிகளைப் பயின்றார். 1931-35 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க நாட்டு மானிட மொழியியல் பேரறிஞர் சபீரிடம் மானிடவியலும் (**Anthropology**) மொழியியலும் பயின்றார். 1968ஆம் ஆண்டு சிக்காக்கோ பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டமான எல் ஹெச்.டி. (L.H.D.) (**Doctor of Humane letter**) அளித்து இவரை கௌரவித்தது. டல்ஹௌசி பல்கலைக் கழகம் எல்எல்.டி. (LL.D.) பட்டம் அளித்து சிறப்பித்தது. 1969 ஆம் ஆண்டு யேல் பட்டக் கல்லூரிக்கழகம் லூசியஸ் தங்கப்பதக்கம் அளித்து இவரைச் சிறப்பித்தது.

1923-26 ஆம் ஆண்டுகளில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பல்லியோல் கல்லூரியில் ஆய்வாளராகப் பணியாற்றினார். 1938 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து அமெரிக்கா திரும்பியவுடன், கலிபோர்னியா பல்கலைக் சுழகத்தில் சம்ஸ்கிருதம் மற்றும் பொது மொழியியல் துறையின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றார். இரண்டாம் உலக யுத்தத்தின் போது, போர்ப்படை வீரர்கட்கு வியட்நாமிய மொழியைக் கற்பித்தார். அதனோடு வியட்நாமிய மொழிக்கு விளக்க இலக்கணம் ஒன்றும் எழுதினார். 1946 ஆம் ஆண்டு முதல் மொழியியல் துறையின் பேராசிரியரானார்.

1952 ஆம் ஆண்டு மொழியியல் நிறுவனத்தில் இந்தோ-ஐரோப்பிய ஒப்பிலக்கணத்திற்குப் பேராசிரியராக இருந்தார். 1949 ஆம் ஆண்டு அமெரிக்க மொழியியல் கழகத்தின் தலைவராக யிருந்தார். 1954-55 ஆம் ஆண்டு அமெரிக்க கீழைக் கழகத்திற்குத் தலைவராகயிருந் தார். 1962 ஆம் ஆண்டு அமெரிக்க தத்துவ இயல் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1966 ஆம் ஆண்டிலிருந்து உலகத் தமிழாராய்ச்சிக்கழகத்தின் துணைத்தலைவராக உள்ளார். கிரேட் பிரிட்டன் ராயல் ஆசியக் கழகத்தின் கவுரவ ஆய்வாளராகவும் உள்ளார். இந்திய மொழியியல் உலகிற்கு அவர் செய்த தொண்டின் காரணமாக, இந்திய மொழியியல் கழகம் அவரை 1964ஆம் ஆண்டு கௌரவ உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது.

அவரது வாழ்வின் திருப்பு மையமே 1935_38ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து தோடா, கோத்தா, கோலாமி போன்ற திராவிட பழங்குடி மொழிகளைப் பற்றி கள ஆய்வு (field work) செய்து, ஆய்வுக் கட்டுரைகளாகவும் நூலாகவும் வெளியிட்டமை யாகும். திராவிட ஒப்பு மொழியியலைப் பற்றியும் நீலகிரி பழங்குடி மக்களது வாழ்வு, வரலாறு பற்றியும் இந்திய நாட்டுப்புற இயல் (Folklore of India) குறித்தும் ஆய்வுகள் நடத்தி ஆய்வுக் கட்டுரை களாகவும் நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

மற்றொரு திராவிட மொழியியல் பேரறிஞர் தா. பர்ரோ (T. Burrow) வுடன் இணைந்து திராவிடச் சொற்பிறப்பியல் அகராதியும் (Dravidian Etymological Dictionary 1961) அதன் பிற்சேர்க்கைத் தொகுப்பும் (Dravidian Etymological Dictionary:supplement 1968)) வெளியிட்டார். திராவிடச் சொற் பிறப்பியல் அகராதியின் தோற்றம் திராவிட ஒப்பியல் ஆய்வில் ஒரு புதிய வரலாற்றின் தொடக்கம் என்றும், திராவிட மொழியியல் வரலாற்றின் ஒரு திருப்பு மையம் என்றும் அறிஞர் கூறுவர். இவ்விரண்டு அறிஞர்களின் கூட்டு முயற்சியின் விளைவாக இவ் வகராதி தோன்றியது.

தோடாப் பாடல்கள் (Toda Songs) என்ற இவரது நூல் இந்திய நாட்டுப்புற இயலில் குறிப்பிடத்தக்க நூலாக அறிஞர்களால் கருதப் படுகின்றது. திராவிட மொழியியல், இனவியல் சம்பந்தமாக ஐம்ப

துக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். திராவிட அவை ஒரேயொடு காரணத்தைத்தான் காட்டமுடியும், மேலும், மொழிகளின் ஒலியியல் ஒப்பாய்வு மூலம் (Comparative Dravidan Phonology) ஒப்பியல் ஆய்வில் தனக்கென ஒரு சிறந்த நெறியை வகுத்துக்கொண்டவர் என அறிஞர்கள் பலராலும் போற்றப்படும் பெருமையுடையவர். கலிபோர்னியாவில் பேசப்படும் அமெரிக்க இந்திய மொழியாராய்ச்சிக்கு இவரே மூல காரணகர்த்தாவாகயிருந்தார். சமஸ்கிருதப் பேராசிரியராகவும் இருந்தமையால், அத்துறையிலும் ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். தோடா, பிராஹுவி, கோத்தா, கோலாமி போன்ற மொழிகளை தற்கால மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்தார். 'இந்தியா ஒரு மொழியியல் பகுதி' (India as a Linguistic area) என்ற இவரது கோட்பாடு, இன்று வளர்ந்து வரும் சமூக மொழியியல் துறைக்கு அடிப்படைக் காரணமாகும். திராவிட மொழியியல் சம்பந்தமாக இவர் செய்த ஆய்வினை நான்கு பிரிவாகப் பிரிப்பர்:

i. இலக்கியமில்லாப் பழங்குடி மொழிகளை ஆராய்தல்.

ii. தனிப்பட்ட மொழிகளின் தரவு (data) மூலம் ஒப்பாய்வு செய்தல்.

iii. திராவிட ஒப்பிலக்கணம்.

iv. கடன் பெறல் மற்றும் மொழியியல் பரப்பு அடிப்படையில் அமைந்த கோட்பாடு முதலியன.

இவர் எழுதிய முக்கிய நூல்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் திராவிட மொழிகளின் அமைப்பு, ஒப்பாராய்ச்சி இவற்றில் நாட்டம் கொண்டவர்களுக்கும் பொதுவாக மானிட மொழியியல் ஆராய்ச்சியில் ஆர்வங்கொண்ட அனைவர்க்கும் இவரது நூல்களும் கட்டுரைகளும் பெரிதும் பயன்படக்கூடியன.

1944-1946 Kota Texts (Parts IV).
University of California Press, Berkeley

1951 Studies in Vietnamese (Annamese) Grammar.
University of California Press, Berkeley

1955 Kolami. A Dravidan language. University of California Press, Berkeley. Annamalai University 1961.

1961 A Dravidian Etymological Dictionary. Oxford (wlth T. Burrow)

1968 A Dravidian Etymological Dictionary, A Supplement Oxford (with T. Burrow)

1962 Dravidian Borrowings from Indo-Aryan (with T. Burrow) University of California Press, Berkely

1962 Brahui and Dravidian Comparative Grammar, University of California Press, Berkely.

1965 India and Historical Grammar, Annamalai University

1967 Dravidian Linguiitics, Ethnology and Folktales, Collected Papers Annamalai University

1970 Dravidian Comparative Phonology: A Sketck, Annamalai University

1971 Toda songs, Oxford.

பேராசிரியர் எமனோவின் இந்திய மொழிகள் குறித்த மொழியியல் படைப்புக்கள், கிரியர்ஸன், ழூல்ஸ் பிளாக், டர்னர் போன்ற பேரறிஞர்களின் படைப்புக்களுடன் ஒப்பிடக்கூடியவையாகும். எமனோவின் மொழியியல் படைப்புக்களை நுணுகி ஆராய்ந்தால் மொழி பண்பாட்டின் ஒரு கூறு என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். இவர் இந்திய மொழியியல் உலகிற்குச் செய்த தொண்டினை நினைவு கூரும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வுத் துறையும் பூனா, டெக்கான் கல்லூரி மொழியியல் உயராய்வுத் துறையும் இணைந்து மணிவிழா மலர் ஒன்றை [Studies in Indian linguistics (Prof M B. Emeneau Sastipurti Volume)]யும் வெளியிட்டு அவருக்குச் சிறப்புச் செய்தன.

— சு. சக்திவேல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மொழியியல் 2,4 (1979)

தொல்காப்பியரும் அகராதியும்

தெ. மீ. காமேஸ்வரி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. எடுத்துக்காட்டாகவரும் அடிச்சொற்களின் பட்டியல்

எந்த மொழியை விளக்க வேண்டும் என்றாலும் அந்த மொழியைப் பலவகையில் ஆய்வு செய்து கிடைத்த குறிப்புகளின் மேல் தான், குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டுதான், விளக்கம் வரும். வடமொழியை மிகச் சிறந்த வகையில் விளக்கும் பாணினியின் இலக்கணம், அதற்கு முன்னரே அந்த மொழியில் வழங்கிய அடிச்சொற்களின் பட்டியல் [தாது பாடம்] பலவகை விகுதி முதலியவற்றின் பட்டியல் என்ற இவற்றின் அடிப்படையில் எழுந்ததேயாம்.

தமிழ் இலக்கணம் தோன்றுவதற்கும் இத்தகைய பட்டியல்கள்– எல்லாவற்றையும் முழுமையாகத் தராமல் விளக்குவதற்கு வேண்டிய அளவில் எடுத்துக்காட்டுகளாக அமைந்த பட்டியல்கள் – உருபுகளின் பட்டியல், வேற்றுமை உருபுகளின் பட்டியல், விகுதி முதலியவற்றின் பட்டியல் போன்றவை துணைசெய்தன எனல் வேண்டும்.

ஒருவகையில் பட்டியலே இலக்கணமாம் வேற்றுமை உருபின் இலக்கணத்தைப் பலவகையாக கூறலாம். அந்தப் பலவகைகளிலே ஒன்று, வேற்றுமை உருபுகள் எல்லாவற்றையும் எடுத்துக் கூறி இவையே வேற்றுமை உருபு என்று முடித்தலாம். தொல்காப்பியத்தில் வரும் உரியியல் இந்தவகையில் அடிச்சொற்களை எடுத்துக் கூறி இவை போன்றன உரிச் சொற்கள் அல்லது அடிச் சொற்கள் என்று விளக்கி வைப்பதாம்.

பின்வந்த இலக்கணப் பேராசிரியர்களில் சிலர் தொல்காப்பியர் கூறிய உரிச்சொல் என்ற கருத்தினை அறிந்துகொள்ளாமை வருந்தத்தக்கதாம். உரிச்சொல் என்பது அடிச்சொல்லே. ஆனால் அதனை தனியே எடுத்துக்கூற முடியாது தொல்காப்பியர் பின் பற்றிய முறையை ஆராய்வோமானால் செய்து, செய்யும் எனக் கூறும் வாய்பாடுகளில் செய் என்ற பொதுமை வடிவாய் சுட்டப் படுவது அடிச்சொல்லேயாம். (தொல்-713 முதலிய சூத்திரங்களைக் காண்க) எனவே தொல்காப்பியர் உரிச்சொற்களின் பட்டியலைத் தரும்போது **முதல்நிலைப் பெயராக** வருபவை நீங்கலாக மற்றவற்றை விகுதி சேர்த்தே காட்டுகிறார். இப்படிக் கூறவேண்டுவதின் இன்றியமையாமையை உணராதவர்கள் உரிச்சொல் என்பது அங்கே காட்டப்படும் அடிச்சொல்லே அன்றி அங்கே பொருள் விளக்கத்தை முன்னிட்டு காட்டப்பட்ட முழுச்சொல்லும் அல்ல என்பதை உணராது உரிச்சொல் என்பது வழக்கத்தில் வரும் முழுச்சொல் வகைகளில் ஒன்று எனக் கருதிவிட்டார்கள். முழுச்சொற்களைத் தொல்காப்பியர் இரண்டே வகையாகத்தான் பிரிக்கின்றார், பெயர்ச் சொல், வினைச்சொல் என்று. (643) இந்த இரண்டையும் மேலும் சொல் உருபுகளாக வகைசெய்யும்போது அடிச்சொற்களான உரிச் சொல் என்ற பிரிவும் அந்த உரிச்சொல்லை இலக்கண வகையாக மாற்றும் விகுதி முதலிய இடைச்சொற்கள் என்ற பிரிவும் எழும் என்று அவர் கூறியிருக்கிறார். (644). சேனாவரையரும் தெய்வச் சிலையாரும் உரிச்சொல்லை தாது (அடிச் சொல்) என்று குறித்துள்ளார்கள். தொல்காப்பியர் அடிச்சொற்கள் ஒருபொருள் குறித்த பல சொல்லாகியும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் வருவதைச் சுட்டுகின்றார்(782) இது அடிச்சொல்லின் இயல்பாகும். ஆனால் முழுச் சொல்லாக வருகின்றவற்றிலும் இயற்சொல்லாக அன்றி ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகியும் வேறு பொருள்

குறித்த ஒரு சொல்லாகியும் திரிசொல்லாக வரும் (882). இங்கே வேறுசொல் என்று முழுச்சொல் வடிவத்தையே குறிக்கின்றார். உரிச்சொல்லைக் கூறும்போதோ அப்படிக் கூறாமல், ஒருசொல் பல பொருட்டு உரிமை தோன்றினும் பலசொல் ஒரு பொருட்டு உரிமை தோன்றினும் என உரிமை தோன்றலை வற்புறுத்துதலைக் காண லாம் (782). இந்த நுட்பத்தை உணராமல் உரிச்சொல் எல்லாம் திரிசொல் அதாவது உலக வழக்கத்தில் வரும் இயற்சொல் போல் அல்லாது செய்யுள் வழக்கில் வரும் திரிசொல் என்றும், ஒருவர் 'செய்யுட்குரியன உரிச்சொல்' (நன்னூல் உரியியல்-1) என்றும் கூறினர். இதன் பயனாக ஒருபொருள் குறித்த வேறுபொருள் சொற் களையும் (Synonyms) வேறுபொருள் குறித்த ஒரு சொல்லையும் (Homonyms) விளக்கும் நிகண்டுகள் எல்லாம் உரிச்சொற்களையே கூறுகின்றன என்று கொண்டு அந்நிகண்டுகளை "உரிச்சொல் பனுவல்" என்று நன்னூல் வழங்குகிறது. பிங்கலம் என்ற நிகண்டு அத்தகைய உரிச்சொல் பனுவலாம். நன்னூல் வழக்கை ஒட்டிக் காங்கேயனார் நிகண்டு ஒன்று எழுதியபோது அதற்கு "உரிச்சொல் நிகண்டு" என்றே பெயரிட்டார். உரிச்சொல் என்பதற்கு இப்படி பொருள்கொள்ள வந்ததனால், தொல்காப்பியத்தில் வரும் உரிச் சொல்லியலை தமிழில் வரும் முதல் நிகண்டு என்று தமிழகராதி (Tamil Lexicon p xxv) கூறலாயிற்று.

ஒவ்வொரு சொல்லும் ஒருவகையில் அதன் பொருளைத் தருகின்ற ஒரு குறியீடேயாம். அது அந்தப் பொருளின் எதிரொலி யாகலாம். அதாவது அதன் ஒலியைச் சுட்டுவதன் மூலம் அந்தப் பொருளை குறிக்கலாம். [காக்கை என்பது காகா என அதன் ஒலியை சுட்டுவது காண்க]. அல்லது அதன் பண்பைச் சுட்டலாம்; அல்லது அதனைப்பற்றி மனதால் உணரக் கூடிய குறிப்பு அல்லது கருத்தைக் குறிக்கலாம். இங்கே Bow Vow, Ding Dong முதலிய கருத்துக்கள் நினைவுக்கு வரலாம். ஆனால் இங்கே இவற்றை ஆராய வேண்டுவது இல்லை. தொல்காப்பியர் உரிச்சொல் 'இசையி னும் குறிப்பினும் பண்பினும் தோன்றும்" (782) என்று கூறுவதை மட்டும் இங்கே சுட்ட வேண்டும். அந்தச் சூத்திரத்திலேயே உரிச் சொல்லும் இடைச்சொல்லும் பெயர்க்குள்ளும் வினைக்குள்ளும் வரும் என்ற இயல்பினுக்கேற்ப, பெயரினும் வினையினும் உரிச்

சொல் மெய் கெட்டு மாறிவரும் என்று கூறுகிறார். அதாவது பகுதியானது வா, வரு, வம் எனப் பல வடிவங்களில் தடுமாறி வருவதைச் சுட்டுகிறார். அது, ஒருசொல் பலபொருட்டு உரிமை தோன்றியும் பல சொல் ஒரு பொருட்டு உரிமை தோன்றியும் வருவதை இங்கே குறிக்கின்றார். ஒரு உரிச்சொல்லின் பொருளை அறிய மாற்றி அமைக்கும் முறையைப் [Method of substitution] பின்பற்றலாம் என்கிறார். அதாவது உரிச்சொல் வரும் இடத்தில் அந்த இடத்தில் அது கொடுக்கும் பொருள் மாறுபடாதபடி வேறு ஒரு சொல்லை அதற்குப்பதில் ஈடு செய்து அத்தகைய பதிலீட்டு முறையால் பொருள் காணலாம். ஆனால் அப்படிப் பொருள் காணும் போது வழக்கு மரபினை மறத்தலாகாது. இவற்றை எல்லாம் மனதில் கொண்டு ஆராய்வோமேயானால் எந்தச் சொல்லானாலும் தன் சிறப்புப் பொருளை விளக்கிவிடும். எனவே இந்த முறையைப் பின்பற்ற வேண்டும். இப்படித்தான் தொல்காப்பியர் உரிச்சொல்லை விளக்குகின்றார் (782). மேல்வாரியாக பார்க்கும்போதே பொருள் விளங்குகின்ற உரிச்சொல்லைப்பற்றி ஆராய்ச்சி இல்லை. அப்படி விளங்க வராத சொற்களைப் பற்றிதான் இங்கே ஆராய்ச்சி [783]. தொல்காப்பியர் ஒரு சில உரிச்சொற்களை எடுத்துக்காட்டி அவற்றின் பொருள்களையும் விளக்குகின்றார். இதன் முடிவாக உரிச்சொல் என்ற கருத்தினையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது அவர் நோக்கம். ஒரு உரிச்சொல்லுக்கு ஒருபொருள் இருக்கலாம். ஒரே உரிச்சொல்லுக்கு பல பொருள் இருக்கலாம். சொல்லும் அதன் பொருளும் ஒருபொருட் பன்மொழி ஆகின்றன. இவற்றை விளக்கிய பின் பல பொருள் ஒரு சொன்மையை [Homonym] கடி முதலிய சொல் கொண்டு விளக்குகிறார் [866, 867]. **கடி**க்குப்பின்னால் **ஐ, முனைவு, வை, எறுழ்** என்ற நான்கு சொற்களைக் கூறுகின்றார். **கடி** என்பதன் பின்னால் வருவதால் இவையும் பல பொருள் ஒரு சொன்மைகளாம். ஆனால் இவை மேல்வாரியாக விளக்கும் பொருண்மை எல்லோருக்கும் விளங்குகிற பொருண்மையைக் கூறாது அரிதுணர் பொருளையே விளக்குகின்றார். அப்படிக் கொண்டால்தான் அவை பல பொருள் ஒரு சொன்மையாகும். **ஐ** என்பது மென்மை [839] என்ற பொதுப் பொருளைத் தருவதேயன்றி ஆசிரியர் காட்டுவதுபோல **வியப்பு** என்ற பொருளையும் தரும் (868) தலைமை **[ஐயர், என்னை]**

என்ற பொருளும் பொதுப் பொருளேயாம். **முனை** என்பது பொதுவாக **முனைதல், முன் செல்லுதல், முயலுதல்** என்று பொருள்படும். ஆனால் **வெறுப்பு** என்பது அதன் அரிதுணர் பொருள் என்பதை ஆசிரியர் கூறுகின்றார் [869]. **வை** என்பதற்குப் பொதுவான பொருள்கள் **வைதல்** [அதாவது **திட்டுதல்**] அல்லது **வைத்தல், இடுதல்** என்பனவாம். ஆனால் அரிதுணர் பொருள் கூர்மை என்று ஆசிரியர் கூறுகின்றார் [870]. **எறுழ்** என்பதன் பொதுப் பொருள், தொல்காப்பியர் எழுதிய காலத்தில் குறிஞ்சித் திணையில் விளையும் ஒரு சிவந்த **பூ**வாகும். ஆனால் அதன் அரிதுணர் பொருளோ **வலி** எனறு கூறுகின்றார் [871].

உரிச் சொற்களைத் தரும்போது **எதுகை, மோனை, முரண், இயைபு** முதலிய தொடை அழகு வர அமைத்துச் சூத்திரம் செய்கின்றார்.

உரு, புரை, குரு — எதுகை

உகப்பு, உவப்பு – மோனை, இயைபு

பிற்காலத்தில் பேச்சு வழக்கில் **பகல், பவல்** என **க**கரமும் **வ**கரமும் மாறாடுகின்றன. **உயிர் உசிர்** என **ய**கரமும் **ச**கரமும் மாறாடுகின்றன. இது கொண்டு **உகப்பு உவப்பு; பயப்பு பசப்பு;** என்பவற்றை ஒன்றென்பதற்கில்லை. அத்தகைய மாறாட்டம் தொல்காப்பியர் காலத்தில் எழுந்தது என்று கூறுவதற்கில்லை. ஆனால் கீழே காட்டியவற்றில் உயிர் எதுகையும் இயைபும் வரக் காணலாம். இவற்றில் ஒவ்வொரு ஒலிமட்டுமே வேறுபடுதலால் (minimum Pairs) குறைந்த அளவில் வந்து பொருள் வேறுபடும் இணைச் சொற்கள் என்று கொள்ளலாம். எனவே இவற்றை அடுத்தடுத்துக் கூறுவதில் பொருள் ஆழமுண்டு.

உகப்பு '**உயர்தல்**' :	உவப்பு '**உவகை**' (789)
பயப்பு '**பயன்**' (790) :	பசப்பு '**நிறன்**' (791)
இயைபு '**புணர்ச்சி**' (792) :	இசைவு '**இசை**' (793)

உரியியலிலிருந்து கீழ்க்கண்ட நிகண்டை அமைக்கலாம்.

எண்	சொல்		பொருள்
1.	அதிர்வு	=	நடுக்கம்
2.	அமர்தல்	=	விரும்புதல்
3.	அரி	=	மென்மை
4	அல்மரல்	=	மனச்சுழற்சி
5.	அழுங்கல்	=	இரக்கம், கேடு, ஒலி
6.	ஆய்தல்	=	உள்ளதன் நுணுக்கம்
7.	இசைப்பு	=	இசை
8.	இயம்பல்	=	ஒலித்தல்
9	இரங்கல்	=	ஒலித்தல், கழிந்ததற்குக் கவலை
10.	இலம்பாடு	=	வறுமை
11.	இன்னல்	=	துன்பம்
12	இயைபு	=	ஒன்றாய்க் கலத்தல்
13.	உகப்பு	=	உயர்தல்
14.	உசா	=	ஆலோசித்தல்
15.	உயா	=	வருத்தம்
16.	உரு	=	உட்குதல்
17.	உரும்	=	அச்சம்
18.	உவப்பு	=	மகிழ்ச்சி
19.	உறப்பு	=	செறிவு
20.	எய்யாமை	=	அறியாமை
21.	எறுழ்	=	வலி
22.	ஏ	=	பெருக்கம்
23.	ஏற்றம்	=	நிறைவு, துணிவு
24	ஐ	=	வியப்பு
25.	ஒழுகல்	=	நேர்பு, நெடுமை
26.	ஒற்கம்	=	வறுமை
27.	கதழ்வு	=	விரைவு, துணைவு
28	கடி	=	வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், முன்தேற்று, ஐயம், கரிப்பு
29.	கமம்	=	நிறைவு
30.	கம்பலை	=	ஒலி
31.	கய	=	நளி, பெருமை, மென்மை
32.	கறுப்பு	=	சினம், நிறம்
33.	கருவி	=	தொகுதி
34.	கலி	=	ஒலி
35.	கவர்வு	=	விருப்பு
36.	கவவு	=	அணைத்தல்
37.	கழி[வு]	=	உள்ளது சிறத்தல்
38	கழுமு	=	குவிதல்
39.	கெடவரல்	=	விளையாட்டு
40.	கெழு	=	நிறம்
41.	குரு	=	நிறம்
42.	குழ	=	இளமை
43.	கூர்ப்பு	=	உள்ளது சிறத்தல்
44.	சாய்	=	உள்ளதன் நுணுக்கம்
45.	சாயல்	=	மென்மை
46.	செல்லல்	=	வருத்தம்
47.	சிலைத்தல்	=	ஒலித்தல்
48.	சிவப்பு	=	சினம், நிறம்
49.	சிறுமை	=	நோய்
50.	கீர்த்தி	=	மிகு புகழ்
51.	செழுமை	=	வளம், கொழுப்பு
52.	சேர்	=	திரட்சி
53	நெமிர்தல்	=	பரத்தல்
54	தவ	=	மிகுதி
55.	தாவு	=	வலமை, வருத்தம்
56.	தீர்தல்	=	விடுதல்
57	தீர்த்தல்	=	விடுதல்
58	தட	=	பெரிய,

எண்	சொல்	=	பொருள்
			வளைதல் [வளைவு]
59.	துவைத்தல்	=	ஒலித்தல்
60.	துவை	=	விரைவு
61.	துவன்று	=	நிறைவு
62.	தெருமரல்	=	சுழற்சி
63.	தெவு	=	கொள்ளுதல்
64.	தெவ்வு	=	பகை
65.	துயவு	=	அறிவின் திரிவு
66.	நம்பு	=	விருப்பு
67.	நளி	=	பெருமை, செறிவு
68.	நன்று	=	பெரிது
69.	நனவு	=	களன், அகலம்
70.	நனி	=	மிகுதி
71	நாம்	=	அச்சம்
72.	நிழத்தல்	=	உள்ளதன் நுணுக்கம்
73	நுணங்கு	=	நுண்மை
74.	நுழைவு	=	நுண்மை
75.	நொசிவு	=	நுண்மை
76.	பசப்பு	=	நிறம்
77.	படர்	=	உள்ளுதல், செல்லுதல்
78.	பணை	=	பிழைத்தல், பெருப்பு
79.	பண்ணை	=	விளையாட்டு
80.	பயப்பு	=	விளையாட்டு
81.	பரவு	=	போற்றுதல்
82.	பழிச்சு	=	போற்றுதல்
83.	பழுது	=	பயனின்மை
84.	பாய்தல்	=	பரவுதல்
85.	பிணை	=	பெட்பு
86.	பேம்	=	அச்சம்
87.	புரை	=	மிகுதி
88.	புலம்பு	=	தனிமை
89	புனிறு	=	ஈன்றதன்

எண்	சொல்	=	பொருள்
			அணிமை
90.	பொற்பு	=	பொலிவு
91.	போகல்	=	நேர்பு, நெடுமை
92.	பையுள்	=	நோய்
93.	மதவு	=	வலி, மிகுதி, வனப்பு, மடன்
94.	மல்லல்	=	வளம்
95.	மழவு	=	இளமை
96	மாதர்	=	காதல்
97.	மாலை	=	இயல்பு
98.	முழுது	=	எஞ்சாமை
99.	முனைவு	=	வெறுப்பு
100.	முரஞ்சல்	=	முதிர்வு
101	மே	=	மேவு, விருப்பம்
102	வை	=	கூர்மை
103	வய	=	வலிமை
104.	வயா	=	மிக்க வேட்கை
105	வம்பு	=	நிலையின்மை
106.	வறிது	=	சிறிது
107.	வால்	=	ஒளி
108.	வார்தல்	=	நேர்பு, நெடுமை
109.	வியல்	=	அகலம்
110.	விழுமம்	=	சீர்மை, சிறப்பு, இடும்பை
111.	விறப்பு	=	வெருவுதல், செறிவு
112.	விதர்ப்பு	=	நடுக்கம்
113.	வெம்மை	=	விருப்பம்
114.	வெறுப்பு	=	செறிவு
115.	யாணர்	=	புது வருவாய்
116.	யாண் [யாணு]	=	அழகு

2. உரியியல் நிகண்டா?

உரியியல் நிகண்டானால், உருபியல், வினையியல், இடை யியல், கிளவியாக்கம் முதலியனவும் விகுதி முதலியவற்றின் நிகண்டாதல் வேண்டும். பொருள் அதிகாரத்தில் வரும் மரபியலும் நிகண்டாதல் வேண்டும். தமிழ் இலக்கணத்தில் குழந்தைகளையும் உள்ளடக்கும் அஃறிணையில் ஆண்பால் பெண்பால் என்ற பாகுபாடு இல்லை. இந்தப் பால் வேற்றுமை எழுவாயும் பயனிலையும் ஒருபாலாகவே முடியவேண்டும் என்ற வாக்கிய இலக்கணத்திற்கே யாம் (494). உயர்திணை ஒருமையில் ஆண்பால் விகுதிகளும் பெண்பால் விகுதிகளும் தனித்தனியே உள்ளன. அஃறிணை ஒருமையில் அப்படித் தனித்தனிப் பால்விகுதிகள் இல்லை. வாக்கிய இலக்கணத்திலன்றிப் பொருள்வகை இலக்கணத்தில், வாழ்க்கை யில் அன்றாடம் பழகிவரும் பறவைகளையும் விலங்குகளையும், மாடு பசு என்பது போல் ஆண், பெண் எனப் பிரித்து வழங்குதல் இன்றியமையாததாம். இதற்காகவே மரபியலில் உலக வழக்கில் பயின்று வரும் அத்தகைய சொற்களைச் சொல்லியலாலன்றி பொருளியலால் வழக்கையும் மரபையும் ஒட்டி ஆண், பெண் என அச்சொற்களையும் (1501, 1502, 1533 லிருந்து 1569 வரை) பிரித்துக் காட்டியுள்ளார் இந்த வரிசைகளையும் நிகண்டு என்று கொள்வதா? இப்படி ஆணையும் பெண்ணையும் விலங்கு முதலிய வற்றையும் பிரித்தபின் அவ்விலங்குகளில் இளமையாய் உள்ள வற்றையும் ஒருபயன் கருதி வழக்கில் தனித்தனிச் சொல்லால் பிரித்துக்காட்டுவது மரபாகி உள்ளது. இவற்றையும் வரிசைப் படுத்தித் தொல்காப்பியர் தந்துள்ளார் (1500, 1503 – 1525). இவற்றையும் நிகண்டு என்று கொள்வதா? அப்படியானால் இலக்கணம் என்பதற்கும் நிகண்டு என்பதற்கும் வேற்றுமை இல்லாமலே போகும். இந்த நோக்கில் பார்க்கும்போது உரி[illegible]யல் என்பதை வடமொழி இலக்கணம் கூறும் சொற்களின் – அடிச்சொற் களின் பட்டியலாம் தாது பாடத்தோடு ஒப்பிடுதல் வேண்[illegible]டும். ஆகையால் தமிழ் அகராதியில் [Tamil Lexcion] தொல்காப்பிய உரியியலைத் தமிழில் உள்ள முதல் அகராதி என்று கூ[illegible] பது தவறாகும். ஆனால் அகராதியை அமைப்ப[illegible]கு முதல் [illegible]ாக நமக்குக் கிடைக்கும் அகராதியின் தோற்[illegible]வாய் என்று [illegible]ம். பிறப்பாக்கமுறை இலக்கணத்தில் [Gener[illegible]tive Gramma[illegible] [illegible]ரது

வானவும் [General] மாற்றுவகையானவும் [Transformational] ஆம். பிறப்பாக்க விதிகளில் பொருள்வகையாக அகராதி [lexicon] ஒன்று வேண்டப்படுகிறது. இந்த நோக்கில் தொல்காப்பியரின் உரி யியலானது தமிழ் இலக்கணத்தில் கிடைக்கும் அத்தகைய பொருள் அகராதிக்கு முதல் முதலான தோற்றுவாய் எனக் கொள்ளலாம்.

3. அகராதி ஆக்கம் [Lexicography]

அகராதி அமைக்கும் கலையில் சொற்களுக்கு பொருள் எப்படி எழுதுவது என்பது ஒரு தனிஆராய்ச்சியாம். தொல்காப்பியர் அடிச்சொற்களுக்குப் பொருள் உணர்த்தியபின், பொருள் உணர்த்த வரும் ஆசிரியன், பொருள் அறிய வருவார்க்குச் சொல் லின் பொருளை எப்படி விளக்குவது என்பதைத் தெளிவுபடுத்து கிறார். சொற்களின் பொருள்களை விளக்கவரும் அகராதி ஆசிரியர் களுக்கும் இச்சூழ்நிலை வழிகாட்டுவதாம். எனவே இச்சூத்திரங்கள் விஞ்ஞான முறையான அகராதி அமைப்பியலைச் [Lexicography சேர்ந்தனவாம்.

எடுத்துக்காட்டாக, ஆங்கில-தமிழ் அகராதி Poor என்பதற்கு 'பஞ்சை' 'பனாதி' என்று பொருள் தந்திருப்பதை ஆராயலாம். ஒரு ஆங்கிலப்பாதிரியார் ஞாயிற்றுக் கிழமையன்று ஏழைகளுக்கு உதவ முற்பட்டுத் தன்னுடைய தமிழ்வேலையாளை "bring a poor man" என்பதை அந்த அகராதியின் உதவியால் மொழி பெயர்த்து "பஞ்சை கொண்டுவா" என்று கட்டளையிடுகிறார். அந்த வேலை யாள் பருத்தியைக் கொண்டு வருகிறான். அதன்பின் தன் தமிழா சிரியரை அழைத்து இந்தநிலையை விளக்கினார். தமிழாசிரியர் வேலையாளைப் பார்த்து "பஞ்சை பனாதி இருந்தால் கொண்டுவா" என்கிறார். உடனே வேலையாள் ஒரு பிச்சைக்காரனை அழைத்து வருகிறான். இந்தக் கதை அகராதியைப் பயன்படுத்துவதிலுள்ள இடர்ப்பாட்டை விளக்குகிறது. தொல்காப்பியர் உரியியலில் உரிச் சொற்களைக் கூறுவது உரிச்சொல்லைப்பற்றிய உண்மைக் கருத்து நமக்கு விளங்குவதற்கேயாம். ஆனால் சொற்களுக்குப் பொருள் காணும்பொழுது அந்தச்சொல் வருகின்ற இடத்தை அறிந்து அதற்கு முன்னும் பின்னும் வரும் சொற்களுக்கு ஏற்பப் பொருள் கொள்ளல் வேண்டும். இப்படி வருமிடம் அறியும்போது குறிப்பிட்ட

உரிச்சொல் எந்தப் பொருளில் அந்த இடத்தில் வருகின்றது என அறிந்து பொருள் கூறுதல் வேண்டும். இதுவே தலையாய அறிவிப்பு; இப்படியே செய்ய வேண்டும். ஆனால் தமிழ் வழக்கின் மரபினை அறிந்தால் அப்போது பொருள் ஐயத்திற்கோ திரிபிற்கோ இடமின்றிப் பொருள் விளங்கிவிடும். இங்கு **நாம்** விளக்கும் கருத்தினையே தொல்காப்பியம் 874-ஆம் சூத்திரம் தெளிவுபடுத்துகிறது. மேலே கூறிய கதையில் **பஞ்சை** என்ற சொல், **பஞ்சை பனாதி** என்று வருகின்ற வழக்கில் ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாகிறது. ஃபர்த் (Firth) என்பாரும் அவரைச் சார்ந்தாரும் இது பொருட்டே வருமிடம் நோக்கியவை (Contextualism) என்று வகை செய்துள்ளார்கள். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டே அகராதி, சொல்லின் பொருளை விளக்கும்போது, அவை அந்தப் பொருளில் வந்த எடுத்துக்காட்டுகளையும் தருகின்றன. சொற்கள் தனியே சூன்ய அறைக்குள்ளோ, இருப்பு அறைக்குள்ளோ இருப்பதில்லை என்பதை இது விளக்குகிறது. வருமிடம் மாறுவதற்கு ஏற்பப் பல பொருள் நுட்ப வேறுபாடுகள் தோன்றுகின்றன.

அதுவேயும் அன்றிப் பொருளும் பலப் பல காரணங்களால் காலப்போக்கில் மாறிக்கொண்டே வருகிறது. **கப்பல்** என்பது இப்போது **நீராவிக்கப்பலையே** உணர்த்துகிறது எனவே சூத்திரத்தில் கொடுக்கப்பட்ட பொருளுக்கும் வேறாகப் பல புதிய பொருள்கள் எழக்கூடும். **கடி** என்ற சொல்லுக்கு 12 பொருள்கள் வந்துள்ளன. இத்தனைப் பொருள்கள் இருந்தும்கூட இந்தச் சொல் சங்ககாலத்திலேயே **நறுமணம்** என்கிற 13 ஆம் பொருளையும் தர முற்பட்டது என்று உரை ஆசிரியர்கள் காட்டுகிறார்கள். சொற்பொருளின் வரலாற்றுப் போக்கினை ஆராய்வதற்குச் சொற்பொருளியலின் (Semantics) இயற்கை இயலிற்கு வேண்டிய அடிப்படையை தொல்காப்பியர் அமைத்துள்ளார் எனலாம். இதனாலேயே வரலாற்று வகையான அகராதி இன்றியமையாது வேண்டும் என்பது தெளிவாகிறது.

உலகத்தை அறியவேண்டும் என்ற கருத்தின்றிச் சொல்லளவில் நின்றுவிடுவோம். ஆனால், ஒரு சொல்லிற்கு மற்றொரு பொருளைப் பொருளாக எழுதிவிடலாம் ஞாழல் என்றால் புலிநகக் கொன்றை

என்பார்கள். இதையே கிளிப்பிள்ளைபோல் சொல்லிக்கொண்டு வந்தால் இதனால் யாரும் அறிவு விளக்கம் பெறுவதில்லை. சொல்லானது விளக்கும் பொருளை எந்த வகையாலும் அறியாதபோது ஒரு சொல்லுக்குப் பதிலாக இரண்டாவது சொல்லைத் தருதலும் அது விளங்காமல் போனால் மூன்றாவது சொல்லைத் தருதலும் இப்படி முடிவின்றிப் போவதும் ஒன்றுக்கும் உதவுவதில்லை. இந்த முறையில் முடிவொன்றும் எழுவதற்கு வழியில்லை. வெறும் சொல்லுணர்ச்சியால் மட்டும் பொருள் உணர்ச்சி விளையா இடங்களை இவ்வாறு தொல்காப்பியர் விளக்குகிறார் (874

இப்படிப் போக வழி இல்லாமல் குன்று முட்டிய குருவிபோலப் பொருள் அறியவரும் நாம் அழியவேண்டுவதுதானா? போக்கு வழி இல்லையா? வழி உண்டு என்று தொல்காப்பியர் உறுதி கூறுகிறார். சொல் அறிவு ஒன்றுதான் என்பதற்கில்லை. ஆசிரியன் சொல்லையும் பொருளையும் உணர்ந்திருப்பானானால் அந்த உணர்வை பிறருக்கு உணர்த்தும் ஆற்றல் பெற்றிருப்பானானால் அந்த சொல்லைப் பற்றிய குழப்பமோ அறியாமையோ எழ வேண்டுவதற்கு இடமில்லை என்கிறார் தொல்காப்பியர் (875). ஆசிரியன் ஒரு சொல்லை மட்டும் கூறிமுடிக்காமல் அந்தப் பொருள் நம் மனத்தில் தெளிவாக உருவாகும்படி விளக்கலாம்; அல்லது முடியுமானால் அந்தப் பொருளைக் கொண்டுவந்து காட்டலாம். அல்லது அந்தப் பொருள் இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லலாம். இதுதான் நேர் அநுபவம். இல்லையானால் அதன் படத்தையோ அல்லது வரைபடத்தையோ கூடக்காட்டலாம். அத்தகைய கல்வித்துணைகளுக்கு [Educational aids] எல்லையே இல்லை. ஒரு சொல்லை விளக்க முற்படுபவனது கற்பிக்கும் ஆற்றலைப் பொருத்துள்ளது இத்தகைய விளக்கம். இப்படிக் கல்வியியலின் [Pedagogy] ஒரு நுட்பத்தைத் தொல்காப்பியர் இங்கே விளக்குகிறார். அகராதி அமைப்பியலின் [Lexicography] நுட்பமும் இங்கே தோன்றுகிறது. இதனால் அல்லவா இன்றுநம் அகராதிகளில் படங்களும் விளக்கங்களும் அமைந்துள்ளன.

ஆசிரியன் எவ்வளவு சிறந்தவனானாலும் அவனிடம் விளக்கம் அறிய வருகின்றவனது எல்லையைத் தாண்டி விட முடியாது. இதனால் பிறவியிலேயே முட்டாள்கள் இருக்கின்றார்கள்

என்று பொருள் அல்ல. அறிவு ஈவு [Intelligent Quotient] என்பது மிகுதிபடுத்தக் கூடியது என்று இன்றைய ஆராய்ச்சி வழி காட்டுகிறது. ஆனாலும் ஒருகுறிப்பிட்ட அறிவும் அநுபவமும் வருகின்றவரையில் ஒரு சில கருத்துக்கள் புரியாது. ஒரு குழந்தைக்கு Quadratic Equation என்றாலோ $\sqrt{-1}$ என்றாலோ எப்படிப் பொருள் விளங்கும்? வயதுவந்த மாணவனுக்குத்தான் விளங்குமா? முடிவாக அனுபவம்தான் அடிப்படை என்பது விளங்குகிறது. ஏதோ ஒரு வகையால் அந்த அடிப்படை அனுபவத்தின் நிலையைக் கிண்டிவிட முடியாமற் போனால் பலப்பல சொற்களையோ பல விளக்கங்களையோ தந்து பொருளை விளக்கிவிட முடியாது. அறிய வருபவனுக்கு அந்த அனுபவம் கிடைக்கும் வரை, எழும்வரை, பொறுத்துக்கொண்டுதான் இருக்க வேண்டும். ஆனால் ஒன்றும் முடியாதெனக் கையை விரிக்க வேண்டாம். இவ்வளவையும் கூறியமையால் சொற்பொருளியலின் வரலாறு (Semantic History) பண்பாட்டு வரலாற்றின் (Cultural History) அடிப்படையில்தான் விளங்கும் என்பது தெளிவாகிறது.

உரிச்சொல் என்பது அடிச்சொல். சொல்லைப் பகுதியாகவோ விகுதிகளாகவோ பிரித்துவிடலாம். ஆனால் அடிச்சொல்லை அப்படி மேலும் சொல்லுறுப்புகளாகப் பிரிக்க முடியாது (878). இதனால் ஒரு சொல்லைப் பிரித்துக்கொண்டே போனால் மேலே பிரிக்க முடியாமற்படி நிற்கும் சொல்லின் கருவே அடிச்சொல் என்ற இலக்கணம் கிடைக்கிறது.

சொல்லே பொருளை விளக்கிக்காட்டாதா? என்று சிலர் கேட்கலாம் ஒருசிலர் சொல்லுக்கும் சொற்பொருளுக்கும் இயல்பாகவும் நேரிடையாகவும் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார்கள். வேறு சிலரோ அத்தகைய இயற்கைத் தொடர்பொன்று இருப்பதை மறுத்து அங்கே இருப்பது ஒரு செயற்கைத் தொடர்பு என்பர். சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு சமய சக்தி அல்லது சமய ஆற்றல். சமுதாயம் ஒப்புக்கொண்டு தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் ஒரு மரபு இது. தொல்காப்பியர் இதுபற்றி முடிவு ஒன்றும் கூறாமல் போனாலும் சொல்லைப் பார்த்தவுடன் அந்தச் சொல் தன் பொருளைக் காரண வகையால் விளக்கி விடுவதில்லை.

மொழிப் பொருள் காரணம் விழிப்பத் தோன்ற அநுகரணச் சொற்க ளானவையும் (**Onomotopoea**) நாளடைவில் ஒலி வரலாற்றின்படி ஒலி மாறிவரும்போது முன்னைய முதல் ஒலியோடு ஒரு சிறிதும் தொடர்பில்லாததாக மாறி வருவதைப் பல இடங்களில் காண் கின்றோம். இதனால் இத்தகைய நேர்த் தொடர்பை வரலாறு அறிந்தவன் காட்ட முடியும் என்றாலும் மேல்வாரியாக அந்தச் சொல்லை பார்க்கும்போது இத்தகைய தொடர்பு எல்லோருக்கும் விளங்குவதில்லை [877]. சொற்பிறப்பு அகராதிகளில் ஒரு சொல்லின் வரலாறு கொடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஒரே கருத்து பல சொற்களைப் பிறப்பிக்கலாம். இது கண்டு மயங்க வேண்டுவதில்லை. இங்கே நாம் இருப்பது அடிச்சொல் உலகமேயன்றி அகராதிச் சொல் உலகம் அன்று.

உரியியலில் வரும்பட்டியல் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டதே யன்றி எல்லாச் சொற்களையும் முழுமையாகத் தருவது அல்ல. உரியியலின் கடைசி சூத்திரம் இதை விளக்குகிறது [897]. உரியியலில் கொடுக்கப்பட்ட அடிச்சொற்கள் போன்றவை பல வகையாலும் பரந்துபட்டவை. இருந்தாலும் தமிழர்கள் அவற்றை வழங்கியே வருகின்றனர். எனவே இவற்றிற்கு எண்ணளவை யாலோ பிறவகையாலோ எல்லை காட்ட முடியாது. ஆகையால் பேச்சின் படைப்பியல்பை உணர்ந்தவர்கள் எல்லாவற்றையும் முழுமையாக அடக்கி ஒரு பட்டியல் தந்து இதுதான் என்றென் றைக்கும் தமிழுக்கு உரிய பட்டியல் என்று கூறமுடியாது. பிறப்பாக்க வகை இலக்கணிகளைப் (Generative Grammarians) போல தொல்காப்பியரும் சொல்வடிவங்களுக்கோ பொருள்களுக்கோ முடிவான என்றும் மாறா சொற் களஞ்சியத்தில் நம்பிக்கை கொள்ள வில்லை. இதனை நாம் இங்கே குறித்தல் வேண்டும். பரந்தன வரும் உரிச்சொல் என்பதில் **வரும்** என்பது முக்காலத்திற்கும் ஒத்து வருவதாம் [725].

அப்படியானால் மற்றொரு குன்றினை முட்டிக்கொள்கிறோமா? இல்லை பேச்சின் படைப்பாற்றல் என்றால் பேச்சினை அறியும் படைப்பாற்றலையும் உள்ளடக்கிக் கொள்ளும் அல்லவா? இந்த படைப்பாற்றல் வகை இலக்கணம் அல்லது ஒரு மொழியைப் பற்றிய கொள்கை அதாவது இயல்பாகவே மனித முறையில்

அமைந்துள்ள மொழி உணர்வு ஆற்றல் என்பதை பொருத்ததாகும். அந்த மொழிக் கொள்கை வெற்றி உடையதானால் சில குறிப்பிட்ட விதிகளுக்குள்ளேயே அதனை விளக்கி விடும் நிலை ஏற்படும். தொல்காப்பியர் **பொருள் கோள் விதிகளை** இங்கே கூறியவை அவர் விதிக்கின்ற புதிய விதிகள் அல்ல. இவை மொழியின் இயல் பாக அவர் கண்டு நமக்காக விளக்கியவையேயாம். எனவே அந்த வகையில்தான் நாம் உணர்ந்து பயன்படுத்த வேண்டும். இங்கே கூறிய விதிகள் சொற்களைப் பொருளுடையனவாகப் பிறப்பிக் கின்றன. இவற்றின் துணை கொண்டு இவ்வாறு பிறக்கும் சொற்களின் பொருள்களையும் விளக்கக் கூடும். "இயன்ற மருங்கின் இணைத்தன அறியும் வரம்பு தமக்கு இன்மையின் கிளர்ந்த பற்றியலால் பாங்குற உணர்தல்" என்று முடிக்கிறார் தொல்காப்பியர் (879). இங்கே ஆணை என்பது பிறர் இடும் கட்டளை அன்று. பேச்சுக்குள்ளேயே அமைந்துகிடக்கும் மேலே கூறிய உள்ளாற்றல். அதுவே பேச்சை இயக்கிக் கொண்டிருக்கிறது.

4. ஐயங்கள்

உரிச்சொல் என்பது உள்ளடக்கி (**Contentive**). இடைச்சொல் என்பது தொண்டுறுப்பு (**functor**). தொல்காப்பியர் தரும் இடைச் சொல் பட்டியலில் சில அடிச்சொற்களும் இன்று காணப்படுகின்றன. **எல்** என்பது அத்தகையது. **எல்** என்றால் என்ன பொருள்? **எல் + து = என்று—"என்று" = சூரியன்.** எனவே **எல்** என்பதற்கு விளக்கம் என்பது பொருளாம். அப்படியானால் **எல்** என்பது **என்று** என்பதில் பகுதியாக வருவதால் அது ஓர் அடிச்சொல்தானே. உ, இ போன்ற உயர் உயிர்கள் (Higher Vowels) அடுத்த அசையில் வராதபோது மொழி முதலாம் **'எ'** என்பது **'இ'** என்று தமிழில் மாறும். **இலங்கு** என்று வருகிறது. இதனைத்தான் **எல்லே இலக்கம்** (754) என்ற சூத்திரம் விளக்குகிறது. அடிப்படையானால் இது உரிச் சொல்லியலில் அல்லவா இருக்கவேண்டும்? இடையியலில் இருப் பானேன்? ஏடு பார்த்து எழுதுவோன் செய்த பிழை இது என்று கூறலாம். ஆனால் திருவெம்பாவையில் **எல்லே இளங்கிளியே** என்ற இடத்தில் **எல்லே** என்பது ஆங்கிலத்தில் "Hallo" என்பது போல வந்த இடைச்சொல்லாகக் கொள்ளலாம். அப்படியானால் **'அம்ம கேட்பிக்கும்'** என்ற சூத்திரம் போல (761) இந்தச் சூத்திரமும் **எல்லே விளிக்கும்** என்று இருத்தல் வேண்டும்.

இனி '**தஞ்சம்**' என்ற சொல்லையும் இடையியலில் காண்கிறோம். (751). **தஞ்சம்** என்பது உரிச்சொல்லாக வருதலின் இடைச்சொல் ஆதல் எங்ஙனம்? இதுவும் உரியியலினின்று பிறழ்ந்து இடையியலுக்குள் புகுந்ததா? சில சொற்கள் நாளடைவில் பொருள் இழந்து இடைச்சொல்லாவது உண்டு. **கொண்டு** என்பது மூன்றாம் வேற்றுமை சொல்லுருபாக வருவதையும் '**அன்றே**' முதலியவை அசையாக வருவதையும் காணலாம். அதுபோல **தஞ்சம்** என்பது வியப்பு குறிச்சொல்லாக மாறியது [Interjetion] எனலாம். அப்படியானால் **அரசே தஞ்சம்** எனவரும் புறநானூற்று வழக்கில் **தஞ்சம்** என்பது எளிமைக் குறிப்பை உணர்த்தும் இடைச் சொல்லா? இந்த இடர்ப்பாடுகளை உரை ஆசிரியர்கள் உணராமலில்லை. நமக்கு வந்த மூலபாடம் தொல்காப்பியர் எழுதிய மூல பாடமா? என்ற மூலபாட ஆராய்ச்சியில் [textual criticism] இறங்குவதற்கில்லை. எனவே இவற்றைத் தொல்காப்பியர் இடைச் சொல் என்பதால் நாமும் அப்படியே கொள்ளுதல் வேண்டும் என்கிறார்கள். தொல்காப்பியர் எங்கேயும் இவை இடைச்சொல் எனக் குறிக்கவில்லை. இன்று இடையியலில் இருப்பதால் மட்டும் அவற்றை இடைச்சொல் எனக் கொள்ள வேண்டுமா? ஏடு எழுத வந்தோரின் அல்லது சூத்திரங்களைத் தவறான வரிசையில் உருப் போட்டவர்களின் தவறு என்று சொல்லலாகாதா? இன்னும் வேறு பல ஐயங்கள் எழலாம். தொல்காப்பியர் குறிப்பு, இசை, பண்பு என்று கூறுவன எவை[782]? ஆனால் இவற்றைப்பற்றி ஆராய்வது, அகராதி அளவில் ஆராய்கின்ற இந்தக் கட்டுரைக்குப் பொருத்த மன்று.

வின்சுலோ தமிழ் - ஆங்கில அகராதி
(Comprehensive Tamil and English Dictionary of High and Low Tamil)

வின்சுலோ அவர்கள் இயற்றிய தமிழ்-ஆங்கில அகராதி கி. பி. 1862 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தமிழ்-ஆங்கில அகராதி யெனினும் ஆங்கிலச் சொல்லையடுத்து சிலவற்றிற்குத் தமிழ்ச் சொல்லாலும் பொருள் தரப்பட்டுள்ளது. ஜே. நைட் (J. Knight) கப்ரியல் திச்செரா (Gabrial Tissera) பீட்டர் பெர்சிவல் (Peter Percival) லெவி ஸ்பால்டிங் (Levi Spaulding) சாமுவேல் ஹட்சிங்ஸ் (Samuel Hutchings) போன்றவர்களின் தொகுப்புக்களை அடிப் படையாகக்கொண்டு, வகுத்தும் தொகுத்தும் வீராசாமி செட்டியார், ஆதிமூல முதலியார், ஆப்ரஹாம் அல்லியன், இராமானுசக் கவி ராயர், விசாகப் பெருமாள் அய்யர் ஆகியோர் துணையுடன் வெளி யிட்டார்.

இதில் தமிழ் மொழியைப் பற்றியும் அகராதி பற்றியும் அகராதி யைப் பயன்படுத்தும் முறை குறித்தும் குறிப்புக்கள் உள்ளன. முன்னுரையில் வானசாஸ்திரம், புராணம், தாவரவியல் சம்பந்தப் பட்ட கலைச்சொற்களும் இதில் இடம் பெற்றுள்ளன. வடமொழிச் சொற்கள் தனியே குறிக்கப்பட்டுள்ளது. இவ்வகராதியில் 67,452 சொற்களுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது ஒரு வினையடியிலிருந்து மற்ற வினையுருவங்கள் உருவாவதைத் தெளிவாகக் காட்டி யிருப்பது இவ்வகராதியின் சிறப்பாகும். உதாரணமாக

குடி, க்கிறேன், த்தேன், ப்பேன், க்க

1. to drink, to take drink பருக
2. to inhale உறிஞ்ச
3. to tipple, to guzzle, to drink toddy or arrack to drink to excess மதுவுண்ண
4. to such as infants or other young creatures முலையுண்ண
5. to devour. to quaff மண்ட
6. to take or swallow as liquid medicine மருந்து குடிக்க
7. to absorb, to imbibe உட்கொள்ள
8. to smoke, as tobacco etc. (ப. 315).

— சு. சக்திவேல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மொழியியல் 2.4 1979)

மொழித்திறனும் மொழி பயில்தலும்

ந. நடராச பிள்ளை
மைசூர்

மொழிக்கும் சிந்தனைக்கும் இடையேயுள்ள உண்மையான தொடர்பு என்ன என்பது அடிக்கடி உளவியலாளர்களால் விவாதிக்கப்படுகிற ஒன்று. வாட்சனின் நடத்தைக் கொள்கையினர் (The Behaviourist Watson) மொழியும் சிந்தனையும் ஒன்று என்கின்றனர். சிந்திப்பது ஒலி எழுப்பாமல் உள்ளேயே பேசப்படுவது. மாக்ஸ் முல்லர் சிந்தனையும் மொழியும் ஒரே சமயத்தில் தோன்றுகின்றன என்றும், ஒன்றல்லது மற்றொன்று எழாது என்றும் கூறு கூறுகின்றார் சிந்தனையும், ஒன்றல்ல; சிந்தனை உள்பேச்சு என்று கூறும் அளவிற்கு அவை ஒன்றோடொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன. நாக்கு அசைவதைக் கொண்டோ, குரல் நார்கள் அசைவதைக் கொண்டோ பேசப்படுவதையும், என்ன பேசப்படுகிறது என்பதையும் உணரலாம். ஆனால், உட்பேச்சாக இருக்கும் சிந்தனையை எவ்வாறு கணிப்பது? சோதனைகளாலும் விளக்கிக் கூறமுடியாது. இக்கட்டத்தில் சோம்ஸ்கியின் மொழித்திறன் (Competence), மொழிச்செயல் (Performance) என்ற இரு பிரிவு

களையும் இதனோடு தொடர்பு படுத்திப் பார்க்கலாம். மொழிச் செயலுக்கு, மொழித்திறன் எவ்வளவு தேவையோ அதே அளவு மொழியாக வருவதற்குச் சிந்தனையும் தேவையாகிறது. உட்பேச்சாகிய சிந்தனைக்கும் அடிப்படை மொழித்திறன் என்று ஏன் கொள்ளக்கூடாது? எடுத்துக் காட்டாக, ஒரு பொருளை எண்ண அளவில் நமது மூளையில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதை மொழியில் எடுத்துச் சொல்லத் தேவையான சொற்கள் அம்மொழியில் இல்லையெனில் தடுமாறுகிறோம். இத்தடுமாற்றத்தின் காரணம் என்ன? சிந்தனையும் மொழியும் ஒன்றாக இருப்பின் தடுமாற்றம் ஏற்படக் கூடாதே! சிந்தனையை உட்பேச்சு என்று சொன்னால் மொழியில் தடுமாற்றம் இருக்கக்கூடாது அல்லவா? மொழியில் சொல்லற்ற ஓர் எண்ணமோ கருத்தோ நம் மூளையில் இருக்காது என்றுதான் கூறவேண்டும்.

மேலும், மவுனமாகப் படிக்கும்போது புத்தகத்தில் ஒரு சில பகுதிகளில் எல்லாச் சொற்களையும் படிக்காமல் ஆங்காங்கே தாண்டிச் சென்று படித்து அதன் கருத்தைச் சொல்லமுடிகிறது. எனின், கிடைத்த சொற்களைக் கூட்டிப் பெருக்கி ஒரு முழுக் கருத்தைக் கொடுக்கிற திறன் இருப்பதால் அதையே மொழித் திறனாக ஏன் கொள்ளக்கூடாது? மொழித்திறன்தான் அதற்குக் காரணம் என்று கூறினால், மொழியும் மொழித்திறனும் வேறு வேறு என்று புலனாகிறது.

இந்நிலையில் மாற்றிலக்கணத்தின் மொழித்திறனை மொழி பயில்தலுக்குத் தொடர்புறுத்திக் காணலாம்.

மாற்றிலக்கணம் எந்த அளவு வளர்ச்சிபெற்றதோ அதே வேகத்திலேயே மொழி பயில்தலில் அதன் பயன் முக்கியத்துவம் பெற்று வருகிறது. மாற்றிலக்கணத்தின் பயனாக மொழி பயில்தலில் ஏற்படும் மாற்றம்தான் இப்போதைய மொழியியலின் முக்கியமான பகுதியாக அமைந்திருக்கிறது. சோம்ஸ்கி கூறியிருக்கும் அளவில் மொழித்திறனையும் மொழிச் செயலையும் வேறு படுத்திப் பார்க்கும்போது மொழிபயில்தலிலும் நாம் சில மாற்றங்களை ஒப்புக்கொண்டாக வேண்டும். மொழிச் செயலுக்குத் தேவையான அளவு மொழித்திறன் அவசியம் என்று நாம் கூறும்போது

கேட்டுணர்தலுக்கும் (Listening Comprehension), படித்துணர்தலுக்கும் (Reading Comprehension) மொழியைப் பேசுவதற்கு முன்பு மொழித்திறன் ஒருவருக்குள் அமைந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது எனவே புறநடத்தையின் வழியாக மொழிபயில்தல் நடைபெற்றது என்பதை எடுத்துக்கூற முடியாது ஏனெனில் இப்புறநடத்தையே மூளையில் முதலில் ஏற்பட்டிருக்கும் ஒரு மொழித்திறனைச் சார்ந்திருக்கிறது. ஆக, மொழித்திறன் உள்ளியல்புக் கூறுகளையே (innate features) சார்ந்திருக்கிறது எனக் கூறலாம். இதையே சோம்ஸ்கி (1965) மொழிபயில ஒரு கருவி (language acquisition device) என்று கூறுகிறார்.

சோம்ஸ்கியின் மொழித்திறன்–மொழிச்செயல் பிரிவினை ஒரு கூற்றின் இலக்கண விளக்கத்திற்கும் அந்தக் கூற்று வெளிவருவதற்கு முன் மூளையில் நடக்கின்ற மொழியடிப்படை மாற்றங்களுக்கும் தொடர்பு என்ன என்பதைக் காட்டியிருக்கிறது. மொழித்திறன் என்பது மொழி பேசுபவரின் மூளையில் பதிந்திருக்கிற இலக்கணவிதியாகும். எனவே மொழியியல் விளக்கங்கள் இவ்விதிகளைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டியது வரும் என சோம்ஸ்கி நினைக்கிறார். ஆனால் அவ்வாறு மூளையில் பதிந்திருக்கும் விதிகளை எவ்வாறு அறிந்து கொள்வது? (பார்க்க: நடராசபிள்ளை 1978)

மொழியியல் விளக்கங்கள், பேசப்படுகின்ற வாக்கியங்களுக்கு விளக்கமாக அமையவேண்டுமா அல்லது அவ்வாக்கியங்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற இலக்கண விதிகளின் விளக்கமாக இருக்கவேண்டுமா என்பது பற்றிய ஆய்வுகளில் சிலர் தங்கள் ஆய்வுகள் சோம்ஸ்கியின் கோட்பாட்டுக்கு எதிராகவே செல்வதாகக் கூறுகின்றனர். மற்றும் சிலர் தங்கள் ஆய்வுகளில் சோம்ஸ்கியின் மொழித்திறன் கொள்கையை எடுத்துக்காட்டி ஆதரவு கொடுத்துள்ளனர்.

மொழித்திறன் ஒரு பிறப்பாக்கக் கொள்கையாக (Generative Theory) இருப்பதாலும், ஒரு மொழியின் சிறப்புக் கூறுகளைக் கொண்டிருப்பதாலும் அது மொழிப் பொதுமைகளைக் கொண்டிருக்கிறது. அதாவது எழுவாய், பயனிலை, வினை, செயப்படுபொருள்

போன்ற மொழிப் பொதுமைக் கூறுகளைக் கொண்டிருக்கிறது. மொழித்திறன்தான் மொழி பயில்தலுக்குத் தேவையானது என்றும் மொழிச் செயல் மொழித்திறனின் வெளித்தோற்றம் என்றும் அது ஆளுக்கு ஆள் மாறிவரலாம் என்றும் சொல்லப்படுகின்றது. இக் கற்பிதங்களை (hypothesis) நிரூபிக்கிறவர்கள் குழந்தைகளின் முதல் கூற்றுகளை (utterances) மொழியின் அக அமைப்போடு தொடர்புபடுத்திக் காட்டவேண்டும்.

இலக்கணம் என்பது கற்கப்படுகின்ற ஒன்று என்றோ அல்லது உள்ளியல்பானது என்றோ ஒருவர் கூறலாம் அது கற்கப்படு கிறது என்று சொல்லும்போது அதற்குத் தேவையானது ஒரு உருப்படிவம் (model). எந்த உருப்படிவத்தை ஏற்றுக்கொண்டு குழந்தை மொழியைக் கற்றுக்கொள்கிறது? சோம்ஸ்கியின் மொழித் திறன் கொள்கையா? மற்ற கொள்கையா? இதற்குப் பதிலளிப்பது மிகமிகச் சிரமம். குழந்தை எவ்வாறு கற்றுக் கொள்கிறது என்பதே சிக்கலாக இருக்கும்போது இதற்கு விளக்கம் கொடுக்க முடியாது. சோம்ஸ்கியின் உருப்படிவம்தான் என ஒருவர் சொல்லிவிட்டால் சொற்கள் வருமுறை, தொடர் அமைப்புகள், இலக்கணத் தொடர்பு விதிகள் முதலியவற்றைக் குழந்தை தன் மனத்தில் உருவாக்கிக் கொள்கிறதா?

இலக்கணம் உள்ளியல்பானது என்று கூறும் போதும் தடைகள் ஏற்படுகின்றன. முதலில் மனிதனின் உடல்கூறு மொழி பேசுவதற் கெனவும் மொழியைப் புரிந்து கொள்வதற்கெனவும் தேவையான அமைப்புகளைக் கொண்டிருப்பதாக உடற்கூற்றியல் கூறுகிறது.

சிம்பன்சி குரங்கிற்கும் மனிதனுக்கும் என்ன வேறுபாடு? சிம்பன்சியால் ஏன் பேச முடியவில்லை? போன்ற கேள்விகளுக்கு விளக்கமாகப் பல ஆராய்ச்சிகள் நடந்தன. கடைசியில் சிம்பன்சிக்கு குரல்நார் அமைப்பு இல்லை என்றும் அதன் மூளை மொழியைப் பதிய வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றதில்லை என்றும் தகுந்த ஆதாரங்களுடன் கூறப்பட்டது. அவ்வாறெனின் மனிதன் பிறப்பிலேயே மொழி கற்றுக்கொள்ளும் உடல் அமைப்பைப் பெற்றிருக்கிறான் என்பது தெளிவாகிறது.

மொழித்திறன்தான் மொழி பயில்தலுக்கு மூலமாக அமைகிறது எனின் குழந்தைகளின் கூற்றை அக அமைப்பிற்குத் தொடர்பு படுத்திக் காட்டவேண்டும். குழந்தைகளின் தொடக்ககாலக் கூற்றுகள் மொழியின் அக அமைப்பிற்கு எடுத்துக்காட்டுகளாக இருந்தால் வயதானவர்களின் மொழி பயில்தல் பற்றி சோம்ஸ்கி பின்னர் சொல்கின்ற அக அமைப்பில் மாற்றுவிதிகள் செயல்பட்டு புற அமைப்பு கிடைக்கின்றது என்பது போன்ற குறிப்புக்கள் உண்மையாகின்றன.

குழந்தைகள் முதலில் தன்னகப்படுத்திக் கொள்வது அக அமைப்பையே என்றும் மாற்றுவிதிகள் அதன் பிறகுதான் அகப் படுத்தப்படுகின்றன என்றும் சொல்வதனால் குழந்தையின் தொடக்க காலத்தில் அக அமைப்பிலேயே ஒலியனியல் விதிகள் செயல் படுகின்றன என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, குழந்தையின் தொடக்க காலத்தில் அதன் மொழித்திறனுக்கும், மொழிச் செயலுக்கும் இடையேயுள்ள இடைவெளி மிகவும் குறுகியது என்றாகிறது.

இவ்வாறு, குழந்தையின் மொழித்திறனையும் மொழிச்செயலையும் பார்க்கும்போது நாம் சில கற்பிதங்கள் செய்யவேண்டியதாகிறது. இதையே மெக்னீஸ் (1966 b), ஃபிரேசர் (1966) ஆகியோர் கூறுகிறார்கள். முதலாவதாக, குழந்தைகள் பிறக்கும் போதே உடலியல்பாலேயே மொழி கற்கும் திறமையைப் பெற்று விடுகிறார்கள். இரண்டாவதாக, அவ்வாறு திறமை பெறும்போது அவர்கள் மொழிப் பொதுமைகளையே ஏற்றுக்கொள்கிறார்கள். மூன்றாவதாக, அந்த மொழிப்பொதுமைகள் எல்லாமே சோம்ஸ்கியின் மாற்றிலக்கணத்தில் சொல்லப்படுகின்ற கூறுகளாகவே இருக்கின்றன.

ஆனால் இம்மாதிரியான கற்பிதங்கள் மொழி பயில்தலின் கொள்கைக்கு நேர் எதிராகவே அமைகின்றன. கருத்துப்படிவக் கூறுகள் (abstraction) எல்லாம் எழுவது பருப்பொருள் (conerete) கூறுகளின் துணையால்தான் என்பது மொழிபயில்தலின் கொள்கையாகும்.

மொழி பயில்தலில் மாற்றிலக்கணத்தின் கொள்கையைச் சிறப்பிக்க இரண்டு குறிப்புகள் கொடுக்கலாம். ஒன்று மொழித் திறன்களை (language skills) தன்னகப்படுத்திக் கொள்ளும் வேகம் மற்றவைகளைவிட அதிகமாக இருக்கின்றது. இரண்டாவதாக, பேச்சுக் கூற்றுகளுக்குக் கொடுக்கப்படுகிற வாய்ப்பால்தான் குழந்தைகள் மொழியமைப்பைத் தம்மகப்படுத்திக் கொள்கிறார்கள்.

கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக குழந்தைகள் மொழி பயில்தல் பற்றிய ஆய்வுகளில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. குழந்தைகளைப் பேச்சுக் கூடத்தில் பேசவைத்து அதைப் பயன்படுத்துவதை விட, அவர்கள் தங்கள் வீடுகளில்-வெளியே நண்பர்களுடன்-பேசும் பேச்சை அப்படியே பதியவைத்து, அதைக் கொண்டு ஆய்வுகள் நடத்துகிறார்கள். பிரெயினும், ஃபிரேசரும் (1963), பிரெயின் (1963 b), எர்வின் (1964) - போன்றவர்களின் சோதனைகளைச் சான்றாகக் கூறலாம்.

ஆய்வாளரின் எண்ணத்திற்கு ஏற்றவாறு குழந்தைகள் பேச முடியாது. எனவே குழந்தையின் சூழ்நிலை மறந்த பேச்சின்-அதாவது இன்னொருவர் தன் பேச்சைக் கேட்டு குறிப்பெடுக்கிறார் என்ற நினைவு இல்லாத பேச்சின்-அடிப்படையில் இலக்கணம் எழுதப்படுகின்றது. பதினெட்டு மாதங்களிலிருந்து இருபது மாதங்கள் வரை வயதான குழந்தைகளிடம் ஒரு சொல் அல்லது இருசொல் உள்ள தொடர்களையே பயிலும் நிலையினைப் பார்க்கலாம். இவற்றை 'pivot', 'open' என்ற இரு முறைகளில் (பிரெயின் 1963 b) விளக்கலாம். 'pivot' சொற்கள் என்பவை ஒரு இடத்தில் வரும். ஆனால் 'open' சொற்களுக்கு அவ்விதமான கட்டுப்பாடுகள் இல்லை. இந்த 'pivot' சொற்களையும், இரு சொல் கூற்றில் வருகின்ற சொற்கள் ஒரே வருமுறை கொண்டிருப்பவை என்றும், அவ்வாறல்லாதவை என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். சான்றாக, 'இந்த', 'அந்த' இந்த இருசொற்களும் ஒரே பிரிவைச் சேர்ந்தவை. ஒரே இடத்தில் வருகின்ற ஆற்றலுள்ளவை. 'அந்த(ப்) பந்து', 'இந்த(ப்) பந்து', 'அந்த(க்) காலு' 'இந்த(க்) காலு' போன்றவைகளைச் சான்றாகக் கூறலாம்,

குழந்தைகளின் பேச்சைத் 'தந்திமுறை' என்று சொல்வார்கள், அதாவது குழந்தையின் பேச்சில் சில சொற்களே அதிகமாகப்

பயன்படுத்தப் படுவதைக் காணலாம். இவைகள் பெரும்பாலும் பொருட் (content) சொற்களே. முக்கியமாக, பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடம்பெறும். இலக்கணச் (functional words) சொற்கள் பெரும்பாலும் இடம்பெறுவதில்லை தந்தியில் தேவையற்ற சொற்களுக்கு பணம் கொடுக்க வேண்டியிருப்பதைத் தவிர்க்க, செய்தியைப் புரிந்து கொள்ளத் தேவையான சொற்களை மட்டுமே எழுதுவது போலக் குழைந்தையும் தேவையற்ற—அவைகள் இல்லை எனினும் பொருள் தெளிவாகின்ற—சொற்களை விட்டுவிடுகிறது. இவ்வாறு, குழந்தை தேவையான பொருட் சொற்களை மட்டும் எவ்வாறு பயன்படுத்துகின்றது? தெளிவான பொருளுடையவை அவை என்ற ஒரேயொரு காரணத்தைத்தான் காட்டமுடியும். மேலும் பெயரும் வினையும் வாக்கியத்தில் அழுத்திச் சொல்லப்படுவதையும் பிரெளன் (1973) காரணம் காட்டுவார்.

ஆனால் குழந்தை இலக்கணச் சொற்களைப் புரிந்து, அது இல்லாமலேயே தன் வாக்கியங்கள் செய்தியைத் தெரிவிக்கும் என எண்ணி அச்சொற்களை விட்டுவிட்டு தந்தி முறையைப் பின்பற்றுகிறது எனக் கூறமுடியாது. அது புரிந்து கொள்ளாததே அதற்குக் காரணம் சில நேரங்களில் இலக்கணச் சொற்களும் அவர்களின் வாக்கியங்களில் இடம்பெறுவதுண்டு. மேலும், குழந்தைகள் தங்களுக்கெனச் சில வரைமுறைகளை ஏற்படுத்தியே இருசொல் வாக்கியங்களை அமைக்கின்றன. இவ்விருசொல் வாக்கியங்கள் மொழியிலுள்ள வாக்கியங்களுக்குச் சில நேரங்களில் எந்த விதத்திலும் ஒத்திருப்பதில்லை.

மெக்நீல் (1966) என்பவர் இதைப் பிறப்பு விதி (Productive rule) என்று சொல்வார். இந்தப் பிறப்பு விதியை மொழியியலார்,

1. $S \rightarrow (P) + o$ என்று குறிப்பர். அதில் p — pivot, o, open, S = Sentence.

குழந்தைகள் பேசும்போது அவைகள் தங்களுக்கென ஒரு விதியை அமைத்துக் கொண்டு பேசுகின்றன. ஆனால் இவ்விதிகள் உள்ளியல்பான மொழிப் பொதுமை (innate linguistic universals) விதிகளை ஒத்திருக்கிறதா என்பதை அவர் சொல்லவில்லை. அதுவும் ஒரு கடினமான வேலை. pivot, open என்ற இருவகைச் சொற்களும்

எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வெவ்வேறான இலக்கணக் கூறுகளைச் சார்ந்திருப்பவையும் ஒரே வகையில் சேர்க்கப்படுவதுண்டு. எனவே இந்த po வாக்கியங்கள் எழுவாய், பயனிலை, வினை, செயப்படுபொருள் போன்ற மொழிப் பொதுமைகளை விளக்குவதில்லை என்று சொல்லலாம். எனினும் அது முற்றிலும் விளக்கவில்லை என்றும் சொல்லமுடியாது. சில நேரங்களில் பெற்றோரின் வாக்கியங்களில் சொற்கள் வருகின்ற முறையை அடிப்படையாகக் கொண்டு அப்படியே குழந்தை பேசுவதுண்டு. எனவே இந்த pivot, open என்று பிரிக்கப் பட்ட சொல்வகைகள் பெரியவர்களின் வாக்கியங்களின் ஏதோ ஒரு இலக்கணக் கூறின் அடிப்படையிலேயே உருவாகிறது. எனவே குழந்தைகளின் இருசொல் வாக்கியங்களில், அதாவது அவர்கள் தங்களுக்கென ஏற்படுத்திக்கொள்கிற பிறப்பு விதிகளில் மொழிப் பொதுமையைக் காணலாம்.

குழந்தைகளின் தொடக்ககால விதிகளாகக் கீழ்வருவனவற்றைக் கூறலாம்.

2. S → P + N (P = Pivot, N = Noun)

எ. கா. அந்த(ச்) சட்டை

3. S → N + N

எ. கா. அப்பா சட்டை

4. S → P + NP (Noun phrase)

எ. கா. இந்தா அப்பா சட்டை

பெயர்த்தொடர் என்பது pivot + பெயர், பெயர் + பெயர் போன்ற வைகளைப் பயன்படுத்திய பிறகுதான் தோன்றுகிறது. (பிரெளன், பெல்லுகி 1964)

5. S → Pred P. (Predicate phrase)

6. Pred. P. → NP + V

7. NP → N + N or P + N

எ. கா. அம்மா பாலு தா

அம்மா பிஸ்கட் தா

போன்றவைகளும் தொடக்க காலத்து விதிகளாக அமைகின்றன என்றே சொல்ல வேண்டும். எனவே குழந்தைகளின் இவ்வாக்கியங்கள் எழுவாய் + பயனிலை என்ற வாக்கிய அமைப்பின் அடிப்படையிலேயே எழுந்திருக்கின்றன என்று தோன்றுகிறது. எனவே,

அம்மா வா (N V)
அம்மா காப்பி தா (N V V)

போன்ற வாக்கியங்கள் உருவாக்கப்படுகின்றன.

எனவே மொழித்திறனின் பெரும்பகுதி உள்ளியல்பாகத்தான் இருக்கின்றது. குழந்தைகள் பெரியவர்கள் ஆகும்போது பயன்படுத்த வேண்டிய இலக்கணக் கூறுகளின் அடிப்படைகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அனுபவம் என்பது தங்களிடம் மொழிப் பொதுமையினால் ஏற்படுகின்ற தவறுகளைத் திருத்துவதற்குத் தான் பயன்படுகிறது.

பிரெயினின் (1963) சூழ்நிலைப் பொதுமைக் கொள்கைக்கு மாற்றிலக்கணத்தின் மேற்கூறிய நோக்கால் ஆதரவு இல்லாமற் போய்விட்டது. பெரியவர்களின் பேச்சின் தொடரமைப்புக் கூறுகளின் அடுக்கமைப்பின்படியே ஒருசொல் வருமிடம் அதன் சூழ்நிலையைச் சார்ந்து இருப்பது கற்கப்படுகிறது சான்றாக, ஒரு வாக்கியத்தில் ஒரு தொடர் வருகின்ற இடம், இவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய வாக்கியங்களில் அவைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு சொல்லும்போதும் அந்த ஒழுங்கு முறை எவ்வாறு கற்கப்படுகின்றது என்பதற்குச் சான்று ஒன்றும் இல்லை.

ஆனால் பீவர், ஃபோடோர், வெக்செல் (1965) போன்றோர் பிரெயினின் கொள்கையை ஒத்துக்கொள்வதில்லை. சூழ்நிலையைக் கொண்டு ஒரு கூற்றின் வருமுறையைக் குழந்தை ஏற்றுக்கொள்ளுமானால் வாக்கியத்தின் அகஅமைப்பு வாக்கியத்தின் மாற்றம் போன்றவைகளைக் குழந்தை அறிந்துகொள்ள முடியாது. ஏனெனில் குழந்தை பேசக் கற்றுக்கொள்வது அது கேட்கும் வாக்கியத்தினால் தான் எனக் கற்பிதம் செய்துகொள்ளப்பட்டிருப்பதுதான். அக அமைப்பு என்பது உள்ளியல்பானது. மொழிச்செயலுக்கு உறுதுணை

யானது என்பதை மீண்டும் இச்சூழ்நிலையில் சொல்லவேண்டிய தாகிறது. ஆனாலும் பெற்றோர்களின் அல்லது பெரியோர்களின் பேச்சிலிருந்து அக அமைப்பின் கூறுகளை – எடுத்துக்காட்டாக எழுவாய், பயனிலைக் கூறுகளைக் – குழந்தை எடுத்துக்கொள்ள முடியும் என்று சொன்னாலும் ஃபோடோர் முதலியோரின் மறுப்பை இது தெளிவாக்கவில்லை. புற அமைப்பிலிருந்து அக அமைப்பைச் சூழலின் துணையுடன் கொண்டுவர முடியுமா என்ற கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும்.

''ஆசிரியரால் இராமன் அடிக்கப்பட்டான்''

என்ற வாக்கியத்தைக் குழந்தைக் கேட்கும்போது, ஆசிரியர்தான் அடித்தார்; அவர்தான் செயலைச் செய்தவர் என்பதை அறிந்து, அவ்வாக்கியத்தை,

''ஆசிரியர் இராமனை அடித்தார்''

என்ற வாக்கியத்தோடு தொடர்புபடுத்திக் கொள்கிறது. ஆக, ஆசிரியர் இராமனை அடிக்கிற சூழ்நிலையில் அது ஆசிரியரையே செய்பவனாகவும், இராமனையே கொள்பவனாகவும் ஏற்றுக் கொண்டு விடுகிறது. இதற்குப் பிறகு, சில வினைகளுக்கு இவ்வாறு செயப்பாட்டு வினைக்கூறுகள் இருப்பதையும் அக் கூறுகளால், எழுவாய், செயப்படுபொருள் வருமிடங்களில் மாற்றம் இருப்பதையும் வேற்றுமையுருபில் மாற்றமிருப்பதையும் புரிந்து கொள்கிறது. எனவே, வேற்றுமையின் பயனும், வருமிடமும் குழந்தைக்கு மொழியைக் கற்றுக்கொள்ளத் தேவையாகிறது.

இவ்வளவு கடினமான இலக்கணக் கூறுகளைக் குழந்தை எவ்வாறு தன்னகப்படுத்திக் கொள்கிறது? எந்த வயதில் இதை அக் குழந்தை புரிந்து கொள்கிறது? என்ற கேள்விகள் நியாயமானவை களே. குழந்தையின் வயது போன்றவைகளின் அளவையும், அடிப்படையையும் கொடுக்க முடியாது எனினும் வேற்றுமை உருபுகளின் பயன் இரண்டரை வயதுமுதல் தெரிவதால், அந்த வயதிலேயே இம்மாதிரியான கூட்டு வாக்கியங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறது எனக் கொள்ளலாம்.

குழந்தைகள் மொழிபயிலும் தொடக்ககாலத்தில் தொடரியல் மொழித்திறன் அக அமைப்போடு ஒத்திருக்கும்போது மாற்று விதிகளையும் அவை கற்கத் தொடங்குகின்றன. அதாவது அகஅமைப்பிலிருந்து புற அமைப்பை உருவாக்கும்போது மாற்றுவிதிகள் செயல்படுகின்றன. எனவே, குழந்தைகள் மாற்று விதிகளையும் கற்றுக் கொள்கிறார்கள். முன்னர் பார்த்தது போல குழந்தையின் தொடக்க காலப் பேச்சில் அக அமைப்பிலேயே ஒலியனியல் விதிகள் செயல்படுகின்றன. ஆக குழந்தைகள் மாற்றுவிதிகளைக் கற்கும்போது, அவ்விதிக்கூறுகள் வாக்கியத்தின் முன், அல்லது பின் சேர்த்துச் சொல்லப்படும். சான்றாக, குழந்தை எதிர்மறையையும், வினாவையும் கற்க ஆரம்பிக்கும்போது, எதிர்மறை வாக்கியத்திற்கு சைகையையும் சேர்த்துச் சொல்கிறது. அதாவது, ஒரு பெயர்ச்சொல்லைச் சொல்லி அதோடு ''இல்லை'' என்பதற்காக கையை விரித்துக் காட்டுகிறது. அதன்பிறகு 'பந்து, இல்லை', 'இல்லை பந்து'' போன்ற வாக்கியங்கள் எழுகின்றன. வினா வாக்கியங்களைப் பார்த்தால் சொல்லை வினாவுக்குரிய சுரவிசையோடு கேட்கிறது. 'பந்து?' 'அம்மா?' போன்று. பின்னரே வினாச்சொல் பயன்படுத்தப் படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அம்மா கேட்கிற 'அம்மா எங்கே?', 'பந்து எங்கே?', 'அம்மா அங்கே இல்லை', 'பந்து இல்லை' போன்ற வாக்கியங்களைக் குழந்தை புரிந்துகொள்கிறது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இம்மாதிரியான வளர்ச்சியைப் பார்க்கும்போது குழந்தையிடம் இந்த மாற்றுவிதிகள் எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் தன்னகப்படுத்தப்படுகின்றன என்ற கேள்வி எழுகின்றது. அது நிச்சயமாக பெரியவர்கள் பேசும் முறையில் இல்லை என்று கூறலாம். ஆக, இலக்கணத்தைப் புரிந்துகொள்வதே நல்லதொரு மொழிச் செயலுக்கு ஆதாரமாகிறது. அவ்வாறு புரிந்துகொள்வதற்கு மொழித் திறனே அடிப்படை.

துணை நூல்கள்

1. அரங்கன், கி. 1975 **மாற்றிலக்கண மொழியியல்** தமிழ் நூலகம், சென்னை.

2. நடராசப்பிள்ளை, ந 1978 ''மாற்றிலக்கணமும் மொழி பயில் தலும்'' **மொழியியல்** 2 :1 63 – 74.

3. Chomsky, Noam. 1957 *Syntactic Structures*, Mouton, The Hague.

4. ——— . 1965 *Aspect of the theory of Syntax*, M.I.T Press, Mass.

5. ——— . 1976 'On tte nature of Language'' in *Origins and evolution of Language and speech* (Ed.) Harnard, S.R , Steklis, H D & Laneaster, J. Ann N.Y. Acad. Sci. 280 46-55.

6. Bever, T,G., Fodor, J.A and weksel,W. 1965 'On The Acquisition of Syntax; a critique of contextual generalization'', *Psycol. Ree*.72: 467-482.

7. Braine, M.D.S. 1963 ''On Learning the grammetical order of words'', *Psycol. Rev.* 70 : 323-348.

8. Brown, R.W. 1973 *A First Lauguage: The early stages*, Harvard University Press, Mass.

9 Brown, R.W. & Fraser, C, 1963 ''The Acquisition of syntax'' in *Verbal Behaviour and Learning* (Ed.) Coper, C N. & Musgrave, B.S., Mc Graw Hill, Newyork.

10. Brown, R.W. & Bellugi, U. 1964 ''Three process in the childs' acquisition of syntax'', in *New Directions in the study of Language*, (Ed.) Lenneberg, E.H., M I T Press Mass.

11. Ervin, S.M. 1964 ''Imitation and structural change in childrens' Language'', in *New Directions in the study of Language*, (Ed.) Lenneberg, E.H., M I T Press, Mass.

12. Fraser, C. 1966 "Comments on McNeil's paper", in *Psycolinguistics papers*, (Ed.) Lyons, J. & Wales, R.J. Edinburg University Press

13. Mc Neill, D. 1966 "Developmental Psycolinguistics", in *The genesis of Languoge*, (Ed.) Smith, F. & Miller, G A., M I T Press, Mass

14. ——— 1966 "The creation of Language by children", in *Psycolinguistics papers* (Ed.) Lyons, J & Wales, R, J, Edinburg University Press.

15. Thirumalai, M.S 1977 *Learning Theories and Linguistics: An introduction*, Tamil Nuulakam, Madras.

திராவிட மொழிகளும் நூபியன் மொழியும்

திராவிட மொழிகளையும் ஆப்ரிக்க மொழிகளில் ஒன்றான நூபியன் மொழியையும் ஒப்பிட்டுக்காட்டி இன ஒற்றுமை கற்பிக்க முற்படுவார் டட்டில் (Edwin H. Tuttle). இவர்தம் கருத்து வேறு எவராலும் ஒத்துக் கொள்ளப்படவில்லையாயினும் ஆப்பிரிக்க மக்கள் தென்னிந்தியாவில் குடியேறியிருந்தனர் என்றும் இன்றையத் திராவிட மக்களுக்கும் அவர்களுக்கும் சில தொடர்புகள் இருந்தன என்றும் கருதும் பலர் உளர் என்பது உண்மையாம்.

இவர் தமிழ், கூயி போன்ற திராவிட மொழிகளில் உள்ள கூறுகள் பலவற்றைப் பழைய நூபியன் (old Nubian) மொழிக் கூறுகள் பலவற்றோடு ஒப்பிட்டுக் காட்டுவார். தமிழில் ல, ள, ர, ற ஆகிய எழுத்துக்கள் சொற்களின் முதலில் வராதது போன்று நூபியன் மொழியிலும் இவ்வெழுத்துக்கள் மொழிக்கு முதலில் வருவதில்லை என்று கூறுவார் மேலும் கூயி மொழியில் காணப்படும் பல இலக்கணக் கூறுகள் இதன்கண் உள்ளன என்றும் திராவிட மொழிகளில் காணப்படும் இறந்தகாலம் காட்டும் இடைநிலைகளும் நூபியன் மொழியிலுள்ள இறந்தகால ஒட்டுக்களும் தம்முள் பொருந்திக் காணப்படுகின்றன என்றும் கூறுவார்.

டாக்டர் ச. அகத்தியலிங்கம் எழுதிய
உலக மொழிகள்—திராவிட மொழிகள்-1 என்ற நூலிலிருந்து.

தகப்பன்

தகப்பன் என்பதில் இரண்டு முறைப் பெயர்களைக் காணலாம். அப்பன் என்பது ஒன்று. தக்(தகு) என்பதில் தகரம் போக நிற்பது அக் என்பதாம். அக்கு, ஆகு என்ற வடிவம் கூவியில் உண்டு. (அங்கே 'பாட்டன்' என்று பொருள்) அக்காள், அக்கை, அக்கச்சி, தமக்கை முதலிய முறைப்பெயர் வடிவங்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன். ஆனால், இங்கெல்லாம் மூத்தபெண் உடன்பிறப்பையே அவை குறிக்கும். கோலாமியிலும் நாயக்கியிலும் தாக் என்பது தந்தையைக் குறிக்கும். நெடில் முதலான ஓரசைச் சொல்லின் பின் உயிர் வருமானால் நெடில் குறுகும். தாக் என்பது தனி நின்று தமிழில் விளங்காமையால் அப்பன் என்பதைச் சேர்க்கவேண்டிய தாயிற்று போலும். கேட் (gate) வாசல் முதலியன போல் என்க. சோழ அரசு வடக்கே படர்ந்தோங்கியபோது தமிழர் தெலுங்கோடு இனமான கோலாமி, கூவி முதலிய மொழியினரோடு தொடர்பு கொண்டபோது இது தமிழில் எழுந்த வடிவமாகும். தகு என்ற திசைச்சொல்லையும் அதனை விளக்க அப்பன் என்ற சொல்லை யும் சேர்த்ததால் எழுந்த வடிவமாகும் தகப்பன் என்பது. இவ்வாறு திராவிட மொழிகளில் தகப்பன் என்பதனை விளக்கும் போது தகு அப்பன் 'தக்க – அப்பன்' என்று டாக்டர் எமனோ கூறுவதுபோல் பொருள் கூறவேண்டுவதில்லை. ba 'தந்தை' ak 'தந்தை' என்பவை bak என 'தந்தையின் தந்தை' என்ற பொருளில் கோலாமியில் வழங்குவதைக் காணலாம். அப்படியே தமிழிலும் தகப்பன் என்பது ஒரு பொருளைக் (அப்பன்) குறிக்கும் இரண்டு சொல்லின் சேர்க்கையாகும்.

ஆதாரம்: டாக்டர் **தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்** எழுதிய 'மொழியியல் விளையாட்டுக்கள்' என்ற நூலிலிருந்து.

மொழியியல் 2,4 (1979)

தொல்காப்பியத்தில் நேரமும் காலமும்[1]

க. திலகவதி
மலாயா பல்கலைக்கழகம் & அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

1. நேரம் – காலம் பற்றிய ஆராய்ச்சி:

அண்மைக்காலத்தில் 'நேரமும் காலமும்' என்னும் தலைப்பு மொழியியலாளரின் சிந்தையையும் கவனத்தையும் ஈர்க்கும் ஒன்றாக அமைந்துள்ளது.[2] 'நேரம்–காலம்' பற்றிய ஆய்வுகள் இன்னும் ஆராய்ச்சி நிலையில்தான் உள்ளன; இதுவரை எவரும் அவற்றைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வைச் செய்து முடிக்க வில்லை.[3]

நேரம்–காலம் பற்றிய ஆய்வு, தொடரியல்–பொருளியல் துறைகளில் ஒரு சமீப காலச் சேர்க்கையைப் போல் தோன்றினாலும், அவற்றின் இரு வேறுபட்ட தனி இயல்புகள்பற்றி மரபுவழி இலக்கணத்தாரும் முற்றாக அறிந்திருந்தனர் என்பதை அறியும் போது சிந்தைக்குக் கிளர்ச்சியூட்டுவதாக உள்ளது. உதாரணமாக, ஆட்டோ யெஸ்பர்ஸன் (**Otto Jesperson**) பின்வருமாறு கூறுகிறார்: 'நேரம், காலம் ஆகிய இரு கருத்துக்களையும் வேறுபடுத்தி அறிந்து கொள்வது முக்கியமாகும்; முன்னது மனித இனத்துக்குப் பொது

வானதும், மொழிக்கு அப்பாற்பட்டதும் ஆகும்; பின்னது மொழிக்கு மொழி மாற்றமுடையது; வினையது அமைப்பாலேயே உணர்த்தப் படும் போது நேரத்தொடர்புகளைக் குறிக்கும் மொழியியல் கூற்றாக உள்ளது; ஆனால் ஆங்கிலத்திலும் வேறுபல மொழிகளிலும் இவ் வகை வினை அமைப்புக்கள் நேரத் தொடர்பை குறிக்கமட்டு மல்லாது வேறு காரியங்களுக்கும் பயன்படுகின்றன[4] போட்ஸ்மா (Poutsma), க்ருஸிங்கா (Kruisinga), கூர்மே (Curme), திரிங்கா (Trnka) போன்ற மற்றைய மரபுவழி இலக்கணத்தாரும் காலஇடை நிலைகளாலும், வினைசெயல்வகையைக் (aspect) குறிக்கும் இடை நிலைகளாலும் உணர்த்தப்படும் பல்வகைப் பொருள்களைப் பற்றி விளக்குவதில் ஈடுபாடு கொண்டிருந்தனர்.[5] ஆனால் பின்னால் வந்த அமைப்பியல் இலக்கணம் சிக்கல் நிறைந்த இந்தப் பொருளைப் பற்றிய ஆராய்ச்சியைத் தடை செய்தது.[6]

இந்நிலையில் தமிழ்மொழியின் பழம்பெரும் இலக்கண ஆசிரியர் தொல்காப்பியரும் நேரம் - காலம் ஆகிய இரண்டிற்கும் இடையில் இருந்த வேறுபாட்டை உணர்ந்திருந்தார் என்று அறியும் போது மனத்திற்கு இதமளிப்பதாக உள்ளது. மேலும் கால இடை நிலைகள் எப்போதுமே நேரத்தை மட்டும் காட்டாது, வேறு பொருள்களையும் உணர்த்தும் தன்மையுடையன என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். வினையியலில் உள்ள ஏழு நூற்பாக்கள் (724 - 7, 730, 732 - 3)[7] இக்கூற்றை ஆதரிப்பனவாக உள்ளன.

2. தொல்காப்பியத்தில் நேரமும் காலமும்:

இவ்வேழு நூற்பாக்களையும் விரிவாக ஆராயும் முன் தொல் காப்பியத்தைப் பற்றிய சில முக்கிய குறிப்புக்களை அறிந்துகொள்ள வேண்டும். முதலில், தொல்காப்பியர் கால இடைநிலைகளைப் பற்றிப் பெயரளவிலன்றி வேறு எவ்வகையிலும் குறிப்பிடவில்லை. இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார் (684-5). ஆனால் தொல்காப்பியம், சங்க இலக் கியம் ஆகியவற்றை மொழியியல் நோக்கில் ஆய்வோர் இவற்றில் இருவகைக் காலவேறுபாடே (இறப்பு - இறப்பல்லா காலம்) காணப் படுவதாகக் கூறுகின்றனர்.[8] ஆகவே, தொல்காப்பியர் மூன்று காலம் என்று கூறும்போது, அவர் மூவகை நேரங்களைக் குறிப்பிடு

கின்றாரேயன்றி முக்காலங்களையல்ல. இந்த மூவகை நேரக் கருத்து யெஸ்பர்ஸன் போன்ற ஆங்கில மரபுவழி இலக்கணத்தார், லேக்காஃப் (Lakoff, R.), கட்ஸ் (Katz), மெக்காலே (Mccawley) போன்ற அண்மைய மொழியியலாளர் ஆகியோர் கருத்துடன் ஒத்துள்ளது

கால இடைநிலைகளைப் பற்றிய விரிவான ஆய்வைத் தொல்காப்பியர் தராததற்குக் காரணம் எதுவாக இருந்திருக்கும்? தொல்காப்பியர் மொழியின் உருபனியல் பண்பைவிடத் தொடரியல் பண்பில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை இது குறிப்பதாக இருக்கலாம். கால இடைநிலைகளுக்கும் நேரக் குறிப்புக்கும் இடையில் 'ஒன்றற்கொன்று' என்ற சமநிலைத் தொடர்பு இல்லாமையும், கால இடைநிலைகளின் நேரமில் தன்மையும்கூடத் தொல்காப்பியரைக் கால இடைநிலைகளின் பட்டியலைத் தருவதிலிருந்து தடை செய்திருக்கலாம்.

3. நேரம் – காலம் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களின் உட்பிரிவுகள்:

தொல்காப்பியத்தில் உள்ள ஏழு நூற்பாக்களில் இரண்டு (725, 727) கால இடைநிலைகளின் நேரமில் தன்மையைப் பற்றிப் பேசுகின்றன. மற்ற ஐந்தும் கால மயக்கம் பற்றிப்பேசுகின்றன. இக் கால மயக்கமும் இருவகைக் காரணங்களால் ஏற்படுவதாகக் கூறலாம். பேசுபவரின் மனநிலையைப் பொருத்தோ, ஒரு கலப்பு வாக்கியத்தில் காணப்படும் இரு வேறு வினைகளுக்கு இடையில் உள்ள சார்பு நேரத்தைப் பொருத்தோ இம்மயக்கம் ஏற்படக்கூடும். ஐந்து நூற்பாக்களில் நான்கு (726, 730, 732, 733) பேசுபவரின் மனநிலையையும், ஒன்று (724) ஒரு கலப்பு வாக்கியத்தில் உள்ள இருவேறு விளைகளுக்கிடையில் காணப்படும் சார்பு நேரத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

ஏழு நூற்பாக்களையும் சிறிது ஆழமாக ஆராய்ந்தால் மேற்கூறிய கூற்றுக்கள் தெள்ளிதில் புலப்படும்.

3.1. வினைகளின் நேரமின்மைக் குறியீடு:

3.1.1. 725 – வது நூற்பா, முக்காலமும் உளதாய இயல்பையுடைய எப்பொருளைப் பற்றிச் சொல்லுவதென்றாலும் நிகழ்

காலத்துப் பொருள் நிலைமையையுடைய 'செய்யும்' என்னும் பொதுச் சொல்லால் சொல்ல வேண்டும் என்று கூறுகின்றது.

1. கடலில் அலை இருக்கும்
2. தண்ணீர் குளிரும்

3.1.2. 727-வது நூற்பா பின்வருமாறு:

மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வது இல்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

இந்நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார் ஒரு வகையிலும் ஏனைய மூன்று உரையாசிரியர்களும் ஒரு வகையிலும் உரையெழுதியுள்ளனர். மூன்று உரையாசிரியர்களின் உரையின்படி இந்நூற்பாவின் கருத்தாவது; "இருவினை பலவற்றுள்ளும் சிறந்த இருவினைக்கண்ணே நிகழும் வினைச்சொல்லை நோக்கித் திரிவின்றிப் பயக்கும் அதன் பண்பைக் குறித்துவரும் வினைமுதற் சொல், சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதல் இல்லாத இடத்து, நிகழும் காலத்தான் யாப்புறத் தோன்றும் பொருளை உடையதாகும்".

3. ஒருவன் தவஞ் செய்யின் துறக்கம் புகும்.[9]

இந்நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் கொடுத்துள்ள விளக்கம் ஏற்புடையதாக இல்லை. அவர்கள் தந்துள்ள விளக்கத்தில் உள்ள குறைகளைக் காண்பதற்கு, அவர்களது பதவுரைகளைக் கூர்ந்து நோக்குதல் பயனுடைத்தாக இருக்கும்.

தெய்வச்சிலையார் உரைப்படி:

மிக்கது = ஒன்றின் ஒன்று மிக்கது

வினைச்சொல் சுட்டி = பெயராகி நிற்கும் நிலையைச் சுட்டாது வினையாகி நிற்கும் நிலையைச் சுட்டி நிறறல்

அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி = (அப்பொருட்கண் மிகுதலாகிய தொழிலைக் குறியாது) அதன் இயல்பாகிய மிகுதியைக் குறித்த பாலுணர வருஞ்சொல்

செய்வதில் வழி = (அப்பாலுணர வருஞ்சொல்லின் கண்) கருத்தாவை உணர்த்தும் ஈற்றெழுத்து இல்வழி

நிகழுங் காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும் = நிகழுங் காலத்து உருபு பெறப் புலப்படும் பொருளை உடைத்து

மற்றவர்களின் உரைப்படி:

மிக்கது = இருவினைகள் பலவற்றுள்ளும் சிறந்த இருவினை

இணைச்சொல் சுட்டி = (சிறந்த இருவினையின்கண்ணே நிகழும்) வினைச்சொல்லை நோக்கி.

அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி = (அவ்வினையின்) பண்பைக் குறித்து வரும் வினைமுதற் சொல்

செய்வது இல்வழி = சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதல் இல்லாத இடத்து

நிகழும் காலத்து மெய்பெறத் தோன்றும் பொருட்டாகும்மே = நிகழ் காலத்தான் யாப்புறத் தோன்றும் பொருளை உடைத்தாம்.

தெய்வச்சிலையார் உரைப்படி 'மிக்கது' எனும் வார்த்தை ஒப்பீட்டுப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினை, பொருள்களின் பொது இயல்பைப் பற்றிக் கூறும் வாக்கியங்களில் மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். எனவே, ஒப்பீட்டுப் பொருளில் அமைந்த வாக்கியங்களும் அடிப் படையில் பொருட்களின் பொது இயல்பைக் கூறுபவையாகவே அமைந்திருக்க வேண்டும். 'ஆற்றில் நீர் மிக்கது' என்பதற்குப் பதிலாக 'ஆற்றில் நீர் மிகும்' என்று கூறமுடியாது என அவர் கூறுகிறார்; அதற்குக் காரணம் 'மிக்கது' எனும் சொல் இறந்த நேரத்தைக் காட்டுவதுபோல் 'மிகும்' என்னும் சொல் காட்டாமையே ஆகும். ஆனால் 'சுவர்க்கம் மிக்கது' என்னும் வாக்கியம் சுவர்க்கத்தின் பொதுவானதொரு இயல்பு பற்றிக் கூறுவதால், அதனைப் 'பூமியின் சுவர்க்கம் மிகும்' என்றும் கூறலாம் என்கிறார். இதிலிருந்து தெய்வச்சிலையாரும் இந்நூற்பாவில் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை நேரமில் தன்மையைப் பெற்றுள்ளது என்பதை நன்குணர்ந்துள்ளார் என்று அறியமுடிகிறது. 'சுவர்க்கம்

மிக்கது' எனும் வாக்கியத்தில் 'மிக்கது' என்பது ஒரு குறிப்பு வினையின் இயல்பைக் கொண்டுள்ளது; குறிப்பு வினைகள் தம்முள் முந்நேரப் பொருண்மையையும் கொண்டுள்ளனவாதலால், எப்போதும் நிலைக்கும் இயல்பு பற்றிக் கூறுவதற்குக் குறிப்பு வினைகள் மிகவும் பொருத்தமானவை ஆகும். எனவே, பொருட்களின் பொது இயல்பு பற்றிக் கூறும் 'ஒப்பீட்டுப் பொருளில்' அமைந்த வாக்கியங்களில் 'செய்யும்' எனும் வாய்ப் பாட்டுவினை குறிப்பு வினைகளுக்கு மாற்றாகவே பயன்படுத்தப் படுகிறது. மேலும் 'மிக்கது' எனும் சொல்லுக்குத் தெய்வச்சிலை யாரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டால் மிகச் சிறுபான்மையான வாக்கிய அமைப்புகளுக்கே இந்நூற்பா பயனுள்ளதாக இருக்கும்.

மிக்கது' என்னும் சொற்கு மற்ற உரையாசிரியர்கள் தரும் விளக்கமும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. அவர்களின் கூற்றுப்படி, 'மிக்கது' என்பது இருவினைகள் பலவற்றுள் சிறந்த இரு வினைகளைக் குறிக்கும்; இவ்வினைகள் தெய்வச் சார்புடையன வாக இருக்கும். இந்த அடிப்படையில் அவர்கள் (குறிப்பாகச் சேனாவரையர்) பின்வரும் இரு வாக்கியங்களையும் வேறுபடுத்து கின்றனர்.

4. தாயைக் கொன்றான் நரகம் புகும்

5. இக்காட்டுள் போவான் கூறை கோட்படும்

4-வது வாக்கியம் இந்நூற்பாவுக்கு எடுத்துக்காட்டாக உரை ஆசிரியரால் தரப்பட்டுள்ளது; 5-வது வாக்கியம் 730-ஆம் நூற் பாவுக்கு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது. (8.3,2.2). சேனா வரையர் இந்நூற்பாவிற்கு உரை எழுதும்போது மேற்காணும் இரு வாக்கியங்களுக்கிடையிலும் வேறுபாடு காண முயல்கிறார். முதல் வாக்கியத்தில் காணப்படும் முடிவு தெய்வ சக்தியால் விளை வதால் அது இயல்பு திரியாத தன்மையது என்றும், இரண்டாவது வாக்கியத்தில் காணப்படும் முடிவு வேறு சக்திகளால் இயல்பு திரியக்கூடிய தன்மையது என்றும் இதனாலேயே தொல்காப்பியர் இவ்விருவகை முடிவுகளையும் இருவேறு நூற்பாக்களில் அடக்கி யுள்ளார் என்றும் கூறுகிறார்.

இரு வாக்கியங்களுமே அவற்றில் காணப்படும் காரணங்களால் (தாயைக் கொல்லல், காட்டுள் போகல்) விளையக்கூடிய பொது வான முடிவுகளைக் கூறுகின்றன. இரு முடிவுகளும் பெரும்பாலும் நிகழக்கூடியனவாக இருப்பினும், அவை நிச்சயமாக நடைபெறும் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. எனவே, தெய்வ சக்தியின் உண்மையையும் இன்மையையும் வைத்து இவ்விரு வாக்கியங் களையும் வேறுபடுத்துவது நெறியாகாது.

'மிக்கது' என்பதற்குப் பெரும்பாலும் நடைபெறக்கூடிய ஒரு முடிவு என்று பொருள்கொள்ளின் அது ஏற்புடையதாய் இருக்கும்.

இந்த நூற்பாவில் உள்ள மற்ற சொற்றொடர்களுக்குத் தெய்வச் சிலையார் தவிர்த்த மற்றைய உரையாசிரியர்களின் விளக்கத்தை ஒரு சில மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளலாம். குறிப்பாகச் 'செய்வதில் வழி' என்னும் தொடருக்கு 'பொதுமையில் கூறும்போது' (impersonal instance) எனப் பொருள் கொள்ளலாம். இது 'சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதல் இல்லாத இடத்து' என்று கூறுவதற்குச் சமமாகவே உள்ளது.

எனவே, 727-வது நூற்பாவின் புதுஉரை பின் வருமாறு அமையும்: சில காரணகாரியங்களின் விளைவாகப் பெரும்பாலும் இடம்பெறக்கூடிய முடிவுகளைப் பொதுமையில் கூறும்போது, ('செய்யும்' எனும் வாய்பாட்டால் இயன்ற) நிகழுங் காலப் பொதுச் சொல்லைப் பயன்படுத்தவேண்டும்.

இந்த உரை பின்வரும் வாக்கியங்களுக்கெல்லாம் பொருந்தும்.

6. தவஞ் செய்தான் / ஒருவன் தவஞ் செய்யின் துறக்கம் புகும்
7. இக்காட்டுள் போவான் / ஒருவன் இக்காட்டுள் போனால் கூறை கோட்படும்.
8. எறும்பு முட்டைகொண்டு தெற்றியேறின் மழைபெய்யும்

3.1.3. 725, 727 ஆகிய இரு நூற்பாக்களிலுமே தொல் காப்பியர் நிகழுங் காலத்துப் பொதுச்சொல் பயன்படுத்தப்பட

வேண்டும் என்று கூறுகிறார்; உரையாசிரியர்கள் தரும் எடுத்துக் காட்டுக்களிலிருந்து, நிகழுங் காலத்துப் பொதுச் சொல் என்பது 'செய்யும்' என்னும் வாய்பாட்டால் அமைந்த வினை எனத் தெரி கிறது. இந்த 'செய்யும்' எனும் வாய்பாட்டால் அமைந்த வினை இன்றைய தமிழில் அஃறிணையைக் குறிக்கும் எதிர்கால வினையாக மட்டும் பயன்படுகிறது. மேலும், இவ்விரு நூற்பாக்களும் குறிக்கும் கூற்றுக்களிலெல்லாம் இன்றைய தமிழில் எதிர்கால வினையே பயன்படுத்தப்படுகிறது. வாக்கியம் (3) இன்றைய தமிழில் பின் வருமாறு அமையும்.

9. ஒருவன் தவஞ் செய்யின் துறக்கம் புகுவான்.

இன்றைக்கு எதிர்காலத்தை மட்டும் குறிக்கப் பயன்படும் 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினை தொல்காப்பியரால் 'நிகழுங் காலத்து மெய்நிலைப் பொதுச்சொல்' என்று குறிக்கப்பட்டுள்ளது ஒருவேளை தொல்காப்பியத்தில் இருவகைக் காலங்களே உள்ளன என்னும் கூற்றை ஆதரிப்பதாக இருக்கலாம்.

3 1.4. பழக்கத்திலுள்ள நடைமுறையொழுங்குகள், உயிரினங் களின் பொதுவான இயல்புகள், மாறாத உண்மைகள், இயற்கை நியதிகள் போன்றவை இன்றைய தமிழில் எதிர்கால வினைகளா லேயே மொழியப்படுகின்றன.

10. அவன் ஒவ்வொரு நாளும் காலையில் படிப்பான்.

11. நாய் குரைக்கும்.

12. இரண்டும் இரண்டும் நான்கு ஆகும்.

13. சூரியன் கிழக்கில் உதிக்கும்.

ஆங்கில மொழியைப் பொருத்தமட்டில், மேற்கண்ட எடுத்துக் காட்டுக்களிலெல்லாம் நிகழ்கால வினையே பயன்படுத்தப்படுகிறது.

10a. **He learns every morning.**

11a. **Dog barks.**

12a. **Two and two is four.**

13a. **The sun rises in the east.**

ஆனால் 10a, 11a, 12a ஆகிய வாக்கியங்களில் எதிர்கால வினையும் பயன்படுத்தப்படுவதுண்டு ஆங்கிலத்தில் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய இருவினைகளுமே பயன்படுத்தக்கூடுமெனினும், இத்தகைய வாக்கியங்களில் நிகழ்கால வினையே பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இத்தகைய கூற்றுக்களுக்கு எதிர்கால வினையைப் பயன்படுத்துவதே இன்றைய தமிழுக்கு அதிக பொருத்தமுடையதாய் உள்ளது. ஆயினும் இன்றைய தமிழிலும் சில சந்தர்ப்பங்களில் நிகழ்கால வினை பயன்படுத்தப் படுகிறது.

14 அவன் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகிறான்.

3.1.5 மேற்தரப்பட்ட எடுத்துக்காட்டுக்களிலெல்லாம் நிகழ்கால அல்லது எதிர்கால வினைகள் பயன்படுத்தப்பட்டிருப்பினும், அந்த வினைகள் எந்தவொரு நேரத்தையும் குறிப்பாக உணர்த்தவில்லை. இவ்வெடுத்துக்காட்டுக்களில் ஒரு குறிப்பிட்ட நேரம் குறிக்கப்படாவிடினும், எந்த அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட காலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது?

ஆங்கிலத்தில் பழமொழிகள் எதிர்வு, நிகழ்வு, இறப்பு ஆகிய முக்கால வினைகளையும் பயன்படுத்திக் கூறப்படுகின்றன என்று ராபின் லேக்காஃப் (Robin Lakoff) கூறுகிறார். இவ்வகை இயல்புக்குக் காரணங்காண முயலும் அவர் பின்வருமாறு கூறுகிறார். 'எப்போதும் உண்மையாய் உள்ள கூற்றுக்களைப் பொருத்தவரையில், ஒரு குறிப்பிட்ட செயலை எந்த நேரக் கட்டத்திலிருந்து ஒருவர் காண விரும்புகிறாரோ அந்த நேரத்தைத் தேர்ந்து எடுப்பதற்கு அவருக்கு வாய்ப்பு உண்டு. இத்தகைய கூற்றுக்களை ஒருவர் பண்டு நிரூபிக்கப்பட்டனவாய்க் காணலாம், அல்லது இவற்றின் தொடர்ச்சியாய்க் காணலாம்...'[10] அதாவது, பல்வகைக் காலங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணம், பேசுபவரின் மனநிலையே என்று அவர் கருதுகிறார்.

தமிழ் மொழிக்கும் இத்தகைய காரணம் பொருந்தும். 725, 727 ஆகிய நூற்பாக்கள் எப்போதும் உண்மையாய் உள்ள கருத்துக்களைப்பற்றியே பேசுகின்றன.[1] இத்தகைய கருத்துக்களின் முடிவற்ற

தன்மை இன்றைய தமிழர்களின் மனத்தில் பதிந்திருக்க வேண்டும்; அதனாலேயே அவர்கள் இத்தகைய கருத்துக்களைக் கூறுவதற்கு எதிர்கால வினையைப் பயன்படுத்துவதாய் இருக்கக்கூடும்.

3.1.6 பழக்கத்திலுள்ள நடைமுறையொழுங்கினைக் குறிப்பதற்குத் தமிழ் மொழியிலும் சில சமயங்களில் நிகழ்கால வினை பயன்படுத்தப்படுவதாக மேலே கூறப்பட்டது. (§) வாக்கியம் (14); ஆனால் நிகழ்கால வினை பயன்படுத்தப்படும்போது நேரஅளவில் ஒரு குறுக்கத்தையும் / வரையறையையும், எதிர்கால வினைபயன்படுத்தப்படும்போது நேரஅளவில் ஒரு வரையறையற்ற தன்மையையும் காணமுடிகிறது.

15. பரீட்சை சமயங்களில் அவன் அதிகாலையில் எழுந்து
{ படிப்பான் / *படிக்கிறான் }

16. இந்தப் பரீட்சைக்கு அவன் அதிகாலையில் எழுந்து
{ *படிப்பான் / படிக்கிறான் }

வாக்கியம் (16)-ல் ஒருவிதத் தற்காலக் குறிப்பு காணப்படுகிறது; வாக்கியம் (15) முந்நேரத்திற்கும் பொருந்தும்படியாய் அமைந்துள்ளது.

தெய்வானந்தம் பிள்ளை (1973), உலகப்பொது நியதிகளுக்கும் நிகழ்கால வினை பயன்படுத்தப் படுவதாகக் கூறிப் பின்வரும் எடுத்துக் காட்டைத் தருகின்றார்:

கடவுள் இருக்கிறார்.

இவ்வகை உதாரணங்கள் அரிதாக இருப்பினும், தமிழிலும் வெவ்வேறு காலங்களைத் தேர்ந்தெடுக்கக்கூடும் என்பதை இது காட்டுகிறது. இந்த எடுத்துக்காட்டில், எதிர்கால வினையைப் பயன்படுத்த இயலாது; கூற்றை உறுதிப்படுத்தப்படுவதற்காக இங்கு நிகழ்கால வினையைப் பயன்படுத்துவதாய் இருக்கலாம். 10, 11, 12, 13 ஆகிய வாக்கியங்களுக்கும் 'கடவுள் இருக்கிறார்' என்னும் இவ்வாக்கியத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடாவது: முன்னையவற்றில் கூறப்படும் கருத்துக்கள் தெள்ளிதில் புலப்

படக் கூடிய கருத்துக்கள்; ஆனால் பின்னதில் கூறப்படுவது மனித இனத்தால் அனுமானம் செய்யப்பட்ட தீர்க்கமான முடிபு. எனவே, பின்னதைப் பொருத்தவரை உறுதிப்பாடு செய்வது அவசியமாகிறது. நிகழ்கால வினை உறுதிப்பாட்டிற்கு பயன்படுத்தப்படுவது பற்றி பின்னர் ஆராயப்படும் (S 3.2.2).

3.2. பேசுபவரின் மனநிலை காரணமாக ஏற்படும் கால மயக்கம்:

726, 730, 732, 733 ஆகிய நூற்பாக்கள் இவ்வகையைச் சார்ந்தவை என ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இந் நூற்பாக்களைத் தனித்தனியே ஆராய்ந்தால் இக்கூற்றின் உண்மை புலப்படும்.

3.2.1. 726-ஆம் நூற்பா சொல்லப்படும் நேரத்திலோ அதையடுத்தோ நடைபெறும் ஒரு செயலை விரைவுப் பொருளுக்காக இறந்த காலத்தில் கூறலாம் எனக் கூறுகிறது. 'அ', 'ஆ' ஆகிய இருவர் வெளியே போகப் புறப்படுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்; 'அ' புறப்பட்டு முடிந்து 'ஆ' வைக்கூப்பிட்டால், 'ஆ' வந்துகொண்டிருப்பினும் சிறிது நேரத்தில் வருவதாயிருப்பினும்

இதோ வந்துவிட்டேன்

என்று கூறுவார். உரையாசிரியர்களின் எடுத்துக் காட்டுப்படி, 'வந்தேன்' என்று கூறவேண்டும். இன்றைய தமிழில், விரைவுப் பொருளுக்கு இறந்தகால வினையுடன் 'விடு' என்னும் துணை வினையும் சேர்த்தே பயன்படுத்தப்படுகிறது. மேற்காட்டிய உதாரணத்தில் வினைச்சொல் இறந்த காலத்தில் இருந்தாலும், அச்சொல்லால் குறிக்கப்படும் செயல் கூறப்படும் தருணத்திலோ அதற்குச் சற்றுப் பின்னரோ நடைபெறுவது ஆகும். 'அ' புறப்பட்டு விட்டதால் 'ஆ' விரைவில் தயாராக விரும்புகிறார்; மேலும் 'ஆ' 'அ' வைச் சமாதானப்படுத்தவும் விழைகிறார். எனவே, செயலளவில் காரியம் முடிவடையாவிடினும், 'அ' வின் மனத்தளவில் அக்காரியம் முடிவடைந்துவிடுகிறது. மொத்தத்தில், புறப்படுகின்ற செயலை விரைவில் செய்துமுடிக்கும் 'ஆ' வின் ஆர்வத்தையே, அதாவது பேசுபவரின் மனநிலையையே இது காட்டுகிறது.

3.2.2. 730-வது நூற்பா எதிர்காலத்தில் நடைபெறும் ஒரு செயலை இயற்கையின் பொருட்டும், தெளிவின் பொருட்டும் இறப்பு நிகழ்வு ஆகிய இரு காலங்களிலும் கூறலாம் என்கிறது. இது உரையாசிரியர்களின் விளக்கத்தைப் பின்பற்றியதாகும். அவர்கள் தரும் எடுத்துக்காட்டுக்கள் பின்வருமாறு:

17. இக்காட்டுட் போகிற் கூறை கோட்பட்டான்/ கோட்படும்.

18. எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது/பெய்யும்.

இவ்வகை வாக்கியங்கள் 727-ஆம் நூற்பாவுக்குள் அடங்கும் என்று முன்னர் காட்டப்பட்டது (§ 3.1.2.). இவ்வகை எடுத்துக்காட்டுக்கள் (குறிப்பாகச் 'செய்யும்' என்னும் வாய்பாட்டால் அமைந்த வினையை உடைய வாக்கியங்கள்) 727-ஆம் நூற்பாவுக்குள் அடக்கப்படுவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. இவ்வாக்கியங்களில் 'செய்யும்' என்னும் வினை நேரமில் தன்மையை உடையது; ஆனால் இந்த நூற்பாவின் (730) படி இறந்தகால, நிகழ்கால வினைகள் எதிர் நேரத்தை அவசியம் குறித்தாக வேண்டும். எனவே, 17, 18 ஆகியவற்றில் காணப்படும் நிகழ்ச்சிகளைப் பொது நியதிகளாகக் கூறும்போது, 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினையே பயன்படுத்தப்பட வேண்டும்; அப்போது அந்த வினை இயல்பாகவே நேரமில் தன்மையைப் பெறும். ஆகவே, உரையாசிரியர்களின் விளக்கம் அவ்வளவு ஏற்புடையதாக இல்லை.

எதிர் நேரச் செயலுக்கு இறந்தகால, நிகழ்கால வினைச்சொற்களைப் பயன்படுத்தும்போது அவ்விருகால வினைகளுமே இயற்கை தெளிவு ஆகிய இரு பொருள்களையும் தருகின்றனவா என்பது மற்றொரு கேள்வி.

இக்கேள்விக்குப் பதில் கூறும் முன் 'இயற்கை', 'தெளிவு' பற்றிய உரையாசிரியர்களின் கருத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

உரையாசிரியர்கள் கூற்றுப்படி, இயற்கை என்பது பெற்ற/இயல்பு முதலாயினவற்றால் உணரப்படுவது; தெளிவு என்பது நூற்றெளிவு.

உரையாசிரியர்கள் தந்துள்ள 17, 18 ஆகிய எடுத்துக்காட்டுக் களை ஆழ்ந்து நோக்கினால், இரண்டுமே ஏறக்குறைய ஒரே தன்மைத்தாய் உள்ளன. இரண்டிலுமே விதித் தொடர்களைத் (இவற்றிற்குப் பதிலாக மூலகாரணத்தைக் கொண்டிருக்கும் பெயர்த் தொடர்களும் வரலாம்) தொடர்ந்து அவற்றின் விளைவால் ஏற்படும் முடிவுகளைக் கொண்டுள்ள தொடர்கள் வந்துள்ளன. இரண்டு வாக்கியங்களுமே, அந்தந்த முடிவுகளைப் பற்றிப் பேசுபவர் கொண்டிருக்கும் உறுதியைக் காட்டுகின்றன. வாக்கியம் 17-ல் முடிவு முதலில் கூறப்படும் நிகழ்ச்சியிலேயே புதைந்து உள்ளது. காட்டுள் போவதே கூறைகோட்படுவதற்குத் தெளிவான காரணமாக உள்ளது. வாக்கியம் 18-ல் எறும்புகள் முட்டை கொண்டு தெற்றியேறுவது மழை பெய்வதற்கு நேர்க்காரணம் அல்ல; ஆனால் எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் பெரும்பாலும் அதைத் தொடர்ந்து மழை பெய்வது ஆழ்ந்து கவனிக்கப்பட்டுள்ளது. இரு வாக்கியங்களுக்கிடையிலும் இந்த ஒருமுக்கிய வேறுபாடே காணப்படுகிறது. வாக்கியம் 18-க்கு ஆழ்ந்த கவனிப்பும் கணிப்பும் தேவை. ஆனால் வாக்கியம் 17-க்கு இவையெல்லாம் தேவையில்லை. மொத்தத்தில் 'இயற்கை' என்பது 'ஒரு செயலால் இயல்பாகவே விளையக் கூடிய முடிவு'; 'தெளிவு' என்பது 'ஒன்று நடந்தால் மற்றொன்று பெரும்பாலும் நடக்கும் என்ற கணிப்பு'.

வாக்கியம் 17-ல் காணப்படுவது போன்ற கருத்துக்கள் எப்போதுமே பொதுவான கணிப்புக்களைக் குறிக்கும் பொது நியதிகளாகக் கூறப்படுவதால், அவ்வகை வாக்கியங்களில் இறந்தகால வினைகளைப் பயன்படுத்த முடியாது. வாக்கியம் 17-ல் காணப்படுவது போன்ற கருத்துக்களை ஒரு குறிப்பிட்ட எழுவாய் இன்றிப் பொதுமையில் பொது நியதியாகக் கூறும்பொழுது, 727-ஆம் நூற்பாவின் படி 'செய்யும்' எனும் வாய்பாட்டு வினையே பயன்படுத்தப்பட வேண்டும்.

17-வது போன்ற வாக்கியங்களில் ஒரு திட்டவட்டமான சூழலில் ஒரு குறிப்பிட்ட எழுவாயைக் குறித்துக் கூறும்போது, இறந்தகால வினையைப் பயன்படுத்தலாம்.

19. அந்த முரடனை எதிர்த்தால் நீ தொலைந்தாய்.

20. இந்தப் பூச்சி கடித்தால் அவன் செத்தான்.

இவ்வாக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட சூழலைச் சுட்டுவதால், 'தொலைந்தாய்' 'செத்தான்' எனும் இறந்தகால வினைகள் எதிர் நேரத்தைக் குறிக்க வேண்டுவனவாய் உள்ளன; இங்கு எதிர் பார்க்கப்படும் முடிவுகளை உறுதியாகவும் அறுதியிட்டும் கூறுவதற்கு இறந்த காலம் பயன்படுகிறது.

727-ஆம் நூற்பா கூறும் அமைப்பில் பொதுமையான கணிப்புக் கள் கூறப்பட வேண்டும் என்று முன்னரே கூறப்பட்டுள்ளது. அவ்வாறெனில், நிகழ்கால வினை எதிர் நேரத்தைக் காட்டக்கூடிய வகையில் 'தெளிவு' என்னும் சொற்குப் புதிய ஏற்புடைய பொருளைக் காணவேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப்பேரகராதி 'தெளிவு' என்னும் சொல்லுக்குப் பதினெட்டுப் பொருளைத் தருகிறது. அவற்றுள் ஒன்று 'ஆராய்ந்து கொண்ட முடிவு' என்பதாகும். 'தெளிவிலதனைத் தொடங்கார்' என்னும் 464-வது குறளை இப்பொருளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறுகிறது அந்தப்பேரகராதி. இதில் 'தெளிவு- என்பது ஒன்றனது நன்மை தீமையைத் தீர்க்க மாகச் சிந்தித்து அதைச் செய்யலாம்' என்று எடுக்கப்பட்ட நிச்சய மான முடிவைக் குறிக்கிறது; இவ்வித முடிவு தனித்த முறையிலோ மற்றவர்களுடன் கூடி ஆலோசித்தோ எடுக்கப்பட்ட முடிவாக இருக்கலாம். இதிலிருந்து 'தெளிவு' என்பது ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் எடுக்கப்படும் திடமான முடிவைக் குறிக்கிறது என்று தெரிகிறது. ஒருவர் ஒரு காரியத்தைத் தன்னால் நிச்சயமாய்ச் செய்ய இயலும் என்னும் உறுதியுடையவராய் இருந்தால், அவர்

21. நான் நாளை இதைச் செய்கிறேன்

என்று கூறுவார். இது பேசுபவரின் உறுதியைக் காட்டுவதோடு, நிகழ்கால அமைப்பில் உள்ள 'செய்கிறேன்' என்னும் சொல் எதிர் நேரத்தையும் குறித்து நிற்கிறது. பின்வரும் வாக்கியங்களின் ஏற்புடைமை இன்மையே, நிகழ்கால வினையான 'செய்கிறேன்' உறுதிப்பாட்டை உணர்த்துகிறது என்பதற்குச் சான்றாகும்.

*நான் இதை {செய்தாலும் / ஒருவேளை} செய்கிறேன்.

ஆர். லேக்காஃப் (R. Lakoff, 1970 : 846) பின்வரும் இரு வாக்கியங்களில் (a) ஏற்புடையது என்றும் (b) ஏற்புடையது அன்று எனவும் கூறுகிறார்

a) I leave tomorrow - no one can stop me

b) *I am to leave tomorrow - no one can stop me

எனவே, ஆங்கிலத்திலும் நிகழ்காலவினை உறுதிப்பாட்டை உணர்த்துவதைக் காணலாம்.

நிகழ்கால வினை எதிர் நேர வினைமையைக் குறிக்கப் பயன் படுவதை 733-ஆம் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாய்த் தந்துள்ளனர் உரையாசிரியர்கள். அந்த எடுத்துக்காட்டு வருமாறு:

இவள் நாளை வரும்

எனவே 730-ஆம் நூற்பாவில் 'தெளிவு' என்னும் சொல் உறுதிப் பாட்டைக் குறிக்கிறது என்று தயக்கமின்றிக் கொள்ளலாம்

ஆகவே, 730-ஆம் நூற்பாவின் புதிய விளக்கம் பின்வருமாறு: எதிர் நேரத்தில் நடைபெற உள்ள ஒரு செயலை, இயல்பான முடிவையும் உறுதிப்பாட்டையும் குறிப்பதற்காக, முறையே இறந்த கால வினையாலும் நிகழ்கால வினையாலும் கூறலாம்.

3.2.3 732-ஆம் நூற்பா இறந்த நேரம் எதிர்காலத்தாலும் எதிர்நேரம் இறந்த காலத்தாலும் குறிக்கப்படலாம் எனக் கூறுகிறது.

கழகப் பதிப்பான தொல்காப்பிய மூலத்தில் பின்வரும் எடுத்துக் காட்டுகள் தரப்பட்டுள்ளன.

22. இவர் இப்பொழிலில் பண்டு விளையாடுவர்.

28. நாளை வெகுண்டு வந்தான், பின் நீ என் செய்வை?

22-வது வாக்கியம் முன்பொரு சமயத்தில் வழமையாக நடை பெற்ற ஒன்றைப் பற்றிப் பேசுகிறது. எதிர்காலத்தின் இவ்விதப் பண்பாடு ஏற்கனவே குறிப்பபிடப்பட்டுள்ளது (§ 3.1.3).

23-வது வாக்கியத்தில், 'வந்தான்' என்னும் வினைச்சொல்லால் குறிக்கப்படும் செயல், கூறப்படும் சமயத்தில் நடைபெறவில்லை. 'இ' என்பவர் 'உ' என்பவரிடத்தில் ஒரு குறிக்கப்பட்ட சம்பவம் நடந்தால் நீ என்ன செய்வாய் என்று கேட்கும்போது, 'உ' என்பவர் அந்தச் சம்பவம் நிகழ்ந்தால் அப்போது பார்த்துக்கொள்ள லாம் என்று சரியான பதில் கூறாமல் தட்டிக்கழித்தால் 'இ'ஆனவர் உ-விடமிருந்து ஒரு முடிவான பதிலைப் பெறும் பேரார்வத்தில் மேற்காணும் வாக்கியத்தைக் கூறுவார். இங்கு, நடைபெறாச் சம்பவம் ஒன்று நிச்சயம் நடைபெற்றுவிட்டது போன்றதொரு உணர்வைக் கேட்பவர் மனத்தில் பதிய வைப்பதற்கு இறந்த காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது இறந்த காலம் பேசுபவரின் குறிக்கோளைத் திடமாக வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இவ் வகையான குறிக்கோள்கட்கு நிகழ்கால வினையும் பயன்படக்கூடும்:

நாளை வெகுண்டு வருகிறான், பின் நீ என் செய்வாய்?

மொத்தத்தில், நடைபெறக் கூடும் என்ற அளவில் உள்ள நிகழ்ச்சிகளுக்கு ஒருவித உறுதிப்பாட்டைக் கொடுப்பதற்கு இறந்த காலமும் நிகழ் காலமும் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரு காலங்களும் பேசுபவரின் உறுதிப்பாட்டைக் காட்டாமல், அவர் கூறும் சம்பவத்திற்கு ஒருவகை உறுதிப்பாடு கொடுக்கப்படு வதைப் பின்வரும் வாக்கியத்திலிருந்து உணரலாம்:

நாளை ஒருவேளை வெகுண்டு { வந்தான் / வருகிறான் } , பின்
நீ என் செய்வாய்?

எதிர் காலமும் இறந்த நேரமும் மயங்குதற்கு, பேராசிரியர் அகஸ்தியலிங்கம் (1975:400) பின் வரும் எடுத்துக்காட்டைத் தருகிறார்.

நீ நேற்று வருவாய் என்று எண்ணினேன்

இங்கும் 'வருவாய்' என்னும் எதிர்கால வினை இறந்த நேரத்தைக் குறிக்கிறது. நேற்று ஒரு குறிப்பிட்ட நேரத்திலோ அந்த நேரத்தை

ஒட்டியோ ஒருகாரியம் நடைபெறும் என்று எதிர்பார்த்திருந்ததால், இவ்வாக்கியத்தில் எதிர்கால வினை பயன்படுத்தப் பட்டுள்ளது.

3.2.4 733-ஆம் நூற்பா மற்றைய காலங்களும் மயங்கக் கூடும் என்று பொதுவாகக் கூறுகிறது. தொல்காப்பிய மூலம் - கழகப் பதிப்பு இறந்த நேர, எதிர் நேரச் செயல்களைக் குறிக்க நிகழ்கால வினைகள் பயன்படுவதைக் காட்டப் பின்வரும் எடுத்துக் காட்டுக் களைத் தருகிறது

24. இவள் பண்டு இப்பொழிலில் விளையாடும்

25. இவள் நாளை வரும்

24-வது வாக்கியத்தில் காணப்படுவது போன்ற சம்பவங்கள் 725, 727 ஆகிய நூற்பாக்களின் கீழ் ஆராயப்பட்டன (§ 3.1.3) 25-வது வாக்கியத்தில் காணப்படுவது, 730-ஆம் நூற்பாவின் கீழ் உறுதிப்பாட்டைக் குறிப்பதற்கு நிகழ்கால வினை பயன்படுவதைக் குறித்த நிலைமையுடன் ஒத்துள்ளது (§ 3.2.2).

தெய்வானந்தம் பிள்ளை (1978:139) இறந்த நேரத்தில் தொடர்ந்து நடைபெறும் செயல், நிகழ்கால வினையால் குறிக்கப் படுதற்கு ஓர் எடுத்துக்காட்டைத் தருகிறார். இதில் குறிப்பிட்ட அந்த வினை துணைத் தொடரில் இடம்பெறுவது ஆகும். பின்வரும் எடுத்துக்காட்டு அவர் கொடுத்துள்ள எடுத்துக்காட்டை ஒட்டி அமைந்ததாகும்.

26. நான் நேற்று வீட்டுக்குப் போகிறபோது என் தோழியைக் கண்டேன்.

'போகிறபோது' என்பதற்குப் பதிலாகப் 'போகும்போது' என்னும் வடிவத்தையும் பயன்படுத்தலாம். இந்தக் கலப்பு வாக்கியத்தில் காணப்படும் இரு வினைகளுக்கிடையிலும் உள்ள சார்பு நேரத் தினால் இங்குக் கால மயக்கம் உண்டாகிறது. எனவே, இவ்வகை வாக்கியத்தை அடுத்த உபதலைப்பின்கீழ் ஆராய்வதே பொருத்த முடையதாகும். 730-ஆம் நூற்பாவில் உறுதிப்பாட்டின் பொருட்டு எதிர் நேரத்தைக் குறிக்க நிகழ்காலம் பயன்படும் என்று குறிப்பாகச்

சொல்லியிருப்பினும், வேறு காரணங்களுக்காகவும் அதே கால- நேரங்கள் மயங்கி வரக்கூடும் என்று உணர்ந்திருந்தமையால்தான் போலும் தொல்காப்பியர் 733-ஆம் நூற்பா போன்றதொன்றையும் இயற்றியுள்ளனர்.

3.3. கலப்பு வாக்கியத்தில் கால மயக்கம்

3.3.1 724-ஆம் நூற்பா, 'செய்து' என்னும் இறந்தகால வினையெச்சம் எதிர் நேரத்தைக் குறிக்கக்கூடும் என்று கூறுகிறது.

27. அவன் புத்தகத்தை நாளை வாங்கி வருவான்.

இதில் 'வாங்கி' என்பது இறந்தகால வினையெச்சமாகும்; ஆனால் இந்த வினையினால் குறிக்கப்படும் செயல், கூறும் தருணத்தில் நடைபெற்று முடியவில்லை; அந்தச் செயல் அடுத்த நாள் நடைபெற உள்ளது. முதற்றொடரில் உள்ள 'வருவான்' என்னும் வினை, துணைத் தொடரில் உள்ள 'வாங்கி' என்னும் வினையின் காலத்தை நிர்ணயிக்கிறது. இவ்விரு வினைகளையும் பொருத்தமட்டில், 'வாங்குதல்' எனும் செயல் 'வருதல்' எனும் செயலுக்கு முன் நடைபெற்று முடியவேண்டும். எனவே, 'வருதல்' எனும் செயலைப் பொருத்தவரை 'வாங்குதல்' எனும் செயல் நடந்து முடிந்த ஒன்றாகும். இந்த இரு வினைகளுக்கிடையிலும் காணப்படும் சார்பு நேரமே, அவற்றில் ஒன்றில் ஏற்படும் கால மயக்கத்திற்கு மூலகாரணமாகும்.

3.3.2 வாக்கியம் 26-க்கும் இவ்வித விளக்கம் தரலாம். முதற்றொடரில் காணப்படும் 'கண்டேன்' என்னும் வினை இறந்த காலத்திலிருக்கத் துணைத்தொடரில் காணப்படும் 'போகிற' என்னும் வினை நிகழ்காலத்தில் உள்ளது. பின்னது நிகழ்காலத்தில் அமைந்திருப்பினும் அதனால் குறிக்கப்படும் செயல் கூறப்படும் நேரத்திற்கு முன் நடைபெற்று முடிந்த ஒன்றாகும். 'கண்டேன்' எனும் வினையால் குறிக்கப்படும் 'காணுதல்' ஆகிய செயல் நடைபெற்ற அதே சமயத்தில் 'போதல்' ஆகிய செயலும் நடைபெற்றதால், நிகழ்காலம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4. முடிவுரை:

4 1 இதுவரை கூறியதிலிருந்து 'நேரமும் காலமும்' என்பது சிக்கல் நிறைந்ததொரு தலைப்பு என்று தெரிகிறது இந்தச் சிக்கலை மனவியல், தொடரியல், பொருளியல் ஆகிய கருவிகளின் துணைகொண்டு ஆராய வேண்டும். ஆர். லேக்காஃப் (1970:848) கூறுவதாவது: 'மொழியியலுக்கு அப்பாற்பட்டன என்று சிலரால் கருதப்படும் கூறுகளையும் ஒரு கோட்பாடு கவனத்தில் கொண்டதாய் அமைய வேண்டும். அவை பேசப்படும் நேரத்திற்கும் அதனால் குறிப்பிடப்படும் நிகழ்ச்சி உண்மையில் நடைபெறும் நேரத்திற்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றிப் பேசுபவர்கள் கொண்டுள்ள ஊகங்களும், பேச்சுக்கும் குறிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கும் இடையிலுள்ள நேர இடைவெளி பற்றிப் பேசுபவர் கொண்டுள்ள உணர்வுகளும் ஆகும். பேசுபவர் எந்தக் காலத்தைப் பயன்படுத்த விரும்புகிறார் என்பது மொழிக்கு மொழி மட்டுமல்லாது ஆளுக்கு ஆளும் மாறக் கூடும் என்பது புறநிலை வாக்கியங்களில் பிரதிபலிக்கிறது ஆனால் வடிவத்திற்கும் பொருளுக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் நமது மொழியியல் அறிவிற்கு மிகவும் வேண்டப்படுவன; மேலும் வெறும் வர்ணனையோடு மட்டுமல்லாமல் சிறந்த விளக்கத்துடனும் திகழவேண்டும் என்ற நோக்கத்துடன் படைக்கப்படும் எந்த வொரு மொழியியல் கோட்பாட்டிலும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டியனவாகவும் உள்ளன.

எதனை ஒரு வலுவுள்ள மொழியியற் கோட்பாட்டின் இன்றி யமையாப் பகுதி என்று இன்றைய மொழியியலாளர்கள் கருது கின்றனரோ அதனைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொல் காப்பியர் உணர்ந்திருக்கிறார். அவர் காலமயக்கத்தைப் பற்றியும் அதன் பயன்பாட்டைப் பற்றியும் மேலோட்டமாகக் கூறியிருப்பினும் 'நேரம்-காலம்' ஆகியவற்றைப் பற்றிய சில நுணுக்கமான பண்பு களைக் கவனத்தில் கொண்டதற்கே நாம் அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்.

4 2. இறுதியாகக் கட்டுரையாளர் ஒரு கேள்வியை எழுப்ப விழைகிறார். இக்கட்டுரையில் ஆராயப்பட்ட ஏழு நூற்பாக்களையும்

ஆழ்ந்து நோக்கினால், தொல்காப்பியர் நான்கு நூற்பாக்களில் (724, 726, 730, 732) இறந்த காலத்தையும், மூன்று நூற்பாக்களில் வெளிப்படையாகவும் (725, 727, 730) ஒரு நூற்பாவில் மறை முகமாகவும் (733) நிகழ்காலத்தையும், ஒரு நூற்பாவில் (732) எதிர் காலத்தையும் குறிப்பிட்டுள்ளார் என்பதைக் காணலாம். இது தொல்காப்பியர் மூன்று காலங்களைப் பற்றியும் அறிந்திருந்தார் என்பதைக் குறிக்கிறதா? முந்நேரத்தைப்பற்றிய அவருடைய உணர்வு இவ்வேழு நூற்பாக்களிலும் நன்கு வெளிப்படுகிறது; ஆனால் இப்போதைய கேள்வி தொல்காப்பியர் காலத்தில் மூவகைக் காலவேறுபாடும் இருந்ததா என்பதே.

குறிப்புக்கள்

1. இக்கட்டுரையில் 'நேரம்', 'காலம்' ஆகிய சொற்கள் முறையே 'time', 'tense' ஆகிய பொருட்களில் கலைச்சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. ஹட்ல்ஸ்டன் (1969), கட்ஸ் (1972), லேக்காஃப், ஆர் (1970), மெக்காலே (1971).

3. கட்ஸ் (1972) பின்வருமாறு கூறுகிறார்: 'வாக்கியங்களில் நேரத் தொடர்புகளின் பொருள் வெளிப்பாட்டைப்பற்றிய ஒரு முழு மையான கோட்பாட்டைத் தர நாம் எண்ணவில்லை; மாறாக அதற் கான ஆரம்பத்தையே ஏற்படுத்த எண்ணுகிறோம். ['We do not hope to provide a comprehensive theory of the semantic representation of temporal relations in sentences, but we do hope to make a start '] (p. 306) லேக்காஃப், ஆர் (1970) பின்வருமாறு கூறுகிறார்: இதில் எந்த ஒரு கருத்துக்கும் ஒரு முழுமையான, திருப்திகரமான விளக்கத்தைத் தர நான் முயற்சி செய்யவில்லை. மாறாக, என் குறிக்கோள் பின்வருமாறு:—

இப்போதுள்ள காலப்பயன்பாட்டையும் அவ்வமைப்புகளை வருவிக் கும் முறையையும் பற்றிக்கூறும் எந்த ஒரு கோட்பாடும் குறிப்பிடத் தக்க பெரும்பகுதி தரவுக்கு (data). ஒரு நல்ல கோட்பாடு விளக்கம் தரவேண்டிய வகையில் அமையவில்லை என்பதைக் காட்டும்

வகையில் தரவுகளை ஆராய்வது ஆகும். [I have not attempted to present anything like a complete or satiofactory explanation for any of these facts. My aim was rather this: to discuss examples showing that name of the theories of tense use and derivation available at present is capable of accounting for a significant and large body of data, which any adequate theory will have to deal with'] (P. 848)

4. யெஸ்பர்ஸன் (1965) மறுபதிப்பு: ப.1:—

"It is important to keep the two concepts time and tense strictly apart. The former is common to all mankind and is independent of language; the latlter varies from language to language and is the linguistic expression of time relations, so far as these are indicated in verb forms; but in English as well as in many other languages such forms serve not only for time-relations, but also for other purposes.. ...".

5. (A) அலென் (1966) குறிப்பிடும் மரபு வழி இலக்கணத்தாரில் ஒரு சிலர் பின்வருமாறு

i) Poutsma, H. A grammar of late modern English for the use of continental, especially, the Dutch students, 5 Vols, Groningen, P. Noordhoff. 1904-1926.

ii) Etsko Kruisinga English Accidence in syntax, Part II of A Handlbook of Present-Day English, 5th ed 4 vols, Groningen, P. Noordhoff, 1931-32.

B) யெஸ்பர்ஸன் (1966) தன் முகவுரையில் பின்வருமாறு கூறுகிறார்: இந்த நூலுக்கான எழுத்துப் பிரதி 17-1-1931 அன்று அச்சகத்திற்கு அனுப்பப்பட்டது; இதனால் அதற்குப் பின் இதே பொருள் பற்றி வெளிவந்த இரண்டு நூல்களை என்னால் பயன் படுத்த முடியவில்லை. B. திர்ங்கா (B. Trnka) என்பவரின் சிறந்த 'syntax of English verb from Caton to Dryden'

(Travaux du Cercle Linguistique de Prague III) என்பதும், தொடரியல் தொடர்பான கருத்துக்களை நோக்கும் முறையும் வகையும் என்னுடையதிலிருந்து மாறுபாடு உடையதாயிருப்பினும், பல சிறந்த பயனுள்ள கருத்துக்களைக் கொண்ட ஜியார்ஜ் ஓ. கூர்ம் என்பவரின் 'syntax' (Boston & New York) என்பதும் ஆகும்.

6. ஆங்கிலத்தைப் பற்றிய மற்றைய 'அமைப்பு முறை' வர்ணனைகள் எல்லாம் நைடா (Nida) என்பவரது 'Synopsis of English Syntax' என்பதை ஒத்துள்ளன: அதாவது, பல்வேறு கிளவிகளின் பயன்பாட்டையும் பொருளையும் பற்றி அவை மிகச் சிறிதளவே கூறுகின்றன; அல்லது ஒன்றுமே கூறாமல் உள்ளன. அவை பெரும்பாலும் அக்கிளவிகளின் வடிவங்களைப் பற்றிய விளக்கங்களாகவோ, அவற்றை வகைப்படுத்தும் பாகுபாடுகளாகவோ அல்லது அவை இடம்பெறும் அமைப்பினைப் பற்றிக் கூறுபவையாகவோ, அந்த அமைப்புக்களில் அவற்றுடன் சேர்ந்து வரும் மற்றக் கிளவிகளைப் பற்றிக் குறிப்பவையாகவோ உள்ளன. பெரும்பாலும் அவற்றின் பயன்பாட்டைப் பற்றி அவற்றிற்கு வழங்கப்படும் பெயர்கள் மட்டுமே மறைமுகமாய்க் குறிப்பனவாக உள்ளன. ['Other 'structural' descriptions of English resemble Nida's 'Synopsis of English Syntax in that they say little or nothing about the meanings or uses of different items: they consist largely of descriptions and classifications of the forms of thos items, of the patterns in which they participate, and of other items which co-occur with them in those patterns. Very often the only suggestions as to the uses of such forms are to be found in labels given them'] (Allen, 1966: 42-43)

7. இக்கட்டுரையில் தரப்பட்டுள்ள நூற்பா எண்கள் கழகப் பதிப்பான (1967) தொல்காப்பிய மூலத்தைப் பின்பற்றித் தரப்பட்டவையாகும்.

8. அண்ணாமலைப் பல்கலைக்கழக உயர் ஆய்வுத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ச. அகஸ்தியலிங்கமும் திரு க. பாலசுப்பிரமணியமும் நேரடியாக வழங்கிய விவரம்.

9. இந்த எடுத்துக்காட்டு தொல்காப்பியச் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். (ப.160)

10. லேக்காஃப், ஆர், 1970 : 848

With expressions true for all times, one has a choice of the moment from which one wants to view the action: One may look at it from the view point of the cases that were already authenticated in the past; on the situation viewed from the present as ongoing and continuing; or as a continuation of these.

11. "...a theory will have to take cognizance of elements that some have considered extralinguistic; assumption made by speakers concerning relationship between the actual time of the speech - act and that of an event in the physical universe, and the perception by the speaker of the temporal gap between event and speech. The choices of tense allowed a speaker—as reflected by the possible superficial sentences that are found - may differ from language to language or even from speaker to speaker; but the distinctions of form and meaning that are made are very much a part of ourlinguistic knowledge and must be incorpo rated into any theory of linguistics that aims at being more than merely descriptive'.

துணை நூல்கள்

1. அகத்தியலிங்கம், ச. 1975 'நேரக் கிளவியும் காலக் கிளவியும், **ஏழாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை,** தொகுதி-2. பக்: 337-402, நாகர்கோயில்.

2. Allen, Robert L. 1966 *The Verb system of Present Day American English,* Mouton and Co., The Hague-Paris.

3. Curme, George O. 1931 *Syntax, Vol. III of A Grammar of English Language*, Boston D. C. Heath & Co. New York.

4. Huddleston, R. 1969 'Some observations on Tense and Deixis in English', *Language 45*: 777–804.

5. Jespersen, Otto 1961 and 1965 (Reprinted edition) *'A Modern English Grammar on Historical Principles', Part IV, Syntax*, 3rd Vol., George Allen and Unwin Ltd., London (Originally Published in 1931)

6. Katz, Jerold J. 1972. *Sementic Theory*, Harper International Edition, Harper and Row Publishers, New York, Evanston, San Francisco, London.

7. Lokoff, Robin 1970. 'Tense and its Relation to Participants', *Language 46*: 838–49.

8. McCawley, James D. 1971. 'Tense and Time Reference in English', *Studies in Linguistic Semantics* PP: 95-113, Edited by Charles J. Fillmore and D. Terence Langendhon, Holt, Rinehart and Winston Incorporation.

9. Theivanantham Pillai, K. 1973 *Contrastive Linguistics and Language Teaching*, Annamalai University, Annamalainagar, Tamilnadu.

(இந்தக் கட்டுரை சம்பந்தமாய் என் ஆசிரியராகிய பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், பேராசிரியர் செ. வை. சண்முகம், டாக்டர் ந.குமாரசாமிராஜா ஆகியோருடன் மேற்கொண்ட பல நீண்ட உரையாடல்கள் இக்கட்டுரையை மேலும் ஆழமாகவும் விரிவாகவும் சிந்தித்து எழுதுவதற்குத் துண்டுகோலாய் அமைந்தன. தங்களது பொன்னான நேரத்தை எனக்குத் தந்துதவிய அம்மூவர்க்கும் என் உளங்கனிந்த நன்றி.)

உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்பவேண்டு கிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்பு தல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டு கிறோம்.

'மொழியியல்' இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு

1. வெளியீட்டாளர் & ஆசிரியர் — டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
செயலாளர், அனைத்திந்தியத்
தமிழ் மொழியியற்கழகம்,
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் 608101

2. அச்சிட்டோர் : சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர் 608101

மொழியியல்

தொகுதி 2 எண் 4

மார்ச் – மே 1979

உள்ளுறை

	பக்கம்
மள்ளர் கையதை கூர்வாள்	
இரா. கோதண்டராமன்	1–64
பேச்சுத்தமிழ் இலங்கையிலும் தமிழகத்திலும்	
சி. ஏசுதாசன்	65–88
தொல்காப்பியரும் அகராதியும்	
தெ. மீ. காமேஸ்வரி	93–107
மொழித்திறனும் மொழி பயில்தலும்	
ந. நடராசப்பிள்ளை	109–121
தொல்காப்பியத்தில் நேரமும் காலமும்	
க. திலகவதி	123–146